Get Your Premium E-Commerce
WEBSITE &
ANDROID APP
for Just ₹Rs. 2999/-
SALE
+91 9853719337, 7436914247

தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com

MLM
SOFTWARE
Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING
Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 2 | Issue: 262 | 04-04-2025 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | • சென்னை • மதுரை • கோவை • திருச்சி

# இந்தியா மீது 27% வரி விதித்த டிரம்ப்

**சென்னை, ஏப்.4:**

அமெரிக்காவுக்கான வரி விதிப்பு மற்றும் தடைகளை கொண்டுள்ள "மோசமான" நாடுகளில் ஒன்றாக இந்தியாவை பட்டியலிட்டுள்ளது அமெரிக்கா.

இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், "இந்த சமீபத்திய நிகழ்வுகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது, இதனால் பாதிக்கப்படும் அனைத்துத் தரப்பினரிடமும் ஆலோசனை நடைபெற்று வருகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அமெரிக்காவின் வர்த்தக கொள்கையில் செய்யப்பட்டுள்ள புதிய மாற்றங்களால் உருவாகும் புதிய வாய்ப்புகள் குறித்தும் ஆய்வு செய்யப்படுகிறது," என குறிப்பிட்டுள்ளது.

பரஸ்பர வரிகள் தொடர்பாக, அமெரிக்கா மீது மற்ற நாடுகள் விதித்த வரிகளையும் அந்த நாடுகள் மீதான அமெரிக்காவின் வரியையும் ஒப்பிடும் ஒரு பெரிய விளக்கப்பட்டத்தைப் பிடித்தவாறு அமெரிக்க அதிபர் பேசினார்.

அதன்படி, பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10%, ஐரோப்பிய ஒன்றிய இறக்குமதிகள் மீது 20% வரி விதிக்கப்படும்.

அது குறித்துப் பேசியபோது, "அவர்கள் நம்மிடம் கட்டணம் வசூலிக்கிறார்கள். நாமும் அவர்களிடம் அதையே வசூலிக்கிறோம். இதற்கு யாராவது வருத்தப்படலாமா?" என்றும் டிரம்ப் கேள்வியெழுப்பினார்.

மற்றவர்களுடன் ஒப்பிடுகையில், சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் குறித்துப் பேசிய டிரம்ப், "அவர்கள் நம்மை வரிகளால் பிழிந்தெடுக்கிறார்கள். மிகவும் வருத்தமாக இருக்கிறது. இது மிகவும் பரிதாபகரமானது," என்று குறிப்பிட்டார்.

வர்த்தக கொள்கைகளைப் பொருத்தவரை, இந்தியா மிகவும் கடினமாக நடந்துகொள்வதாகவும் டிரம்ப் தெரிவித்தார். இந்திய சந்தையில் அமெரிக்க இறக்குமதிகள் போட்டியிடுவதை இந்தியாவின் வர்த்தகக் கொள்கைகள் மிகவும் கடினமாக்குவதைக் குறிப்பிட்ட அவர், "இந்தியா மிக மிக கடுமையாக நடந்துகொள்கிறது. பிரதமர் மோதி சமீபத்தில் இங்கு வந்து சென்றிருந்தார். ஒரு சிறந்த நண்பர். நான் அவரிடம் கூறினேன், நீங்கள் என் நண்பர்தான். ஆனால், நீங்கள் எங்களை சரியாக நடத்தவில்லை. அவர்கள் 52% இறக்குமதி வரி விதிக்கிறார்கள். நாம் பல ஆண்டுகளாகவும், பல தசாப்தங்களாகவும் அவர்களுக்கு இறக்குமதி வரி விதிக்கவில்லை" என்றார்.

பல தசாப்தங்களாக அமெரிக்கா மற்ற நாடுகள் மீதான வர்த்தகத் தடைகளைக் குறைத்துள்ளதாகக் கூறிய டிரம்ப், ஆனால் "அந்த நாடுகள் நமது பொருட்கள் மீது பெரியளவிலான வரிகளை விதித்து வந்தன" என்றும் தெரிவித்தார்.




அமெரிக்காவின் அறிவுசார் சொத்துகளைத் திருடுவது, நியாயமற்ற விதிகளை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விஷயங்களைச் செய்வதாக டிரம்ப் பிற நாடுகள் மீது குற்றம் சாட்டினார்.

அமெரிக்காவின் வர்த்தகப் பிரதிநிதி அறிக்கையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, "இதை நீங்கள் படித்தால் வெளிப்படையாக வருத்தமளிக்கும்" என்றும் கூறினார்.

மேற்கொண்டு பேசியவர், "ஆனால், அந்த நாட்கள் முடிவுக்கு வந்துவிட்டதாகவும்" அவர் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களுக்கு அமெரிக்கா 2.4% வரி விதிப்பதாகக் குறிப்பிட்ட டிரம்ப், "தாய்லாந்து மற்றும் பிற நாடுகள் 60% வரைக்கும் அதிகமான வரியை வசூலிப்பதாகவும், இந்தியா 70% வசூலிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட வாகனங்களுக்கு வரி விதிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆசிய நாடுகளை டிரம்ப் தொடர்ந்து விமர்சித்து வருகிறார்.

அனைத்து நாடுகளுக்கும் குறைந்தபட்சம் 10% வரி

டொனால்ட் டிரம்ப் ஏப்ரல் 2ஆம் தேதியன்று அவரது புதிய பரஸ்பர வரி விதிப்பு குறித்த அறிவிப்புகளை வெளியிட்டார். இந்த வரி விதிப்பு அமெரிக்காவின் வெற்றிக்கு வித்திடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வரி விதிப்பு ஏப்ரல் 3ஆம் தேதி நள்ளிரவு முதல் உடனடியாக அமலுக்கு வரும்.

### "மோசமான" நாடுகள் பட்டியலில் இந்தியா

ஏப்ரல் 9 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், "மோசமான குற்றவாளிகள்" என்று குறிப்பிடப்பட்ட பட்டியலில் இருக்கும் சுமார் 60 நாடுகளுக்கு பரஸ்பர வரிகளை விதிக்கப் போவதாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க பொருட்களுக்கு அதிக வரிகளையோ அல்லது வரிகள் தவிர்த்துப் பிற தடைகளையோ அல்லது அமெரிக்க பொருளாதார இலக்குகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவோ அரசு கருதும் நாடுகளுக்கு இந்த வரி விதிப்பு செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த நாடுகளின் வரிக்கு ஏற்ப விதிக்கப்படும் இந்த வரிகளைஎதிர்கொள்ளப்போகும் நாடுகள்:

| | |
|---|---|
| ஐரோப்பிய ஒன்றியம் | - 20% |
| சீனா | - 34% |
| இந்தியா | -27% |
| வியட்நாம் | - 46% |
| தாய்லாந்து | - 36% |
| ஜப்பான் | - 24% |
| கம்போடியா | - 49% |
| தென்னாப்பிரிக்கா | - 30% |
| தைவான் | - 32% |
| மலேசியா | -24% |
| வங்கதேசம் | -37% |
| பாகிஸ்தான் | -29% |
| இலங்கை | -44% |
| மியான்மர் | -44% |

சீனாவுக்கு 34%, வியட்நாமுக்கு 46%, கம்போடியாவுக்கு 49% என டிரம்ப் வரிகளை விதித்துள்ளார். இந்த விஷயத்தில் ஒப்பீட்டளவில் இந்தியாவின் நிலை மோசமில்லை என்றும் அவர் எழுதியுள்ளார்.

ஆனால், 27% வரி என்பது பிரச்னைக்குரியது எனவும் "கடும் உழைப்பு நிறைந்த ஏற்றுமதிகளை" இது கடுமையாகப் பாதிக்கும் என்றும் ஏஷியா டீகோடட் அமைப்பைச் சேர்ந்த பிரியங்கா கிஷோர் கூறுகிறார்.

இந்திய மருந்துகள் தயாரிப்புத் துறைக்கு இதில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. சுமார் 13 பில்லியன் டாலர் ஏற்றுமதி சந்தையைக் கொண்டிருக்கும் இந்திய மருந்து துறைக்கு இந்த பரஸ்பர வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எல்லைப் பாதுகாப்பு, அமெரிக்காவுக்குள் போதைப் பொருள் நுழைவதைக் கட்டுப்படுத்துவது போன்றவற்றுக்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியாக முன்பு கனடா, மெக்சிகோவுக்கு அழுத்தம் தரப்பட்டது. இந்த இரு நாடுகளையும் அதைப் பயன்படுத்தியே கையாளப் போவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

முன்னதாக, இந்த நாடுகள் மீது 25% வரி விதிப்பதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் அவற்றில் சில விலக்குகளைச் செய்யவும், இந்த வரி விதிப்பைத் தள்ளிப் போடவும் டிரம்ப் முடிவு செய்தார்.

### தமிழகத்தின் ஆடை ஏற்றுமதியில் தாக்கம் செலுத்துமா?

ஆசியாவின் பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவுக்கு அமெரிக்கா விதித்துள்ள பரஸ்பர வரியான 27% என்பது ஒப்பீட்டளவில் குறைவுதான். இது ஆடைத் துறையில் செலவு போட்டித்தன்மையில் தமிழ்நாட்டிற்குத் தெளிவான நன்மையை அளிப்பதாகக் கூறுகிறார்.

# பிரதமர் மோடிக்கு பாங்காக்கில் இந்திய வம்சாவளியினர் வரவேற்பு



**பாங்காக், ஏப்.4:**

பிரதமர் மோடி 2 நாள் அரசுமுறைப் பயணமாக தாய்லாந்து நாட்டுக்கு இன்று சென்றடைந்தார்.

பாங்காக்கில் தரையிறங்கிய பிரதமர் மோடிக்கு அந்நாட்டு அரசின் மூத்த தலைவர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பிரதமர் மோடி இலங்கை மற்றும் தாய்லாந்து நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இதன் ஒரு பகுதியாக இன்று காலை அவர் விமானத்தில் தாய்லாந்து நாட்டுக்கு புறப்பட்டு சென்றார்.

இதுகுறித்த புகைப்படங்களை எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ள மோடி, ”பாங்காக்கில் தரையிறங்கினேன். அதிகாரப்பூர்வ நிகழ்வுகளில் பங்கேற்பதிலும், இந்தியா - தாய்லாந்து இடையேயான உறவை வலுப்படுத்துவதிலும் ஆவலுடன் இருக்கிறேன்” எனப் பதிவிட்டுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது நாளை நடைபெறும் 6-வது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதமர் மோடி, தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ராவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையிலும் ஈடுபடுகிறார். தாய்லாந்தின் அரசர் மகா வஜிரலங்கோமையும் சந்திக்க உள்ளேன் என்று பிரதமர் மோடி தெரிவித்து உள்ளார்.

பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து கடல்சார் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தில் பிரதமர் மோடி இன்று மாலை கையொப்பமிடுகிறார். மாநாட்டுக்கிடையே நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒலி, வங்கதேச இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் உள்ளிட்டோரை பிரதமர் மோடி சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, இலங்கை அதிபர் அநுர குமார திசநாயகவின் அழைப்பின் பேரில் அந்நாட்டுக்கு பிரதமர் மோடி பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

இது தொடர்பான மோடியின் பதிவில், இலங்கைக்கான என்னுடைய பயணம் 4-ந்தேதி முதல் 6-ந்தேதி வரை அமையும். இந்தியாவுக்கு வருகை தந்த ஜனாதிபதி அனுரா குமர திசநாயகேவின் பயணம் வெற்றியடைந்ததன் தொடர்ச்சியாக என்னுடைய இந்த பயணம் அமைகிறது. இந்தியா மற்றும் இலங்கை இடையேயான பன்முக தன்மை கொண்ட நட்புறவை பற்றி நாங்கள் மறுஆய்வு செய்து, ஒத்துழைப்புக்கான புதிய வழிகளை பற்றி ஆலோசனை மேற்கொள்வோம் என அவர் தெரிவித்து உள்ளார்.

## இன்றைய பஞ்சாங்கம்

**04.04.2025 (பங்குனி 21)**
**வெள்ளிக்கிழமை**

திதி:
இன்று அதிகாலை 3.46 வரை சஷ்டி பின்பு சப்தமி.

நட்சத்திரம்:
இன்று காலை 11.30 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை

யோகம்:
இன்று அதிகாலை 5.04 வரை சௌபாக்யம் பின்பு சோபனம்.

கரணம்:
இன்று அதிகாலை 3.46 வரை தைதுலம் பின்பு மாலை 3.01 வரை கரசை பின்பு வணிசை.

அமிர்தாதி யோகம்:
இன்று காலை 6.09 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சூரிய உதயம் : 6.10

சந்திராஷ்டமம் :
இன்று காலை 11.30 வரை விசாகம் பின்பு அனுஷம்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# வக்பு வாரிய சட்டத்திருத்தத்திற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்



**மு.க.ஸ்டாலின்**

**சென்னை, ஏப். 4:**

பாராளுமன்ற கூட்டுக்குழு பரிந்துரைத்த திருத்தங்களுடன் வக்பு வாரிய திருத்த மசோதா நேற்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. 12 மணி நேர விவாதத்துக்கு பின்னர் நள்ளிரவில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில் மசோதாவுக்கு 288 ஆதரவாக வாக்குகளும், எதிராக 232 வாக்குகளும் பதிவாகின. இதையடுத்து வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியதற்கு கண்டனம் தெரிவித்து தி.மு.க. மட்டுமல்லாமல் தி.மு.க. கூட்டணி கட்சியினரும் கருப்பு பேட்ஜ் அணிந்து அவைக்கு வந்துள்ளனர்.

இந்நிலையில் மக்களவையில் வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதற்கு சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்தார்.

சட்டசபையில் முதலமைச்சர் கூறியதாவது:

*வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதா எதிர்க்கப்பட வேண்டியது மட்டுமல்ல முழுமையாக திரும்பப்பெற வேண்டியது.

*சில கட்சிகள் துணையுடன் நிறைவேற்றப்பட்ட வக்பு சட்ட மசோதா இந்திய அரசியலமைப்பு கட்டமைப்பின்மீது நடத்தப்பட்ட தாக்குதல்.

*பெரும்பாலான கட்சிகள் எதிர்த்த நிலையில் சில கட்சிகளின் துணையுடன் அதிகாலை 2 மணிக்கு மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

* சர்ச்சைக்குரிய சட்டத்திருத்தத்திற்கு எதிராக தி.மு.க. சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

*வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை சட்டப்பூர்வமாக எதிர்த்து வெல்வோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கேள்வியை நாங்கள் கேட்கிறோம் பதிலை நீங்கள் சொல்லுங்கள்
தமிழ்நாடு இ பேப்பர்.காம் வழங்கும் சூப்பரான பரிசை வெல்லுங்கள்...!
இன்றைய கேள்வி
கால்நடை மருத்துவ ஆலோசகர் தற்காலிக காலிப் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்
இந்த செய்தி எந்த பக்கத்தில் இடம்பெற்றுள்ளது என கண்டுபிடிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து தக்க சன்மானம் வழங்கப்படும்.
நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய
WhatsApp no.8122664699



நேற்றைய இதழில் கேட்கப்பட்ட கேள்விக்கு சரியான விடை அளித்த வாசகர்
**R.Hema**
53, North Chitrai veethi ,
Srirangam, 620006.

## திருக்குறள் குறள்-218

**இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார் கடனறி காட்சி யவர்**



ஒப்புரவு அறிந்து ஒழுதலாகியத் தன் கடமை அறிந்த அறிவை உடையவர், செல்வ வளம் இல்லாத காலத்திலும் ஒப்புரவுக்குத் தளர மாட்டார்.

## சிந்திக்க ஒரு நொடி



உறக்கமும்
இரக்கமும் அளவோடு
இருக்கவேண்டும்
உறக்கம் அதிகமானால்
சோம்பேறி.இரக்கம்
அதிகமானால்
ஏமாளி.

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

### நாகர்கோவில் மேயர் மகேஷை மாணிக்கமாலை கலைஞர்கள் சந்தித்து நன்றி



குமரி மாவட்டம் தோவாளை மாணிக்கமாலைக்கு புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றுள்ளதையொட்டி, நாகர்கோவில் மேயர் மகேஷை மாணிக்கமாலை கலைஞர்கள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

### முத்துமாரியம்மன் கோவில் பங்குனி உத்திர திருவிழா



ராமநாதபுரம் மாவட்டம் கமுதி முத்துமாரியம்மன் கோவில் பங்குனி உத்திர திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் துவங்கியது.

### திமுக எம்.பி.க்கள் கருப்பு உடை அணிந்து ஆர்ப்பாட்டம்



வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை எதிர்த்து நாடாளுமன்றம் முன் திமுக எம்.பி.க்கள் கருப்பு உடை அணிந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### மத்திய மாவட்ட விவசாய அணி மாவட்ட செயலாளர் ஜி.ஜெயம் தங்கமணி 56 வது பிறந்தநாள் விழா



திருவள்ளூர் அடுத்த பேரத்தூர் பகுதியை சேர்ந்த திருவள்ளூர் மத்திய மாவட்ட விவசாய அணி மாவட்ட செயலாளரும் சமூக சேவகருமான பேரத்தூர் ஜி.ஜெயம் தங்கமணி அவர்களின் 56 வது பிறந்தநாள் விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட அதிமுக செயலாளருமான பா. பென்ஜமினை நேரில் சந்தித்தார். அப்பொழுது முன்னாள் அமைச்சர் பா. பெஞ்சமின் ஜி.ஜெயம் தங்கமணி அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்தினார்.

# வந்தவாசி ஸ்ரீரங்கநாத பெருமாள் பிரம்மோற்சவ கொடியேற்றம்





**வந்தவாசி, ஏப் 04:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீரங்கநாயகி தாயார் சமேத ஸ்ரீ ரங்கநாத பெருமாள் கோவிலில் பங்குனி பிரம்மோற்சவ திருவிழாவானது கருட கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது. இந்த வைபவத்தில் மூலமூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. மேலும் உற்சவ மூர்த்திகளுக்கு மலர் மாலைகள் சாற்றப்பட்டு, மேளதாளத்துடன் மகா தீபாராதனை நடைபெற்றது.

பிறகு வேத மந்திரங்கள் முழங்க கருடக் கொடியானது ஏற்றப்பட்டு, தீபாராதனை காட்டப்பட்டது.

இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது

**பா.சீனிவாசன்,வந்தவாசி.**

### கபாலீஸ்வரர் கோவில் பங்குனி திருவிழா கொடியேற்றம்



சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் பங்குனி திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் துவங்கியது.

### தமிழ்நாடு அரசு அனைத்துதுறை ஓய்வூதியர் சங்கத்தின் திருவண்ணாமலை மாவட்ட செயற்குழு கூட்டம்





தமிழ்நாடு அரசு அனைத்துதுறை ஓய்வூதியர் சங்கத்தின் திருவண்ணாமலை மாவட்ட செயற்குழு கூட்டம் 03.04.2025அன்று காலை 11மணியளவில் திருவண்ணாமலை கிராம நிருவாக அலுவலர் சங்க கட்டிடத்தில் மாவட்ட தலைவர் ப.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

# வைத்தீஸ்வரன்கோவிலில் நரி ஓட்ட திருவிழாவில் விளையாடிய யானை

**சீர்காழி, ஏப். 4:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா வைத்தீஸ்வரன்கோயிலில் தையல் நாயகி சமேத வைத்தியநாத சுவாமி திருக்கோயில். இந்த கோவிலில் பிரமோற்ச்சவ திருவிழா கடந்த 1ம் தேதி துவங்கியது நேற்று நாய் ஓட்டம் நரி ஓட்டம் எனும் யானை ஓடும் ஐதீக நிகழ்ச்சி நடைபெறும்.

நரி ஓட்ட வைபவம் முருகபெருமானின்தந்தையாகிய வைத்தியநாதசுவாமியும், தாயாகிய தையல்நாயகி அம்மனும் தீர்த்த வாரிக்காக வீதியுலா செல்லும் போது ஆலயத்தில் தனியாக இருக்கும் முருக பெருமானுக்கு விளையாட்டு காட்டுவதற்காக யானை ஓடிவந்து, ஓடிவந்து வணங்கி விளையாடுவது ஐதீகம், பிரம்மோற்சவ



விழாவின் மூன்றாவது நாளான பரிவாரங்களுடன் அம்பாள் சுவாமி தீர்த்தவாரிக்கு புறப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து சுவாமிகள் வீதியுலா செல்லும் வரை அமைதியாக நிற்க்கும் யானை, பின்னர் முருக பெருமான் மயில் வாகனத்தில் எழுந்தருளும் போது அதிவேகமாக ஓடி, ஓடி மீண்டும் திரும்பி ஓடிவந்து முருகபெருமானை வணங்கி விளையாடியது. நரி ஓட்ட வைபவம் என்று அழைக்கப்படும் யானை ஓடும் இக்காட்சியை ஏராளமான பக்தர்கள் கண்டு தரிசனம் செய்தனர். அதனை தொடர்ந்து அஸ்திரதேவர், விநாயகர், அம்பாள், சுவாமி, சண்டிகேஸ்வரர் வீதியுலா வந்தனர்.

# சர்வதேச குழந்தைகள் புத்தக தினத்தை முன்னிட்டு வாசிப்பு போட்டி



**கந்தர்வக்கோட்டை,ஏப் 04:** புதுக்கோட்டைமாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சர்வதேச குழந்தைகள் புத்தக தினத்தை முன்னிட்டு வாசிப்பு போட்டி நடைபெற்றது. தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி தலைமை வகித்தார்.

நிகழ்வினை தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை ஒன்றிய செயலாளரும் , பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா ஒருங்கிணைத்தார். ஆறாம் வகுப்பு மாணவர்கள் கலந்து கொண்ட வாசிப்பு போட்டியில் மாணவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்களின் வரிசையில் புலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், சின்ன மருது, பெரிய மருது உள்ளிட்ட நூல்களும், உதயசங்கர் எழுதிய மாயக்கண்ணாடி, விஞ்ஞானி வாழ்வினிலே என்ற தலைப்பில் சுப்பிரமணியம் சந்திரசேகர், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், கலிலியோ கலிலி, தாமஸ் ஆல்வா எடிசன், எம் எஸ் சுவாமிநாதன், தும்பிக்கை வந்தது எப்படி, பாரதியார் கவிதைகள், வண்ணத்துப்பூச்சி சொன்ன கதை, குரல் கொடுக்கும் வானம்பாடி, உலகம் போற்றும் மேதைகள், அறிவியல் பாடல்கள், தரங்கம்பாடி தங்க புதையல், தமிழ் நாவல் உலகின் தந்தை மாயூரம் வேதநாயகம்பிள்ளை,வேடிக்கை விடுகதைகள், சிந்திப்போம், அப்துல் கலாம் அவர்களின் வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட நூல்களை மாணவ மாணவிகள் போட்டி போட்டு வாசித்தனர். விரைவில் புத்தகத்தை வாசித்து முடிக்கும் மாணவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டப்பட்டது.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### புதுச்சேரி தேசமுத்து மாரியம்மன் கோயிலுக்கு ஒரு கால பூஜைக்காக ரூ.20,000

**அனிபால் கென்னடி ஏம்எல்ஏ வழங்கினார்**



**புதுச்சேரி, ஏப்.4:** புதுச்சேரி தேசமுத்து மாரியம்மன் கோயிலுக்கு ஒரு கால பூஜைக்காக ரூ.20,000 அனிபால் கென்னடி ஏம்எல்ஏ வழங்கினார்.

புதுச்சேரி அரசின் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள நேத்தாஜிநகரில் அமைந்துள்ள ஸ்ரீ தேசமுத்துமாரியம்மன் ஆலயம் கோயிலுக்கு ஒரு கால பூஜைக்காக 20,000 (இருபதாயிரம்) ரூபாய் காசேலையை உப்பளம் தொகுதி திமுக சட்டமன்ற உறுப்பினர் அனிபால் கென்னடி அவர்கள் கோவில் நிர்வாகிகளிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கோயில் அறங்காவல் நிர்வாகிகள் மற்றும் உப்பளம் தொகுதி துணை செயலாளர் ராஜி, கிளை செயலாளர்கள் சந்துரு, இருதயராஜ், முரளி, ராகேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

# தெத்தூர் மேட்டுப்பட்டி கிராமத்தில் உச்சி மாகாளியம்மன் கோவில் பொங்கல் உற்சவ திருவிழா

**அலங்காநல்லூர், ஏப்.4.:** மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள தெ.மேட்டுப்பட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ உச்சி மாகாளியம்மன் கோவில் 44ம் ஆண்டு பங்குனி பொங்கல் உற்சவ விழா நடைபெற்றது.

மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில் உலக நன்மை வேண்டி அம்மனுக்கு திருவிளக்கு பூஜை,சுமங்கலி பூஜை நடைபெற்றது. தொடர்ந்து அம்மனுக்கு கரகம் அலங்கரிக்க சென்று அம்மன் வீதி உலா வருதல் நடைபெற்றது.

முளைப்பாரி அழைத்தலுடன் அம்மனுக்கு பக்தர்கள் பொங்கல் வைத்து கிடாய் வெட்டுதல், மாவிளக்கு,தீச்சட்டி எடுத்தல் உள்ளிட்ட நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்ச்சிகள்



நடைபெற்றன.

இதற்கான ஏற்பாடுகளை தெ.மேட்டுப்பட்டு அகமுடையார் சமுதாயத்தினர் மற்றும் மன்னர் மருதுபாண்டியர் இளைஞர் பேரவை முக்குலத்தோர் நல சங்கம் உட்பட கிராம பொதுமக்கள் செய்திருந்தனர் .

# நிலையான கரும்பு சாகுபடி குறித்து வேளாண் மாணவர்கள் விழிப்புணர்வு

**தென்காசி,ஏப்.4:** தென்காசி மாவட்டத்திற் குட்பட்ட பகுதியில் கிள்ளிகுளம் வ.உ.சி வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 2025 கல்வியாண்டில் பயிலும் இளங்கலை இறுதி ஆண்டு மாணவிகள், திவிஜா, ஹேமாவதி, கிஷோபா, பூஜா, பிரபாவதி, பிரதீபா ,ராஜபிரியா, ரஞ்சிதா, சுவேதா ஆகியோர் கிராமப்புற வேளாண் பயிற்சி அனுபவம் பெற்று வருகின்றனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் தேரடிமணி தலைமையில் பேராசிரியர்கள் காளிராஜன், ஆறுமுகசாமி, கவிதா புஷ்பம்,ஆகியோரின் வழிகாட்டுதலின் பெயரில் சிவகிரி வட்டத்தில் கரும்பு சாகுபடியில் புதிய தொழில்நுட்பமான செம்மை கரும்பு சாகுபடி உறுதிப்படுத்தும் நோக்கில், வேளாண் மாணவர்கள் சமீபத்தில் விவசாயிகளுக்கு





விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர்.

இந்த நிகழ்வில், ஒற்றை நாற்று முறை, அதிக இடைவெளி , ஊடுபயிர் முறை,இயற்கை உரங்கள் பயன்பாடு, நீர் மேலாண்மை, மண் நிலைத்தன்மை பாதுகாப்பு, மற்றும் புதிய தொழில்நுட்பங்களை கொண்டு பயிர் விளைச்சலை மேம்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு விளக்கப் பட்டது.

# பிரபல போர்ப்ஸ் இதழ் வெளியிட்ட கோடீஸ்வரர்கள் பட்டியலில் 3-வது இடத்தில் இந்தியா



**வாஷிங்டன், ஏப்.4:**

*2025-ம் ஆண்டுக்கான மெகா கோடீஸ்வரர்கள் (பில்லியனர்கள்) பட்டியலை போர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது. இதில், 902 பில்லியனர்களுடன் அமெரிக்கா முதலிடத்திலும், 200 பில்லியனர்களுடன் இந்தியா 3-வது இடத்திலும் உள்ளன.*


*ஒவ்வொரு ஆண்டும் உலக கோடீஸ்வரர்களின் பட்டியலை அவர்களது சொத்து மதிப்பின் அடிப்படையில் ஆய்வு செய்து போர்ப்ஸ் இதழ் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், அமெரிக்காவில் கடந்தாண்டில் 813-ஆக இருந்த பில்லியனர்கள் எண்ணிக்கை நடப்பாண்டில் 902-ஆக அதிகரித்துள்ளது. இதன் மூலம், மெகா கோடீஸ்வரர்களை கொண்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. எலான் மஸ்க் (342 பில்லியன் டாலர்), மார்க் ஸுகர்பெர்க் (216 பில்லியன் டாலர்), ஜெப் பெசோஸ் (215 பில்லியன் டாலர்) ஆகியோர் இந்த பட்டியலில் முன்னிலையில் உள்ளனர்.*

*இதற்கு அடுத்தபடியாக, சீனா 450 பில்லியனர்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. இவர்களின் சொத்து மதிப்பு 1.7 டிரில்லியன் டாலர். பைட் டான்ஸ் நிறுவனர் 65.5 பில்லியன் டாலருடன் முதலிடம் வகிக்கிறார்.*

*அமெரிக்கா, சீனாவைத் தொடர்ந்து இந்த பட்டியலில் இந்தியா 205 பில்லியனர்களுடன் இந்தாண்டு மூன்றாவது இடத்தில் உள்ளது. கடந்தாண்டை விட நடப்பாண்டில் 5 பேர் பில்லியனர் இந்த பட்டியலில் புதிதாக இடம்பிடித்துள்ளனர். இதில், முகேஷ் அம்பானி (92.5 பில்லியன் டாலர்) , கவுதம் அதானி (56.3 பில்லியன் டாலர்) முதல் இரண்டு இடங்களில் உள்ளனர். மெகா கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம்பெற்றவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் அமெரிக்கா, சீனா, இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

*சர்வதேச சொத்து மதிப்பு கணிசமாக அதிகரித்ததையடுத்து, நடப்பாண்டில் பில்லியனர்களின் எண்ணிக்கை 3,000-த்தை தாண்டியுள்ளது. இவர்களின் ஒட்டுமொத்த சொத்து மதிப்பு 16.1 டிரில்லியன் டாலர் ஆகும்.*

## புதுமை தொழில்நுட்பத்தில் உருவான நாட்டின் முதல் 3டி பிரின்ட் பங்களா



**புனே, ஏப்.4:**

ஒவ்வொரு செங்கலாக எடுத்து வைத்து வீடு கட்டும் முறையெல்லாம் மாறி, 3டி பிரின்ட் முறையில் கான்கிரீட் கலவையால் வீடு அச்சிடப்படும் புதுமை தொழில்நுட்பம் வந்துவிட்டது. சென்னையைச் சேர்ந்த ட்வாஸ்டா இன்ஜினியரிங் என்ற ஸ்டார்ட் அப் நிறுவனத்துடன் இணைந்து, கோத்ரேஜ் ப்ராப்பெர்டிஸ் நிறுவனம் புனேவில் 3டி பிரின்ட் பங்களாவை கட்டியுள்ளது. இந்த வீட்டின் வீடியோவை இஸ்டாகிராமில் வெளியோகி காண்போரை கவர்ந்து வருகிறது. 2038 சதுர அடியில் உருவாக்கப்பட்ட இந்த வீட்டின் கட்டுமானம் 4 மாதத்தில் முடிந்துள்ளது. “இந்த வீடு கட்டப்படவில்லை. மிகப் பெரிய அச்சு இயந்திரத்தை பயன்படுத்தி, கான்கிரீட் கலவை மூலம் இந்த வீடு அச்சிடப்பட்டுள்ளது” என்கிறார் இதன் திட்ட இயக்குனர். கட்டிட வடிவமைக்கு ஏற்றபடி கான்கிரீட் கலவையை நிரப்பி இந்த கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது. வெளிப்புற சுவர்களில் இரண்டு அடுக்குகள் உள்ளன. இதன் நடுவே இருக்கும் இடைவெளி மூலமாக பைப்கள், வயர்கள் பொருத்தப்படுகிறன. இந்த 3டி பிரின்ட் சுவர்கள் வீட்டிற்குள் வெப்பநிலையை சீராக வைக்கிறது. இதன் மூலம் மின்சார உபயோகமும் குறையும். இந்த புதுமையான 3டி பிரின்ட் தொழில்நுட்பம் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல் நவீன வீடுகளை கட்ட உதவுகிறது. இந்த வீடியோவை பார்ப்பவர்கள், 3டி பிரின்ட் தொழில்நுட்பம் வியக்கவைக்கிறது என புகழ்கின்றனர்.

## 500 ஆவின் பாலகங்கள் முதல் கால்நடை பராமரிப்பு கடன் வரை - பால்வளத் துறையின் முக்கிய அறிவிப்புகள்

**சென்னை, ஏப்.4:**

*ஆவின் விற்பனை முகவர்களின் நலன் கருதி அவர்களின் பங்களிப்புடன் “ஆவின் விற்பனை முகவர்கள் நல நிதி” உருவாக்கப்படும் என்று பேரவையில் பால்வளத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் அறிவித்தார். சட்டப்பேரவையில் பால்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் பேசினர். அதற்கு பதிலளித்து பால்வளத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் பேசி, புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.*

*>ரூபாய் 9.34 கோடி மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலின் தரத்தினை மதிப்பீடு செய்து உடனுக்குடன் ஒப்புகைச்சீட்டு வழங்கி கண்காணிக்க ஏதுவாக 1437 கிளவுட் பால் பகுப்பாய்வு கருவிகள் நிறுவப்படும்.*

*>ரூபாய் 6.45 கோடி மதிப்பீட்டில் பாலில் கலப்படத்தை கண்டறியும் 129 நவீன அகச்சிவப்பு பகுப்பாய்வு கருவிகள் வழங்கப்படும்.*

*> ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் பால் மற்றும் பால் உபபொருட்களின் விற்பனையை அதிகரிக்க 500 ஆவின் பாலகங்கள் புதியதாக தொடங்கப்படும்.*

*> கூட்டுறவுச் சங்கங்களில் பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு ரூபாய் 2000 கோடி மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்புக் கடன் வழங்கப்படும்*

*>ரூபாய் 2.40 கோடி மதிப்பீட்டில் 14 மாவட்ட ஒன்றியங்களில் 30 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் புதுப்பிக்கப்படும்.*

*>ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் தரமான பால் கொள்முதல் செய்யத் தேவையான பால் பரிசோதனை உபகரணங்கள் 165 பால் தொகுப்பு குளிர்விப்பு மையங்களுக்கு வழங்கப்படும்.*

*> ரூபாய் 2.23 கோடி மதிப்பீட்டில் மாதவரத்தில் உள்ள மாநில மைய ஆய்வகம் கூடுதல் உபகரணங்களுடன் மேம்படுத்தப்படும்.*

*> ரூபாய் 2.63 கோடி மதிப்பீட்டில் 525 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் கூட்டுறவுச் கணினி மயமாக்கப்படும்.*

*>ரூபாய் 72 லட்சம் மதிப்பீட்டில் கறவை மாடுகளுக்கான பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்ய பால் உற்பத்தியளர்களுக்கு தீவன விதைகள் வழங்கப்படும்.*

*> ரூபாய் 2.38 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம், வேலூர், மாதவரம் ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி நிலையங்களில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.*

*> ரூபாய் 1.94 கோடி செலவில் உம்பளாச்சேரி இன பசுமாடுகளின் மரபணு மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்தும் நோக்கில் தேசிய பால் பதிவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.*

*> ரூபாய் 58 லட்சம் மதிப்பீட்டில் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் கணினி மயமாக்கப்படும்.*

*>ரூபாய் 60 லட்சம் மதிப்பீட்டில் கறவை மாடுகள் பராமரிப்பு குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சிகள் 12000 பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும்.*

*>ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட அளவில் சிறந்த மூன்று கறவை மாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்படும்.*

*> ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த கருத்தரங்குகள் நடத்தப்படும்*

*> ரூபாய் 2.10 கோடி மதிப்பீட்டில் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க 600 குளிர்சாதன பெட்டிகள் வழங்கப்படும்.*

*>ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் செயற்கை முறை கருவூட்டல் பணியை சிறப்பாக செயல்படுத்தும் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.*

*> தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வகை சேவை மையங்களாக உருவாக்கப்படும், என்பது உள்ளிட்ட புதிய அறிவிப்புகளை அமைச்சர் அறிவித்தார்.*

# பசுமை மீன்பிடி துறைமுகங்கள் முதல் சேட்டிலைட் போனுக்கு மானியம் வரை - மீன்வளத் துறை முக்கிய அறிவிப்புகள்

**சென்னை, ஏப்.4:**



மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் படகுகளுக்கு 200 செயற்கைக்கோள் தொலைபேசிகள் வாங்கிட 80 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்று பேரவையில் கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அறிவித்தார். சட்டப்பேரவையில் கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மானியக் கோரிக்கைமீதானவிவாதத்தில் உறுப்பினர்கள் பேசினர். அதற்குபதிலளித்துஅமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் பேசி, புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

› மீனவ மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்கு நுண்கடன் வழங்கிட ஏதுவாக 25 கோடி ரூபாய் மூலதனத்தில் ‘அலைகள்’ திட்டம் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்படும்

› காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் வகையில் 16 கடலோர மீனவ கிராமங்கள் 32 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

› மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி. கன்னியாகுமரி மாவட்டம் தேங்காப்பட்டணம் மற்றும் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகங்கள் 45 கோடி ரூபாய் செலவில் “பசுமை மீன்பிடி துறைமுகங்களாக” மேம்படுத்தப்படும்.

› நாட்டின மீன் இனங்களை பெருக்கி பாதுகாத்திட 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் ஆறுகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படும் .

› தரமான மீன் மற்றும் மீன் உணவு பொருட்களை நுகர்வோருக்கு நியாயமான விலையில் வழங்கிட, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தினால் “கயல்” திட்டம் தொடங்கப்படும்.

› பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களின்மீன்பிடித்திறனை மேம்படுத்திடும் வகையில் 2,000 வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரங்கள் வாங்கிட 10 கோடியே 80 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

› திருவள்ளூர் மாவட்டம், அவுரிவாக்கம் கீழ்குப்பம் மற்றும் வல்லம்பேடுகுப்பம் கிராமங்களில் புதிய மீன் இறங்குதளங்கள் 9 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

› செங்கல்பட்டு சதுரங்கப்பட்டினம் மீனவ கிராமத்தில் புதிய மீன் இறங்குதளம் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

› செயற்கை முறை கருவூட்டல் பணிகள் தங்கு தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்யும் விதமாக கால்நடை பெருக்கம் மற்றும் தீவனஅபிவிருத்திஅலகுகளில் உறைவிந்து சேமிப்பு மற்றும் விநியோகத்திற்குத் தளவாடப் பொருட்கள் கொள்முதல் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் 13. 19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்

› மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் படகுகளுக்கு 200 செயற்கைக்கோள் தொலைபேசிகள் வாங்கிட 80 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

› கடலூர் மாவட்டம், புதுக்குப்பம் மீனவகிராமத்தில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம் 11 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

› மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் இருப்பு விவரம், விலை, மற்றும் சந்தைநிலவரம் ஆகிய தகவல்களை பயனீட்டாளர்கள் தெரிந்துகொள்ள ஏதுவாக “இ-மீன்” வலைதள சேவை 50 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

› மயிலாடுதுறை மாவட்டம், பெருமாள் பேட்டை மீனவர் கிராமத்தில் 4 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும்.

› தீவிர மீன் வளர்ப்பு முறையில் நீர்த்தேக்கங்களில் மிதவைக் கூண்டுகள் அமைத்து மீன் உற்பத்தியை அதிகரித்திடும் திட்டம் 7 கோடியே 70 லட்சம் ரூபாய் செயல்படுத்தப்படும் செலவில் செயல்படுத்தப்படும்.

› திருநெல்வேலி மாவட்டம், பெருமணல் மீனவகிராமத்தில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

› அலங்கார மீன் சந்தைப்படுத்துதலை உற்பத்தி மற்றும் மேம்படுத்திட அலங்கார மீன் உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படும்.

› தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மீன்வள கண்காட்சிகள் 74 லட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

› சாத்தனூர், மஞ்சளாறு, வைகை அணை, அகரம் உள்ளிட்ட அனைத்து அரசு மீன் விதைப்பண்ணைகள் 6 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

› சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த கடலோர மீனவகிராமங்களில், உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள விரிவான தொழில்நுட்ப சாத்தியகூறுகளை ஆய்வு செய்திட ஏதுவாக 5 கோடி ரூபாய் “சுழல் நிதி” உருவாக்கப்படும், என்பது உள்ளிட்ட அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
8122664699



## நலம் தரும் மருத்துவம்

### கோடை காலத்திற்கு ஏற்ற சில உணவுகள்!

*கோடை காலம் துவங்கியுள்ள நிலையில் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பலர் வெப்பத்தின் காரணமாக பாதிக்கப்படுகின்றனர். வெப்பம் வாட்டி வதைப்பதால், உடலை இயற்கையாகவே குளிர்ச்சியாக வைத்திருப்பது மற்றும் வெப்ப நோய்களைத் தடுப்பது மிகவும் முக்கியமானது. கோடை காலத்தில் மனித உடலுக்கு அடிக்கடி நீரேற்றம் தேவைப்படுகிறது. இதனால் அதிக அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். அந்த வகையில், கோடை காலத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய சில உணவுகளை இங்கு பார்க்கலாம்.*

*மோர் கோடைகால சிறந்த பானமாக பார்க்கப்படுகிறது. மோர் நம்முடைய தாகத்திற்கு உகந்த பானமாக இருக்கும். மோரில் உள்ள லாக்டிக் அமிலம் செரிமானத்தை மேம்படுத்துவதுடன் குடலுக்கு மிகுந்த குளிர்ச்சியை தருகிறது. மேலும் மோரில் புரதம், கால்சியம், விட்டமின் பி12, ரிபோஃபிளேவின் மற்றும் பாஸ்பரஸ் ஆகிய சத்துக்கள் உள்ளன. மோர் நம் உடலில் நீர்ச்சத்தை தக்க வைக்க உதவுகிறது. மோரில் உள்ள கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் ஆகிய சத்துக்கள் நம் எலும்புகளை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுகிறது. குறைந்த கலோரி கொண்ட மோர் அருந்துவதால் நம் உடல் எடை குறையும்.*

***சிட்ரஸ் பழங்கள்:** ஆரஞ்சு, எலுமிச்சை, அன்னாசி, முலாம்பழம் மற்றும் ஆரஞ்சு போன்ற பழங்களை எடுத்துக் கொள்ளலாம். சாராகவும் பருகலாம். இதன் மூலம் வெயிலினால் ஏற்படும் சோர்வு நீங்குவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும்.*

***வாழைப்பழம்:** வாழைப்பழம் அதிக நார்ச்சத்து கொண்டதுடன், செரிமானத்திற்கு உதவும். கோடையில் அசிடிட்டி இல்லாமல் இருக்க அதிக பழுத்த வாழைப்பழங்களை சாப்பிடுவது நல்லது.*

***வெள்ளரிக்காய்:** வெள்ளரிக்காயில் 96% நீர்ச்சத்து நிறைந்துள்ளது. வெள்ளரிக்காய் கோடைகால சிறந்த உணவாக பார்க்கப்படுகிறது. வெள்ளரிக்காய் உடலை குளிர்ச்சியாக வைக்க உதவுகிறது. மேலும், எடையை குறைப்பதற்கும், செரிமானத்திற்கு உதவுகிறது. கோடை காலத்தில் மனித உடலுக்கு அடிக்கடி நீரேற்றம் தேவைப்படுகிறது. இயற்கையாகவே அதிகளவான தண்ணீரைக் கொண்ட வெள்ளரிக்காய், மனித உடலின் திரவ உட்கொள்ளலை அதிகரிப்பதோடு உடலை குளிர்ச்சியாக்குகிறது.*

***தர்பூசணி:** தர்பூசணியில் உடலுக்குத் தேவையான நீர்ச்சத்து, நார்ச்சத்து, பொட்டாசியம், மெக்னீசியம், வைட்டமின்கள் ஏ மற்றும் சி போன்றவை அதிகம் உள்ளன. தர்பூசணி சாப்பிடுவதன் மூலம் உடலில் ஏற்படக்கூடிய நீர் பற்றாக்குறை உடனே தீரும். தர்பூசணியில் 92% நீர்ச்சத்து உள்ளது.*

***எலுமிச்சை:** எலுமிச்சையில் பொட்டாசியம், கால்சியம் மற்றும் மெக்னீசியம் போன்ற எலக்ட்ரோலைட்டுகள் உள்ளன. கோடையில் வியர்வை மூலம் இழக்கப்படும் எலக்ட்ரோலைட்டுகளை ஈடுகட்ட எலுமிச்சை உதவுகிறது. மேலும், கோடை காலத்தில் உடலை நீரேற்றமாக வைத்திருக்க உதவுகிறது.*

***இளநீர்:** இதில் சோடியம், கால்சியம், குளுகோஸ், புரதம், பொட்டாசியம் போன்ற தாதுக்கள் நிறைந்துள்ளன. இளநீர் தாகத்தைப் போக்கிப் புத்துணர்ச்சியை அளிக்கும். இளநீர் ஜீரண சக்தியை அதிகரிக்கும். அஜீரணக் கோளாறுகளைத் தடுக்கும். ஆற்றல் வாய்ந்த கரிமப் பொருட்கள் இளநீரில் உள்ளன.*

*இதன் மூலம் இளநீர் உடல் சூட்டைத் தணித்துக் குளிர்ச்சியைத் தரும். இளநீரில் உள்ள பொட்டாசியம், சோடியம், கால்சியம், மெக்னீசியம் முதலிய தாதுக்கள் உடலின் வெப்பநிலையை உள்வாங்கி, சுற்றுச்சூழல் வெப்ப நிலைக்கு ஏற்றபடி உடலின் வெப்பத்தைக் குறைக்கின்றன. இதனுடன் மாதுளம், சப்போட்டா, ஆப்பிள், திராட்சை போன்ற பழங்களை பிழிந்தோ அல்லது பழமாகவோ சாப்பிடுவது நல்லது. கோடையில் உடலில் உள்ள நீர்ச்சத்து குறையும் என்பதால் பசலை கீரை கொண்டு சாலட் செய்து அடிக்கடி சாப்பிடலாம். தொடர்ந்து கேழ்வரகை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.*

# அரபி கடல் பகுதியில் 2,500 கிலோ போதைப்பொருளை பறிமுதல் செய்தது கடற்படை



புதுடெல்லி, ஏப்.4:

புதுடெல்லி: அரபி கடல் பகுதியில் 2,500 கிலோ போதைப்பொருளை இந்திய கடற்படை பறிமுதல் செய்தது. இதுகுறித்து இந்திய கடற்படை அதிகாரிகள் நேற்று கூறியதாவது:

அரபிக் கடல் பகுதியில் போதைப்பொருளுடன் சில கப்பல்கள் பயணிப்பதாக மார்ச் 31-ம் தேதி எங்களுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, அரபி கடல் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த ஐஎன்எஸ் டர்கஷ் கப்பலில் இருந்த அதிகாரிகள், ஹெலிகாப்டர் மூலம் சந்தேகத்துக்கிடமான சில கப்பல்களின் நடவடிக்கைகளை கண்காணித்தனர்.

இந்த கண்காணிப்புப் பணியில் கடற்படை கமாண்டோக்களும் ஈடுபட்டனர். பின்னர் சந்தேகத்தின் பேரில் ஒரு கப்பலை இடைமறித்து சோதனை நடத்தினர். அப்போது, 2,500 கிலோ போதொப்பொருள் பொட்டலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இவை கப்பலின் பல்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. பின்னர் அந்தக் கப்பல் ஐஎன்எஸ் டர்கஷ் கப்பலின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. அதில் இருந்தவர்களை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## சரக்குகளை கையாளுவதில் சென்னை, காமராஜர் துறைமுகங்கள் சாதனை: சுனில் பாலிவால்

சென்னை துறைமுகம் ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுக தலைவர் சுனில்பாலிவால் செய்தியாளர்களைச் சந்தித்தார்

சென்னை: சென்னை துறைமுகம், காமராஜர் துறைமுகம் இணைந்து சரக்குகளை கையாளுவதில் 100 மில்லியன் மெட்ரிக் டன்களை கடந்து சாதனை படைத்துள்ளது. மொத்தம் 103.36 மில்லியன் மெட்ரிக் டன்கள் எட்டியுள்ளதாக சென்னை துறைமுகம் ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுக தலைவர் சுனில்பாலிவால் கூறியுள்ளார்.

சென்னை துறைமுகம் ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுக நிறுவனத்தின் 2024-25-ம் நிதியாண்டில் செயல்பாடு மற்றும் நிதி செயல்திறன் தொடர்பாக சென்னை துறைமுக ஆணையத்தில் உள்ள அரங்கில் இன்று (ஏப்.3) செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. இதில், சென்னை துறைமுகம் ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுகம் நிறுவன தலைவர் சுனில்பாலிவால் கூறியது: “சென்னை துறைமுகம் மற்றும் காமராஜர் துறைமுகம் இணைந்து, சரக்கு கையாளுவதில் 100 மில்லியன் மெட்ரிக் டன்களை கடந்து ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது.

மொத்தம் 103.36 மில்லியன் மெட்ரிக் டன்கள் கையாளப்பட்டுள்ளன. சென்னை துறைமுகம் 54.96 மில்லியன் மெட்ரிக் டன்களையும், காமராஜர் துறைமுகம் 48.41 மில்லியன் மெட்ரிக் டன்களையும் கையாண்டது. இது ஆண்டுக்கு ஆண்டு 6.7 சதவீதம் ஒருங்கிணைந்த அதிகரிப்பைக் குறிக்கிறது. சென்னை துறைமுகம் ஆண்டுக்கு ஆண்டு 6.5 சதவீதம் அதிகரிப்பதையும், காமராஜர் துறைமுகம் 6.9 சதவீதம் அதிகரிப்பையும் காட்டுகிறது.

சென்னை துறைமுகத்தின் செயல்பாடுகள் மூலமாக வருவாய் ரூ.1,088.22 கோடியை எட்டியுள்ளது. காமராஜர் துறைமுகத்தின் செயல்பாடுகள் மூலமாக வருவாய் ரூ.1,130.60 கோடி ஈட்டியுள்ளது. காமராஜர் துறைமுகம் ரூ.545.95 கோடி வரிக்குப் பிந்தைய லாபத்தை பதிவு செய்து, முதல் முறையாக ரூ.500 கோடி வரம்பைத் தாண்டியது. இரண்டு துறைமுகங்களில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வர்த்தக வசதிக்கு முயற்சி எடுக்கப்படுகிறது.

சென்னை துறைமுகம் - மதுரவாயல் இடையே 4-வது உயர்மட்ட வழித்தட திட்டம் (ரூ.3,570 கோடி செயல்பாட்டில் உள்ளது. இதுதவிர, பல்வேறு திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன,” என்று அவர் கூறினார்.

## வீட்டு மேற்கூரை மின்சக்தி உற்பத்தி திட்டத்துக்கு நெட்வொர்க் கட்டணம் விதிப்பதில் இருந்து விலக்கு கோரும் நுகர்வோர் அமைப்பினர்



கோவை: வீட்டு மேற்கூரை மின்சக்தி உற்பத்திக்கு நெட்வொர்க் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என அரசுக்கு நுகர்வோர் அமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

பிரதமரின் சூர்யோதயா யோஜனா திட்டத்தின் கீழ், வீடுகளில் மேற்கூரை மின்சக்தி உற்பத்தி திட்டத்துக்கான கட்டமைப்பை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி, சோலார் தகடுகளைப் பொருத்தி சூரிய சக்தி மின்உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பல்வேறு நகரங்களில் தொழில் துறையினரின் அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் வீடுகளில் சோலார் தகடுகளைப் பொருத்தி, தேவைக்கேற்ப மின் உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு மேற்கூரை சூரியசக்தி மின்சாரம் உற்பத்தி செய்பவர்களுக்கு மின்சாரத் துறை சார்பில் ‘நெட்வொர்க் கட்டணம்’ விதிக்கப்பட்டு வருகிறது. மேற்கூரை சூரியசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து மின் வாரியத்துக்கு கிரிட் மூலம் திருப்பி அனுப்பும்போது, அந்த மின்சாரத்தை எடுப்பதற்கான கட்டணம் நெட்வொர்க் கட்டணமாகும்.

ஆண்டுக்கு ஒருமுறை கணக்கிட்டு, திருப்பி அளிக்கப்படும் மின்சாரத்துக்கு ஏற்ப மின்வாரியம் குறிப்பிட்ட தொகையைத் தர வேண்டும். ஆனால் அவ்வாறு தருவதில்லை. தொழில் நிறுவனங்கள் சார்பில் நெட்வொர்க் கட்டணம் தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டு, அந்த கட்டணத்தை ரத்து செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# பைக் டாக்ஸி சேவைக்கு தடை; உயர்நீதிமன்றம் உத்தரவு!



பெங்களூரு, ஏப்.4:

*வாடகை கார், பைக் டாக்சி போன்ற வாகனங்கள் மூலம் பயணிகள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு வேகமாகவும், பயணக் கட்டணம் குறைவாகவும் கொடுத்துச் செல்கின்றனர். அந்த வகையில், கர்நாடகா மாநிலம் பெங்களூர் நகரில் ஊஃபர், ரேபிடோ, ஓலா போன்ற சில நிறுவனங்களின் பைக் டாக்சி சேவைக்கு கடந்த 2021 ஆம் ஆண்டில் ஆட்சியில் இருந்த பா.ஜ.க அரசு அனுமதி வழங்கியது. இதற்கு ஆட்டோ டிரைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும், இந்த அனுமதியால் தங்களின் வருவாய் பாதிக்கப்படுவதாகக் கூறி போராட்டங்கள் நடத்தினர். ஆனால், அன்றைய அரசு தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.*

*இதனிடையே, பைக் டாக்சிகளில் இரவில் செல்லும் பெண்களுக்கு பாலியல் ரீதியாகத் தொல்லை கொடுப்பதாகப் பல புகார்கள் எழுந்தன. அந்த வகையில், கடந்த இரண்டு ஆண்டுக்கு முன்பு பெங்களூர் பகுதியில் பைக் டாக்சியில் சென்ற பெண், பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இந்த சம்பவம் அப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. மேலும், பைக் டாக்சிக்கு தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது. இந்த சூழ்நிலையில், மின்சார பைக் டாக்சி திட்டத்துக்கு கர்நாடகா காங்கிரஸ் அரசு கடந்தாண்டு தடை விதித்தது.*

*காங்கிரஸ் அரசு தடை விதித்ததை எதிர்த்து ஓலா, ரேபிடோ, ஊஃபர் போன்ற டாக்ஸி நிறுவனங்களின் கூட்டமைப்பு கர்நாடகா உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. கர்நாடகாவில் பைக் டாக்ஸி சேவையை அனுமதிக்க வேண்டும் என்று தனது மனுவில் குறிப்பிட்டிருந்தது. இந்த மனு மீதான விசாரணை, உயர்நீதிமன்ற நீதிபதி ஷியாம் பிரசாத் அமர்வு முன்பு வந்தது.*

*இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஷியாம் பிரசாத், ‘பைக் டாக்ஸிக்கான உரிய சட்டங்களை அரசாங்கம் அமைக்கும் வரை பைக்குகளை வணிகப் போக்குவரத்து வாகனமாக இயக்க அனுமதி வழங்க போக்குவரத்துத்துறைக்கு உத்தரவிட முடியாது.*

*எனவே, ரேபிடோ, உபேர் உள்ளிட்ட பைக் டாக்ஸிகளை கர்நாடகாவில் 6 வாரங்களுக்கு தடை செய்ய வேண்டும். அதற்குள் அரசு, சட்ட திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்’ என்று உத்தரவிட்டார்.*

# ‘அடிபணியும் கலாச்சாரம்’ - சீன எல்லை பிரச்சினை, அமெரிக்க வரி விவகாரத்தில் மத்திய அரசை சாடிய ராகுல்



புதடெல்லி, ஏப்.4:

*சீனாவுடனான எல்லைப் பிரச்சினை, அமெரிக்காவின் கூடுதல் வரி தொடர்பாக மத்திய அரசை கடுமையாக சாடிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சீனா 4,000 சதுர கி.மீ. இந்திய எல்லையை ஆக்கிரமித்துள்ளதாகவும், அமெரிக்க வரி இந்திய பொருளாதாரத்தை முழுவதும் சீரழித்துவிடும் என்றும் தெரிவித்தார்.*

*மக்களவையில் பூஜ்ய நேரத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறியதாவது: நமது நாட்டு எல்லையில் 4000 சதுர கிலோ மீட்டரை சீனா ஆக்கிரமித்துள்ளது. சில நாட்களுக்கு முன்பு நமது வெளியுறவு செயலாளர் (விக்ரம் மிஸ்ரி) சீனத் தூதருடன் கேக் வெட்டுவதைப் பார்த்து நான் அதிர்ச்சி அடைந்தேன். இப்போது கேள்வி என்னவென்றால், உண்மையில் சீனா ஆக்கிரமித்துள்ள அந்த 4,000 சதுர கி.மீ. பகுதியில் என்னதான் நடக்கிறது?*

*கடந்த 2020-ம் ஆண்டு கல்வானில் 20 ராணுவ வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். நாங்கள் இயல்புநிலைக்கு எதிரானவர்கள் இல்லை. ஆனால் அங்கு முன்பிருந்த நிலை தற்போதும் இருக்க வேண்டும். நமது நிலத்தை நாம் திரும்பப் பெற வேண்டும். நமது குடியரசுத் தலைவரும், பிரதமரும் சீனாவுக்கு கடிதம் எழுதி உள்ளதாக நான் அறிகிறேன்.*

*இதையும் நமது மக்கள் யாரும் சொல்லவில்லை. பிரதமரும், குடியரசுத் தலைவரும் தங்களுக்கு கடிதம் எழுதி இருப்பதாக சீன தூதர் இந்திய மக்களுக்கு தெரிவித்துள்ளார். வெளியுறவுக்கொள்கை என்பது வெளிநாடுகளுடனான உறவை நிர்வகிப்பதைக் குறிக்கும். நீங்கள் சீனாவுக்கு நமது நிலத்தில் 4000 சதுர கி.மீ. விட்டுக்கொடுத்துள்ளீர்கள்.*

*நமது நட்பு நாடான அமெரிக்கா திடீரென நம் மீது வரிகளை விதிக்கிறது. அமெரிக்காவின் இந்த வரிவிதிப்பு இந்திய பொருளாதாரத்தை, குறிப்பாக வாகன உற்பத்தி, மருந்து தயாரிப்பு, விவசாயத்துறைகளை சீர்குலைக்கப் போகிறது. இந்திரா காந்தியிடம் ஒருமுறை ஒருவர் ‘வெளியுறவு கொள்கை விஷயத்தில் நீங்கள் வலது அல்லது இடது பக்கங்களில் எங்கு சாய்வீர்கள்’ எனக் கேட்டார். அதற்கு இந்திரா காந்தி, ‘நான் வலது, இடது எந்தப்பக்கமும் சாயமாட்டேன், நேராக நிற்பேன், நான் இந்தியர்; நேராக நிற்பேன்’ என்றார்.*

*ஆனால் பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் வேறு வகையான கொள்கையை வைத்துள்ளது. அவர்களிடம் வலதா, இடதா எனக் கேட்டால், எங்கள் முன்பு இருக்கும் வெளிநாட்டினர் முன்பு நாங்கள் தலைவணங்கி நிற்போம் என்று கூறுவார்கள். இது அவர்களின் கலாச்சாரத்தில், வரலாற்றில் உள்ளது. நமக்கும் அது தெரியும். நமது எல்லையில், நம் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளில் இந்தியா என்ன செய்யப்போகிறது என்பது குறித்து மத்திய அரசு விளக்க வேண்டும். இவ்வாறு ராகுல் பேசினார்.*

## கால்நடை மருத்துவ ஆலோசகர் தற்காலிக காலிப் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்

தஞ்சாவூர், ஏப்.4:

தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலம், கிராமப்புற தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு, தரமான



கால்நடை மருத்துவ வசதி அளிக்கவும், செயற்கை கருவூட்டல், சினைப்பரிசோதனை, மலடு நீக்க சிறப்பு சிகிச்சை அளிக்கவும், ஒன்றியத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில் காலியாக உள்ள ஒரு கால்நடை மருத்துவ ஆலோசகர் பணியிடத்திற்கு, ஒப்பந்த அடிப்படையில் ஓர் ஆண்டிற்கு தற்காலிகமாக பணிபுரிய விருப்பமுள்ள கால்நடை மருத்துவ பட்டதாரிகள், தங்களின் உரிய பட்டப்படிப்பு, கால்நடை மருத்துவக் கவுன்சில் பதிவு சான்றிதழ்களுடன் வருகின்ற 10.04.2025 அன்று காலை 11 மணிக்கு தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை சாலையில் உள்ள ஆவின் தலைமையிடத்தில் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

## அகரம்சீகூர் கிராமத்தில் ஏப்.9 இல் மக்கள் தொடர்பு திட்ட முகாம்

பெரம்பலூர், ஏப்.4:

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம், அகரம்சீகூர் கிராமத்தில், ஏப்.9 இல் (புதன்கிழமை) மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ் தலைமையில், மக்கள் தொடர்புத்திட்ட முகாம் நடைபெற உள்ளது. இம்மக்கள் தொடர்பு திட்ட முகாமில் நலத்திட்ட உதவிகள் மற்றும் இதர தேவைகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெறும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. எனவே, குன்னம் வட்டம், அகரம்சீகூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், தங்களது கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை அகரம்சீகூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் முகாம் நடைபெறும் நாளிற்கு முன்னதாகவோ அல்லது தொடர்புடைய வருவாய்த்துறை அலுவலர்களிடமோ அளித்து பயன்பெறுமாறு மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## கோரிக்கை மனுவை கசக்கி வீசிய பெரம்பலூர் ஆட்சியர்: நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு கண்டனம்

பெரம்பலூர், ஏப்.4:


கோரிக்கை மனுவை கசக்கி வீசி உதாசீனம் செய்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.பாஸ்கரன் உள்ளிட்ட தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் பொறுப்பாளர்களை கைது செய்த பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாநிலத் தலைவர் ஜெ.ராஜா, பொதுச்செயலாளர் அண்ணா குபேரன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக அத்துறை சங்கத்தின் சார்பில், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் சி.காந்திமதி நாதன் மற்றும் பொதுச்செயலாளர் க.பிரபு, அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.பாஸ்கரன் ஆகியோர் கோரிக்கைகள் தொடர்பாக, மாவட்ட ஆட்சியர் கிரேஸ் லால்ரின்டிகி பச்சாவ்வை சந்தித்து கோரிக்கை மனு வழங்கினர்.

அப்போது, மனுவை கண்ணெதிரே கசக்கி கிழித்து எறிந்ததோடு மட்டுமல்லாமல் “என் நேரத்தை வீணடிக்காதீர்கள், அறையை விட்டு வெளியே செல்லுங்கள்” என்று மிகுந்த கோபத்தோடு பேசினார். அதோடு, காவல்துறை கண்காணிப்பாளரை அழைத்து, அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் உள்ளிட்ட ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் பொறுப்பாளர்கள் அனைவரையும் கைது செய்துள்ளார். மாவட்ட ஆட்சியரின் அறைக்குள் நுழைந்த காவல்துறையினர் பொறுப்பாளரின் கைகளைப் பிடித்து இழுத்து கைது செய்துள்ளனர். காவல்துறை வாகனத்தில் ஏற்றப்பட்ட நிர்வாகிகளின் அலைபேசி அனைத்தையும் பறித்துக் கொண்டு வாகனத்தில் இருந்து கீழே இறங்கவிடாமல் பல மணி நேரம் குடிக்க தண்ணீர் கூட கொடுக்காமல் வாகனத்திற்கு உள்ளேயே அடைத்து வைத்து அராஜகம் செய்துள்ளனர். மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக அதிகாரம் படைத்த மாவட்ட ஆட்சியர் பதவியில் உள்ள அவர், குறைகளைக் கேட்பதும், அதை களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும்தான் தனது தலையாய கடமையாக கொண்டிருக்க வேண்டும். அத்தகைய மாவட்ட ஆட்சியர், தன் நிர்வாகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் கோரிக்கைகளை கேட்டு, மாவட்ட நிர்வாகத்தின் அச்சாணிகளாக இருக்கும் அரசு ஊழியர் பிரச்சனைகளை தீர்ப்பதன் மூலம் நிர்வாகத்தை திறம்பட நடத்தக் கூடியவராக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் நிறைவேற்றும் இடத்தில் உள்ள மாவட்ட ஆட்சியரே, கோரிக்கை மனுவை கசக்கி வீசி, தரம் தாழ்ந்த முறையில் நடந்து கொண்டது மிகுந்த கண்டனத்திற்குரியது. எனவே, சங்க நிர்வாகிகளை தரக்குறைவாக நடத்திய மாவட்ட ஆட்சியர், தனது செயலுக்கு வருத்தம் தெரிவிப்பதோடு, மாநில நிர்வாகிகளை அழைத்துப் பேசி கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். என அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# "யதார்த்தங்களின் பயணத்தில்"



அந்தக் கவிதைப் புத்தகத்தை முழுவதுமாய்ப் படித்து முடித்த சுந்தர நிலவன், "ச்சை... இதெல்லாம் ஒரு கவிதையா?... இவனெல்லாம் ஒரு கவிஞனா?... கையில காசு இருக்குதுன்னு கண்டதையெல்லாம் எழுதிப் புத்தகமா போட்டு சமூகத்தைக் கெடுத்திட்டிருக்கான்!"என்று உரத்த குரலில் திட்டிக் கொண்டே அந்தக் கவிதைப் புத்தகத்தை பக்கத்திலிருந்த குப்பைத் தொட்டிக்குள் வீசினான்.

சத்தம் கேட்டு வந்த அவன் மனைவி அவன் புத்தகத்தை வீசுவதை வினோதமாய்ப் பார்த்தாள்.

"இப்பவே போய் அந்த டுபாக்கூர் கவிஞனை நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி நாலு கேள்வி கேட்டுட்டு வர்றேன்!" ஆவேசமாய்த் தெருவில் இறங்கினான் சுந்தர் நிலவன்.

"கவிஞர் ராஜமுத்து" என்ற போர்டைத் தாங்கிய கேட்டைத் தள்ளி கொண்டு உள்ளே நுழைந்தான் சுந்தரநிலவன்.

போர்டிகோவில் அமர்ந்து எதையோ எழுதிக் கொண்டிருந்த கவிஞர் ராஜமுத்து, அவனைப் பார்த்து.

"வாப்பா உட்காரு... உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு சட்டுனு ஞாபகம் வரலை!" ராஜமுத்து சொல்ல,

"நானும் ஒரு கவிஞன் தான் சார்!... ஆனால் உண்மையான கவிஞன் சார்!" பற்களைக் கடித்துக் கொண்டு சொன்னான் சுந்தரநிலவன்.

"உங்க பேரு?'.

"சுந்தர நிலவன்"

'கரெக்ட்... கரெக்ட்... இந்தப் பேரை அடிக்கடி பத்திரிகைகள் பார்க்கிறேன்!... உங்கள் கவிதைகள் சிலவற்றைக் கூட வாசிச்சிருக்கேன்!... ரொம்ப நல்லா எழுதுறீங்க... அருமையான வீச்சு இருக்கு உங்க எழுத்துல!".

"ஹி..ஹி.. !"சுந்தர் வழிந்தான்.

"ஆமாம்... உங்கள் கவிதைகளைத் தொகுத்து புத்தகம் போட்டிருக்கீங்களா?" ராஜமுத்து கேட்க.

"இல்லை சார்... அந்த அளவுக்கு எனக்கு வசதி இல்லை சார்... வயித்துப் பாடே பெரும்பாடா இருக்கு சார் எனக்கு!" என்றான் சுந்தரநிலவன்.

"எத்தனை கவிதைகள் எழுதி வச்சிருக்கீங்க?" கேட்டார் ராஜமுத்து.

"அது ஒரு 300 கவிதைகளுக்கும் மேல் எழுதி வெச்சிருக்கேன் சார்!"

"ஓகே... அதுகளை என்கிட்டக் குடுங்க... எனக்கு தெரிஞ்ச ஒரு பப்ளிஷர்ஸ்ல குடுத்து என் செலவுல... அதை புத்தகமாப் போட்டுத் தரேன்"

வரும் போது இருந்த ஆவேசம் சுத்தமாய் தணிந்திருந்தது சுந்தரநிலவனுக்கு.

"சார்... அது வந்து உங்களுக்கு எதுக்கு வீண் செலவு"

"அய்யய்ய... உங்களைப் போன்ற திறமை வாய்ந்த கவிஞர்களை வெளி உலகுக்கு கொண்டு வரணும்".

" நன்றி சார்... நாளைக்கே கொண்டு வந்து தரேன் சார்!" சுந்தரநிலவன் எழ.

"ஓ.கே... நீங்க எதுக்கு வந்தீங்க?ன்னு சொல்லவே இல்லையே"

"அது வந்து இன்னைக்கு காலையில உங்களோட "செல்லரித்த மானுடம்" கவிதைப் புத்தகம் வாசித்தேன்... சிலிர்த்துப் போனேன்... அதுக்காகப் பாராட்டத்தான் வந்தேன்"

"ரொம்ப நன்றி நன்றி'

வீட்டிற்குத் திரும்பிய சுந்தரநிலவன் குப்பை கூடையில் கிடந்த அந்த கவிதைப் புத்தகத்தை எடுத்து அலமாரியில் வைப்பதை வினோதமாய்ப் பார்த்தால் அவன் மனைவி.



**-முகில் தினகரன்,**
கோயம்புத்தூர்.

# ம ஞ் ச ப் பை....

அண்ணாச்சி...ஒரு லிட்டர் பால், இரண்டு பிஸ்கட் பாக்கெட் கொடுங்க.... என்று ராகவன் கேட்டதும், மளிகைக் கடைக்காரர் மருது சாமி அங்கிருந்த பலகையின் மீது பால்பாக்கெட்டையும் , பிஸ்கட் பாக்கெட் டையும் வைத்து விட்டு அறுபது ரூபாய் கொடுங்க என்றார்..



அறுபது ரூபாயை சில்லறையாக எடுத்து நீட்டிய ராகவன், அண்ணாச்சி..பையில போட்டு கொடுங்க... என்றான். போனவாரமே உங்ககிட்ட சொன்னேன்...கடைக்கு வரப்ப பை கொண்டு வாங்கன்னு.... நீங்க மறந்துட்டிங்க போல... என்றார் அண்ணாச்சி....

நான் பை கொண்டு வரல.... நீங்க எப்போதும் போல பிளாஸ்டிக் பையில போட்டு கொடுங்க என்று ராகவன் சொன்னதும், என் கடையில பிளாஸ்டிக் பை கிடையாது... ஆறு மாசமா அதை நான் பயன்படுத்தறது இல்ல.. நீங்க பால் பாக்கெட் டையும், பிஸ்கட் பாக்கெட் டையும் கையில எடுத்துட்டு போங்க... அடுத்த தடவை கடைக்கு வரப்ப பையோட வாங்க... என்றார் மளிகைக் கடைக்காரர்...!

அண்ணாச்சி...இது எல்லாத்தையும் எப்படி நான் எடுத்துட்டு போவேன்... நீங்க பை கொடுப்பீங்கன்னுதான உங்க கடைக்கு சாமான் வாங்க வந்தேன்...மத்த எல்லாக் கடையிலும் பிளாஸ்டிக் பையில தான் சாமான் போட்டுக் கொடுக்குறாங்க..நீங்க மட்டும் பை இல்லேன்னு பிடிவாதமா பேசறீங்க.... காசு கொடுக்குறன்.... ஒரு பை கொடுங்க என்று ராகவன் கேட்டான்.

நான் தான் சொல்றேன்ல....என் கடையில பிளாஸ்டிக் பையில போட்டுக் கொடுக்கறத நிறுத்திட்டேன்னு.... எல்லாரும் பை எடுத்து வந்து சாமான் வாங்கிட்டு போறாங்க... நீங்க மட்டும் தான் பை எடுக்காம வெறும் கையை வீசிட்டு வந்து எங்கிட்ட வம்பு பண்ணிகிட்டு நிக்கறீங்க..... ஜவுளிக்கடையில துணி வாங்குறப்ப எவ்வளவு துணிப் பை கொடுக்கறாங்க....அதுல ஒரு பையை எடுத்துக்கொண்டு வரதுல்ல உங்களுக்கு என்ன சிரமம்?

அரசாங்கம் பிளாஸ்டிக் பையை பயன்படுத்தக்கூடாதுன்னு டிவியிலயும், ரேடியோவிலயும் தினசரி விளம்பரம் பண்ணிகிட்டே இருக்காங்க.... அரசாங்கம் போடற சட்டம் எல்லாமும் இங்கு வசிக்கிற ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பொருந்தும். நாமதான் அதை சரியா புரிஞ்சி கிட்டு அதன்படி வாழ கத்துக்கணும்... நாட்டு மேல அக்கறை இருக்கற நாம ஒவ்வொருத்தரும் இதை கடைபிடிச்சா, பிளாஸ்டிக் பை அரக்கனை ஒழிச்சிடலாம். அரசாங்கம் சொல்ற எதையும் நாம மதிக்கிறதேயில்ல... அதனால்தான் நம்மநாடு சரியா முன்னேற்றம் அடையாம இருக்கு!



அண்ணாச்சி சொன்னதைக் கேட்ட ராகவன் பதிலுக்கு, பிளாஸ்டிக் பை உற்பத்தி பண்றவங்கள யாரு தடுக்கறது என்றான்.

தம்பி....!மனுசனுக்கு சுய கட்டுப்பாடு இருக்கனும்... வாடிக்கையாளருக்கு பிளாஸ்டிக் பை கொடுத்து, நான் வியாபாரம் செய்யனும்னு அவசியமில்ல... நான் சட்டத்தை மதிக்கிறேன்... அரசாங்கம் சொல்றதை கேட்டு நடக்கனும்னு நினைக்கிறேன்... எனக்கும் நாட்டு மேல அக்கறை இருக்கு தம்பி.... என் வாடிக்கையாளருக்கு நான் நல்லது செய்யனும்னு நினைக்கிறேன்... நான் பிளாஸ்டிக் பையை கொடுத்தாத்தான் நீங்க பயன்படுத்த முடியும். அதனால் தான் என் கடையில பிளாஸ்டிக் பையை நான் வச்சுக்கல்ல....


பிளாஸ்டிக் பையினால நாம வாழற பூமிக்கு எத்தனை கேடு உண்டாகுதுண்ணு சொல்லி கிட்டே இருக்காங்க... யாரும் காது கொடுத்து கேட்டதா தெரியல.... என்று அண்ணாச்சி சொன்னதும், ராகவன் எதுவும் பேசாமல் பால் பாக்கெட் டையும், பிஸ்கட் பாக்கெட் டையும் கையில் எடுத்துக் கொண்டுப் புறப்பட்டான்.. அவன் வீட்டுக்கு செல்லும் வழியில் இனிமேல் அண்ணாச்சி சொன்னபடி,கடைக்கு வரப்ப ,மறக்காம மஞ்சப்பையை எடுத்து வர வேண்டியதுதான் என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டான்..

- தமிழ்ச் செம்மல்
நன்னிலம்
**இளங்கோவன்.**

# ஆன்மிக களஞ்சியம்

# இளையான்குடிமாற நாயனார் வரலாறு

தொடர்- 5





இளையான் தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன் - திருத்தொண்டத் தொகை".

இளையான்குடியில் பிறந்த மாறனார், உழவுத்தொழிலில் வந்த பெருஞ் செல்வமும், சிவனடியாரிடத்து அன்புள்ளமும் உடையவராய்த் திகழ்ந்தார். சிவனடியார் தம் இல்லத்திற்கு வந்தால், எதிரே சென்று கைகூப்பி வணங்கி, இனிய மொழிகளைக் கூறி வரவேற்று, அவர்களுக்கு உணவளிப்பார். நாள்தோறும் செய்த மாகேசுவரபூசை என்னும் சிவபுண்ணியத்தால், அவரது செல்வம், நாளுக்குநாள் பெருகிக் குபேரனைப் போன்ற பெரும் செல்வந்தராக வாழ்ந்து வந்தார்.

அடியார்க்குத் திருவமுதளித்தலாகிய இத்திருப்பணியைச் செல்வக்காலத்திலே மட்டுமன்றி வறுமையுற்ற காலத்திலும் விடாது செய்ய வல்லார் இந்நாயனார் என்னும் உண்மையினை உலகத்தார்க்கு அறிவுறுத்த இறைவன் திருவுள்ளங் கொண்டார். இதனால் இளையான்குடி மாறனாரின் செல்வம் குறைந்து வறுமை உண்டாகியது. இவ்வாறு செல்வம் சுருங்கினாலும், தம்மிடமிருந்த நிலங்கள் முதலியவற்றை விற்றும், கடன்வாங்கியும் அடியார்க்கு அமுதளிக்கும் பணியை விடாது செய்து வந்தார்.

இவ்வாறு மாரிக்காலத்தில் ஒருநாள், தாம் உணவின்றிப் பசியால் வாடியபோதும், இரவு வெகுநேரம் வரை சிவனடியார்களை எதிர்பார்த்திருந்து எவரும் வராமையால், கதவைப்பூட்டி விட்டு வீட்டினுள் சென்றார். நள்ளிரவுப் பொழுதிலே, சிவபெருமான், அடியார் கோலங்கொண்டு மாறனாரது மனைக்கு எழுந்தருளிக் கதவைத் தட்டி அழைத்தார். மாறனார் கதவைத் திறந்து, அடியாரை வீட்டினுள் அழைத்து வரவேற்று, இருத்தற்கு இடங் கொடுத்தார்;



அடியார்க்கு உணவளிக்க வீட்டில் ஏதுமில்லையே என வருத்தம் மிகுந்தது. அன்றைய மழை நாளின் பகற்பொழுதில் நிலத்தில் விதைக்கப்பட்ட நெற்மணிகளைச் சேகரித்து வந்து, கீரைகளைப் பறித்து, அடுப்பெரிக்க விறகில்லாமல், வீட்டின் சிதலமடைந்த கூரையிலிருந்த மரக்கட்டைகளைப் பயன்படுத்தி உணவு சமைத்து, மாறனாரும் அவரது துணைவியாரும், சிவனடியாருக்கு உணவு படைத்தனர். அப்பொழுது அடியாராக வந்திருந்த பெருமான், சோதிப் பிழம்பாய் எழுந்து தோன்றினார். அது கண்டு மாறனாரும் மனைவியும் திகைத்து நின்றனர். சிவபெருமான் உமாதேவியாருடன் எருதின் மேல் தோன்றி, "அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ, உன் மனைவியோடும் என் பெரும் உலகமாகிய சிவலோகத்தினை அடைந்து பேரின்பம் அனுபவித்திருப்பாயாக" என்று அருள் செய்து மறைந்தருளினார்.

தொடரும்...

**-சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி

# வில்வம் - ஒரு மகத்துவம்.

இதன் மறு பெயர்கள்:
கூவிளம், சரபீதலம், அலுவீகம், அல்லூரம், ஆலூகம், சட்டாம், சிறிய பலகியம், திரிபத்ர, பில்வம், பூவிதாத, சலய, மாங்கல்ய, சாண்டல்லியம், கற்கடக நிலை மல்லிகம், குசாபி, வில்வை

வளரும் இடங்கள்:
இலங்கை, இந்தியா மற்றும் அயனமண்டலத்தை சேர்ந்த ஆசிய நாடுகளில் காணப்படும் ஒரு தாவரமாகும்.

பயன் தரும் பகுதிகள்:
இலைகள், கொட்டைகள், பட்டை, மலர், பழம் மற்றும் குச்சி ஆகிய இவை அனைத்துமே பயன் தரும் பகுதிகள் தான்.

**பொதுவான தகவல்கள் :**
வில்வம் அல்லது வில்வை அல்லது குசாபி அல்லது கூவிளம் (Bael, Aegle marmelos) இலங்கை, இந்தியா மற்றும் அயனமண்டலத்தை சேர்ந்த ஆசிய நாடுகளில் காணப்படும் ஒரு தாவரமாகும். சைவ சமய மரபுகளில் வில்வ மரத்திற்கு முக்கிய பங்கு உண்டு.

கூவிளம் என்னும் சொல் வில்வ மரத்தைக் குறிக்கும். சங்ககால மகளிர் குவித்து விளையாடிய 99 மலர்களில் கூவிளம் என்பதும் காட்டப்பட்டுள்ளது.

கடையெழு வள்ளல்களில் ஒருவனான எழினியின் குடிப்பூ கூவிளம். தமிழில் 'கூவிளம்' , 'இளகம்' எனப்பல பெயர்களில் வழங்கப்படும் இது தமிழ் சித்த மருத்துவத்தில் பல்வேறு பயன்களைக் கொண்டது. மூக்கடைப்பு, செரியாமை, காசம் முதலான நோய்களுக்கு இதன் இலை, பழம் என்பன மருந்தாகப் பயன்படுகிறது. வில்வ வேர் சித்தமருத்துவத்தில் கூறப்பட்டுள்ள பெரும்பஞ்ச மூலங்களுள் ஒன்றாகும்.

**ஆன்மீகத்தில் வில்வ மரம் :-**
இந்து மதத்தில் வில்வ மரம் மிகப் புனிதமானது. சிவ வழிபாட்டில் வில்வ பத்திர பூசை முக்கியமானது. முக்கூறுகளைக் கொண்ட வில்வ இலை திரிசூலத்தின் குறியீடாகக் கொள்ளப்படுகிறது. இது இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என்பதைக் குறிக்கின்றது. நேபாளத்தில் கன்னிப் பெண்களின் கருவளத்தைக் காக்கவேண்டி வில்வம் பழத்திற்கு திருமணம் செய்து வைக்கும் சடங்கு பிரபலமானது.

சிவபெருமானுக்கு வில்வம் ஒன்று சாத்தினால் சிவலோக பதவியும், இரண்டு சாத்தினால் சிவன் அருகில் இருக்கும் பாக்கியம் கிட்டும். மூன்று சாத்தினால் அவனின் அருள் பெறலாம், நான்கு வில்வ இதழ்கள் சாத்தினால் அவனுடன் ஐக்கியமாகலாம் என்பது ஐதீகம்.
வில்வப்பழம் பல வியாதிகளுக்கும் சிறந்த மருத்தாகும். இந்தப் பழத்தைச் சாப்பிட்டால் வாயுத்தொல்லை நீங்கும். சிறுநீர் கோளாறுகளை நீக்கும். தாய்ப்பாலை பெருக்கும்.
மாதவிடாய்க் கோளாறுகளைக் குணமாக்கும்.
சிறுநீரகத்தில் உண்டாகும் கற்களைக் கூடக் கரைக்கும்.
இதை ஊறுகாய் போட்டுச் சாப்பிட்டால் ஆண்மை சக்தி அதிகரிக்கும்.
அடிக்கடி பேதியும், சீதபேதியும் ஆகுதல், இறைச்சி, மீன், முட்டை,பிரியாணி, வடை, எண்ணெய்ப் பலகாரங்கள், ரொட்டி போன்ற தாமதமாக ஜீரணமாகும் உணவுப் பொருட்களால் ஏற்படும் வயிற்றுவலி-பேதி, கல்லீரல், மண்ணீரல், இரைப்பை மற்றும் குடல் பலவீனத்தால் ஏற்படும் வியாதிகளைக் குணமாக்க வில்வப்பழம் மிகவும் பயன்படுகிறது. நாட்டு மருந்துக் கடைகளில் உலரவைத்து விற்கப்படும் வில்வப்பழத்தை வாங்கி 5 கிராம் அளவில் ஒரு துண்டை எடுத்துக் கஷாயம் போட்டுக் காலை, மாலை இரண்டு வேளைகள் குடித்தால் அடிக்கடி ஏற்படும் சீதபேதி குணமாகும். அத்துடன் உடல் உள்ளுறுப்புகளுக்கும் சக்தி தரும்.



வில்வப் பழம் மன இறுக்கத்தையும் போக்க வல்லது. இன்னும் சொல்லப் போனால் கடந்த கால சம்பவங்களையே நினைத்து நினைத்து வேதனையில் மூழ்கியிருப்பவர்களுக்கு நிவாரணமளிக்கும் ஓர் அமுதம் என்றே வில்வப் பழத்தைச் சொல்லலாம். அவர்கள் இரண்டு கிராம் அளவில் கஷாயம் தயாரித்து தினசரி ஒருவேளை குடிக்கலாம். இதனால் மனம் நிம்மதி அடையும். மனம் ஒரு ஆலயமாக மாறும். இதனை இன்னொரு சிவ மூலிகை என்று சொன்னாலும் அது மிகையாகாது.



**வில்வ மரத்தைப் பற்றிய மேலும் சில பொதுவான தகவல்கள்:-**
மணமுடைய இலைகளைப் பெற்ற முட்களுள்ள பெரிய மரம் வில்வம். மாற்றடுக்கில் மூன்று கூட்டிலைகளைக் கொண்டது. ஐந்து கூட்டிலைகளைக் கொண்ட மரத்தை மகாவில்வம் என்பர். ஆனால், மகா வில்வம் மிகவும் அரிதாகக் காணக் கிடைக்கிறது.

பொதுவாக வில்வ இலை மலத்தைக் கட்டுப்படுத்தும். வயிற்று வலியைப் போக்கும். கபவாதங்களைத் தணிக்கும். காமத்தை விருத்தி செய்யும். எல்லாவிதமான மேக நோய்க்கும் வில்வம் அரும் மருந்தாக உள்ளது. இது அனைத்து வகையான காய்ச்சலையும் போக்கும் தன்மை கொண்டது. வில்வப் பழம் பித்த சம்மந்தமான நோய்களுக்கு நல்ல மருந்தாகும்.

**வில்வத்தின் மேலும் பல மருத்துவப் பயன்கள்:**

* வில்வத்தின் தளிர் இலைகளை வதக்கி இளஞ்சூட்டில் ஒத்தடம் கொடுக்கக் கண்வலி, கண் சிவப்பு, அரிப்பு என அனைத்தும் நீங்கும்.

* வில்வ இலைகளை சுத்தம் செய்து தினமும் மென்று தின்று வந்தால் நல்ல செரிமானம் ஏற்படும். உண்ட உணவில் உள்ள சத்துக்கள் இரத்தத்தில் கலந்து உடல் வலுப்பெற உதவும்.

* வில்வ இலைச் சூரணம் ஒரு தேக்கரண்டியும், கரிசலாங்கண்ணி இலைச்சாறு ஒரு தேக்கரண்டியும் கலந்து சாப்பிட்டு வர மஞ்சள் காமாலை விரைவில் குணமாகும்.

* வில்வ இலையை தினம் 5 முதல் 10 வரையில் தின்று வந்தால் ஆஸ்த்மா நோயின் கடுமை குறையும்.

* வில்வத்தின் பழச்சதையை உலர்த்தி காய வைத்துப் பொடி செய்து அதில் ஒரு கிராம் எடுத்து சிறிது சர்க்கரை சேர்த்து மூன்று வேளை சாப்பிட பேதி, சீதபேதி, பசியின்மை குணமாகும்.

* வில்வப்பிஞ்சை அரைத்துத் தயிரில் கலந்து குழந்தைகளுக்கு கொடுக்க வயிற்றுக்கடுப்பு, சீதபேதி, புண் போன்றவை விரைவில் குணமாகும்.

* வில்வப்பூவையும், துளசி இலையையும் சமமாகத் தேவைக்கு ஏற்ப எடுத்து சிதைத்துச் சாறு எடுத்துக் கொண்டு, சிறிது தேன் கலந்து காலை, மாலையாக வேலைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் மிகக் கடுமையான அனைத்து வகைக் காய்ச்சலும் தணிந்து நோய் நீங்கும். அத்துடன் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்லது.

* வில்வ இலையைக் கைப்பிடி அளவு எடுத்து இரவு தண்ணீரில் குறைந்தது எட்டு மணி நேரம் ஊற வைத்து, தினசரி காலையில் வெறும் வயிற்றில் 30 மில்லியளவு இந்த ஊற வைத்த நீரை குடித்து வந்தால் - உடம்பில் ஏற்படும் கை, கால் வலிகள் கட்டுப்படும். அத்துடன் மன நிலை பாதிக்கப்பட்டவர்கள் இந்த நீரை குடித்து வர காலப்போக்கில் புத்தி தெளியும்.

* வில்வப் பழச் சதையை, காய்ச்சிய பாலில் கசக்கி விட்டு, திப்பி நீக்கி சாப்பிட்டால் கணைச் சூடு குறையும்.

* வில்வப் பழத்தைச் சேகரித்து அதிமதுரத் தூள், சர்க்கரை சேர்த்து சாப்பிட்டு வந்தால் பித்த அதிகரிப்பால் ஏற்படும் அஜீரணக் கோளாறுகள் நீங்கும்.

* வில்வக் காயுடன், வெள்ளைப் பூண்டு வைத்து அரைத்து, தேமல் மீது தடவி வர, தேமல் மறைந்து சருமம் இயல்பு நிலையைப் பெறும்.

* வில்வ இலையுடன் மிளகு சேர்த்து மென்று தின்று தண்ணீர் குடித்து வந்தால் ஆஸ்துமா குணமாகும்.

* வில்வப் பழ ஓட்டை எடுத்துக் கடைந்து கஷாயம் வைத்து, தேன் கலந்து சாப்பிட்டால் சீதபேதி குணமாகும்.

* வில்வப் பூக்களை புளி சேர்த்து ரசம் வைத்துச் சாப்பிட்டு வர குடல் வலிமை பெறும்.

* வில்வாதி குளிகை - நஞ்சு, காலரா, அஜீரணம், இடுவிஷம், காய்ச்சல், கை கால் வலி ஆகிய அனைத்தையும் நீக்கும்.

* வில்வாதி லேகியம் - வாந்தி, இருதய நோய், காமாலை, குன்மம், கிரஹனி, சுவையின்மை, பீனிசம், இருமல், இழுப்பு, மண்ணீரல் வீக்கம், இது விஷம், மூல நோய், பாண்டு ஆகிய அனைத்தையும் தணிக்க வல்லது.

* வில்வாதி தைலம் இருதய நோயைத் தணிக்கும்.

* வில்வ இலையை வதக்கி அதை போட்டு குடிநீர் செய்து 21 நாட்கள் தொடர்ந்து காலையும் மாலையும் அருந்தி வர எல்லா விதமான பித்த ரோகங்களும் குணமாகும்.

* வில்வ இலைப் பொடியை தண்ணீரில் கலந்து குடித்து வர குடல் புண், வாந்தி, மயக்கம் போன்ற அனைத்தும் தீரும்.

* வில்வ இலைச் சூரணம் காச நோய், வாய்ப்புண், குடற்புண் ஆகிய அனைத்தையும் நீக்கும் தன்மை கொண்டது.

**-அரவிந்தன் தஞ்சை**

---

**தினம் ஒரு தலைவர்கள்**

# சோஜோர்னர் ட்ரூத் வரலாறு

சோஜோர்னர் ட்ரூத் (SOJOURNER TRUTH) (C. 1797 நவம்பர் 26, 1883) என்பது 1843ஆம் ஆண்டில் தானே புனைந்து கொண்ட பெயராகும். இசபெல்லா பௌம்ஃப்ரீ (ISABELLA BAUMFREE) என்ற இயற்பெயருடைய இவர் ஓர் ஆபிரிக்க-அமெரிக்க அடிமைத்தன ஒழிப்பாளரும் பெண்ணிய போராளியும் ஆவார். நியூயார்க்கில் உள்ள சுவார்ட்கில்லில் அடிமைகளான பெற்றோர்களுக்குப் பிறந்தவர் ட்ரூத். அடிமைத்தளையை கழற்றி எறிந்த இவர் 1851ஆம் ஆண்டு அக்ரோன், ஒகியோவில் ஒகியோ பெண்கள் உரிமை மாநாட்டில் ஆற்றிய "நான் ஓர் பெண்ணல்லவா" (AIN'T I A WOMAN? )என்ற உரை மிகவும் புகழ் பெற்றது.

**இளமைப் பருவம்**
இவர் தன் பெற்றோருக்குப் பிறந்த பல குழந்தைகளில் இளைய மகளாகப் பிறந்தவர். கானாவில் இருந்து அழைத்துவரப்பட்ட கூலித் தொழிலாளியான ஜேம்ஸ் இவரது தந்தை. எலிசபெத் கினியா நாட்டில் இருந்து அழைத்துவரப்பட்ட அடிமைகளுள் ஒருவர். அடிமைகளாய் இருந்த இவரது பெற்றோரை கேணல் ஹார்டன்பெர்க் என்னும் செல்வந்தர் வாங்கினார். தன் தோட்டத்தில் வேலை வழங்கினார். முதலாளி இறந்த பின்னர், ட்ரூத் மற்றொருவருக்கு விற்கப்பட்டார். இவருக்கு டச்சு மொழி மட்டுமே தெரிந்திருந்தது. நீலி என்ற புதிய முதலாளி தன்னை கொடுமைப்படுத்தியதாக கூறியுள்ளார். பின்னர், மார்டினஸ் ஷ்கிரைவர் என்பவரிடம் விற்கப்பட்டார்.. பதினெட்டு மாதங்கள் அங்கு வேலை பார்த்தார். மீண்டும் மற்றவருக்கு விற்கப்பட்டார். இவரது முதலாளிகளின் கொடுமையால் வாழ்க்கை துன்பகரமாக அமைந்தது. 1815 ஆண்டில், அண்டை தோட்டத்தில் வேலை பார்த்த ராபர்ட் என்ற அடிமையின் மீது காதல் கொண்டாட். ராபர்ட்டின் முதலாளிக்கு இது பிடிக்காததால் ராபர்ட்டை காயப்படுத்தினார். காயமுற்றமையினால் ராபர்ட் இறந்தார். இவரின் முதலாளி, கிழவராய் இருந்த அடிமைக்கு திருமணம் செய்து வைத்தார். இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தன.

**விடுதலை**
1799 ஆண்டில், நியூயார்க் மாநில அரசு அடிமைத்தனத்தை ஒழிக்க சட்டம் இயற்றியது. இந்த சட்டம் நிறைவேறும் ஆண்டிற்கு முன்னரே இவருக்கு விடுதலை வழங்குவதாக இவரது முதலாளி தெரிவித்தார். வேலையை ஒழுங்காக செய்தால் விடுதலை வழங்குவேன் என்றும் சொன்னார். இவருக்கு ஏற்பட்ட உடற்காரணங்களை காரணம் காட்டி, வேலை நிறைவாக இல்லை என்று கூறி மனதை மாற்றிக் கொண்டுவிட்டார். தொடர்ந்து வேலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டார். இவரது இளைய மகள் சோபியாவுடன் விடுதலை பெற்று சென்றுவிட்டார். மற்றைய நான்கு குழந்தைகளும் வேலை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டன. நியுயார்க் சட்டத்தை நிறைவேறும் வரை ஐசக் என்பவரிடம் வேலை செய்தார். இவரது முன்னாள் முதலாளி இவர் மகனை ஏமாற்றி விற்றுவிட்டார். நீதிமன்றத்தில் முறையிட்டு சில மாதங்களில் தன் மகனை மீட்டார். வெள்ளையருக்கு எதிராக வழக்கு தொடர்ந்த கறுப்பினப் பெண்களுள் முன்னோடி ஆவார். கிறிஸ்தவ சமயத்தில் ஈடுபாடு கொண்டார். புதிய முதலாளியின் வீட்டில் வீட்டுவேலைகளைச் செய்துவந்தார்.

**பேச்சு உரைகள்**
1843 ஆண்டில் தன் பெயரை சோஜோனர் டுரூத் என மாற்றினார். மெத்தடிஸ்ட் கிறிஸ்தவரானார். அடிமைத்தனத்தை எதிர்த்து குரல் கொடுத்தார். நார்த்தாம்டன் கல்விக் கழகத்தில் இணைந்தார். அது அடிமைத்தான ஒழிப்பாளர்களால் நிறுவப்பட்டது. மகளிரின் உரிமைக்காகவும், சமய நல்லிணக்கத்துக்காகவும் போராடியது. இருநூற்றுக்கும் அதிகமானவர்களைக் கொண்டிருந்த இந்த இயக்கம், போதிய ஆதரவின்றி பின்னாளில் முடங்கியது. நரேட்டிவ் ஆஃப் சோஜோனர் டுரூத்: எ நார்த்தன் சிலேவ் என்ற தன் நூலை தோழிகளிடம் தந்தார். மாசாசூசெட்சில் நடந்த பெண்களுக்கான உரிமை மாநாட்டில் பேசினார்.
1851 ஆம் ஆண்டில் பேச்சாளார் ஆனார். ஒஹியோ மாநிலத்தில் நடைபெற்ற பெண்ணுரிமை மாநாட்டிலும் கலந்துகொண்டார். இங்கு தான் இவரது பிரபலமான உரையான "நான் பெண்ணல்லவா" நிகழ்த்தப்பட்டது. பின்னாட்களில் ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் உரைகளை நிகழ்த்தினார்.


**பிற உரைகள்**
மாப் கன்வென்சன், 1853: பெண்கள் எப்படியேனும் தங்கள் உரிமைகளைப் பெற்றிடுவர் என முழக்கமிட்டார். கேட்பவர்களின் பதிலுரைக்கு ஏற்பவே பேசினார்.
அமெரிக்க சமவுரிமை கழகம், 1867 : அமெரிக்க சமவுரிமை கழகத்தில் தன் பேச்சை தொடங்கினார். இவரது உரைக்கு வரவேற்பு கிடைத்தது. இதன் மூலம் முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவரானார். உரையை மூன்று பிரிவுகளில் நிகழ்த்தினார். முதல் பிரிவில் கறுப்பினத்து பெண்களின் உரிமைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். இரண்டாவது பிரிவில், விவிலியம் கதைகளை குறிப்பிட்டு சமவுரிமையின் தேவையை வலியுறுத்தினார். இறுதிப் பிரிவில், மகளிர் வாக்களிப்பதற்கான உரிமையை பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்.
நீக்ரோக்களின் விடுதலையை நினைவு கூறும் எட்டாவது ஆண்டு, 1871: மக்கள் அதிகளவில் கூடியிருந்தனர். இவரது இளைய பருவத்தைப் பற்றி சிறு குறிப்பை கூறி பேச்சைத் தொடங்கினார். இவரது முதலாளிகளின் கொடுங்குணத்தைப் பற்றியும் கூறிவந்தார். முதலில் வெள்ளையரை வெறுத்ததாகவும், பின்னர் இயேசுவை சரணடைந்ததாகவும், அனைவரையும் விரும்புவதாக தெரிவித்தார். அடிமைகளின் விடுதலையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, இறைவனிடம் வேண்டிய தன் வேண்டுகோள் பலித்தது என்றும் கூறினார். கறுப்பினத்தவர்களுக்கு இடம் வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**செயற்பாடுகள்**
1843இல் அட்வெண்ட் மதப் பிரிவை ஏற்றுக் கொண்டார். நார்த்தாம்டனின் இருந்த வீட்டை விற்றுவிட்டு, மிச்சிகனில் வீடு வாங்கினார். குடிமைப் போரில், அரசிற்கு உதவினார். பல கறுப்பின வீரர்களை தெர்ந்தெடுத்தார். தேசிய மீட்புக் குழுவிலும் முக்கியப் பணியாற்றினார். அமெரிக்கா வாழ் ஆப்பிரிக்கர்களின் முன்னேற்றத்திற்கு உழைத்தார். 1870 ஆண்டில், அடிமைகளுக்கு நிலம் பெற்றுத் தர உதவினார். வெள்ளை மாளிகையில் அதிபரை சந்தித்து இதுகுறித்து பேசினார். அடிமை ஒழிப்பு, பெண்ணுரிமைகள், சிறை சீர்திருத்தம் குறித்து பல உரைகளை நிகழ்த்தினார். இவர் 1883 ஆண்டில் நவம்பர் 26 இல் இறந்தார். மூவாயிரத்திற்கும் அதிகமானோர் கூடி இவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

**நினைவுப் பரிசுகளும் விருதுகளும்**
1892 - ட்ரூத், ஆபிரகாம் லிங்கனுடன் ஏற்பட்ட சந்திப்பை பிராங்க் கோர்ட்டர் என்பவர் படமாக வரைந்தார்.
1969 - இடதுசாரி அமைப்பு தன் பெயரை இவரின் பெயரைக் கொண்டு மாற்றிக்கொண்டது.
1971 - நியூ யார்க் நகரில் உள்ள நியூ பாட்சு பல்கலைக்கழகத்தின் நூலகத்திற்கு இவரது பெயர் இடப்பட்டுள்ளது.
1987 - அமெரிக்க அரசின் அஞ்சல் துறை இவரின் நினைவாக அஞ்சல் தலை வெளியிட்டு சிறப்பித்தது.
1997 - நாசாவின் செவ்வாய் கோளை ஆய்வதற்கான திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட ரோபோவிற்கு இவரது பெயர் சூட்டப்பட்டது.
2002 - மொலேஃபி கேடே அசாண்டே என்ற கல்வியாளர், உயர்ந்த நூறு அமெரிக்க வாழ் ஆப்பிரிக்கர்களில் இவரும் ஒருவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.



# மதுரை வீரன் தானே-வசூலில் பட்டய கிளப்பும் 'வீர தீர சூரன்'




சித்தா' பட இயக்குனர் அருண் குமார் இயக்கத்தில் விக்ரம் அவரது 62-வது படமாக 'வீர தீர சூரன்' படத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, சித்திக், துஷரா விஜயன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ரியா ஷிபு தயாரித்துள்ள இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

மதுரையை கதைக்களமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 'வீர தீர சூரன்' படம் பல தடைகளை தாண்டி வெளியானது.

திரைப்படத்தின் கதைக்களம் வேகமாகவும், விறுவிறுப்பாகவும் உருவாகியுள்ளது. சீயான் ரசிகர்களுக்கு இப்படம் ஒரு ட்ரீட்டாக அமைந்துள்ளது.

திரைப்படம் வெளியாகி ஒரு வாரம் முடிவடைந்த நிலையில் 37 கோடி ரூபாயை வசூலித்துள்ள நிலையில் தற்பொழுது திரைப்படம் உலகளவில் 52 கோடி ரூபாயை வசூலித்துள்ளதாக படக்குழு புது போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளனர். திரைப்படம் இந்த வார இறுதியில் அதிகம் வசூலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



90களில் கலக்கிய நாயகிகளை எப்போதுமே மக்களால் மறக்க முடியாது. அப்படி பாலிவுட் சினிமாவில் ஒரு காலத்தில் முன்னணி நாயகியாக எல்லா டாப் நடிகர்களுடனும் நடித்து பிரபலமானவர் கரீனா கபூர் கான்.

இவர் பிரபல நடிகர் சயீப் அலிகானை திருமணம் செய்துகொள்ள இவர்களுக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், நடிகை கரீனா கபூர் லேட்டஸ்ட்டாக தனது இன்ஸ்டாவில் வெளியிட்ட அழகிய புகைப்படங்கள் இதோ,

# கூலி திரைப்படத்தின் புதிய அப்டேட்..




நடிகர் ரஜினிகாந்த் மற்றும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் உருவாகி வரும் திரைப்படம் கூலி.

இந்தப் படத்தின் டைட்டில் வீடியோ மற்றும் பாடல் க்ளிம்ப்ஸ் உள்ளிட்டவை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு வீடியோக்களும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றன.கூலி படத்தின் படப்பிடிப்பு பணிகள் முடிவடைந்துள்ளது.

இதனை படக்குழு கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர். மேலும், படப்பிடிப்பு நிறைவடைந்ததையொட்டி ஒரு கிளிம்ப்ஸ் வீடியோவை படக்குழு வெளியிட்டது.கூலி படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இந்தப் படத்தில் சத்யராஜ், நாகர்ஜுனா, சௌபின் ஷாஹிர், சுருதிஹாசன், பகத் பாசில், ரெபா மோனிகா ஜான் மற்றும் உபேந்திரா ஆகியோர் நடிக்கின்றனர். இந்தப் படத்திற்கு கிரிஷ் கங்காதரன் ஒளிப்பதிவு செய்தார். அன்பறிவ் சண்டைக் காட்சிகளை இயக்கினார்.

இந்நிலையில், கூலி படத்தின் புதிய அட்டேட் ஒன்றை நாளை வெளியிடப்படும் என்று படக்குகுழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

# Sumo படத்தின் ரிலீஸ் தேதி வெளியீடு




இயக்குநர் ஹோசிமின் இயக்கத்தில் சுமோ என்கிற திரைப்படத்தில் நாயகனாக சிவா நடித்துள்ளார். இப்படத்தில் பிரியா ஆனந்த் நாயகியாகவும் நடித்துள்ளார்.

இப்படத்தில் யோகிபாபு, வி.டி.வி. கணேஷ் ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

மல்யுத்த வீரர்களின் வாழ்க்கையை மையமாக வைத்து தயாராகி உள்ள இப்படத்தில், மல்யுத்த வீரர் யோஷினோரி தாஷிரோவும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டே வெளியாக வேண்டிய இத்திரைப்படம் கொரோனா உள்ளிட்ட பல காரணங்களால் தள்ளிப்போனது.

இந்நிலையில், 'சுமோ' திரைப்படம் இந்தாண்டு அக்டோபர் மாதம் வெளியாக இருப்பதாக படக்குழு அறிவித்தது ஆனால் சில சூழ்நிலை காரணமாக படத்தை வெளியிட முடியவில்லை. தற்பொழுது படத்தின் புதிய ரிலீஸ் தேதியை படக்குழு நாளை மாலை 5 மணிக்கு வெளியிடவுள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளனர். அதில் இந்த தடவை மிஸ்ஸே ஆகாது என தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# நான் கொஞ்சம் பூமரா ஆகிட்டேனானு தெரியல

சித்தா' பட இயக்குனர் அருண் குமார் இயக்கத்தில் விக்ரம் அவரது 62-வது படமாக 'வீர தீர சூரன்' படத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, சித்திக், துஷரா விஜயன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ரியா ஷிபு தயாரித்துள்ள இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். மதுரையை கதைக்களமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 'வீர தீர சூரன்' படம் பல தடைகளை தாண்டி வெளியானது. திரைப்படத்தின் கதைக்களம் வேகமாகவும், விறுவிறுப்பாகவும் உருவாகியுள்ளது. சீயான் ரசிகர்களுக்கு இப்படம் ஒரு ட்ரீட்டாக அமைந்துள்ளது. திரைப்படம் வெளியாகி ஒரு வாரம் முடிவடைந்த நிலையில் 37 கோடி ரூபாயை வசூலித்துள்ளது. சமீபத்தில் நடந்த நேர்காணல் ஒன்றில் இயக்குனர் அருண்குமார் பங்கேற்றார். அப்பொழுது திரையரங்கில் மொபைல் யூஸ் செய்வர்களைப் பற்றிய கருத்தை பதிவிட்டுள்ளார். அதில் அவர் " திரையரங்கில் மொபைலை எடுத்து ஃபோட்டோ எடுப்பவரை பார்த்தால் கோவமாக வரும். "திரையரங்கில் படம் ஆரம்பித்த பிறகு, படத்தின் காட்சிகளை செல்போனில் படம் பிடிப்பது, ஸ்டேடஸ் வைப்பது, இடையில் ஸ்நாக்ஸ் சாப்பிடுவது, படம் ஆரம்பித்த பிறகு டார்ச் அடித்துக் கொண்டு சீட்டை தேடுவது போன்ற செயல்கள் அதிருப்தி அளிக்கிறது. மக்கள் படத்தை உன்னிப்பாக கவனித்தால்தான் கதையோட்டம் புரியும், இதுபோன்ற இடையூறுகள் காட்சிகளின் ரசனையை குறைக்கும்" என தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# 'Love Marriage' :பர்ஸ்ட் சிங்கிள் வெளியீடு




அறிமுக இயக்குநர்சண்முக பிரியன் இயக்கத்தில் விக்ரம் பிரபு நடிக்கும் புதிய படத்திற்கு 'லவ் மேரேஜ்' என்று பெயரிட்டுள்ளனர்.

இப்படத்தில் விக்ரம் பிரபுவுக்கு ஜோடியாக சுஷ்மிதா பட் நடிக்கிறார். மேலும் இப்படத்தில் மீனாட்சி தினேஷ், ரமேஷ் திலக், அருள்தாஸ், கஜராஜ், முருகானந்தம் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சிறப்புத் தோற்றத்தில் சத்யராஜ் நடித்திருக்கிறார்.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி மக்களின் கவனத்தை பெற்றது. ஷான் ரோல்டன் இசையமைத்துள்ள இப்படம் கோடை விடுமுறையில் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.இந்நிலையில் படத்தின் முதல் பாடலான கல்யாண கலவரம் பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்பாடலை ஷான் ரோல்டன் எழுதி பாடியுள்ளார்.திருமணம் தாமதமாவதால் ஒருவர், குடும்பத்திலும் சமூகத்திலும் எதிர்கொள்ளும் பிரச்சினை மற்றும் சிக்கல்களைப் பேசும் படமாக இப்படம் உருவாகியுள்ளது.



டிராகன் படம் சமீபத்தில் வெளிவந்து மாபெரும் வெற்றியடைந்தது. இப்படத்தின் மூலம் ஒட்டுமொத்த தமிழக ரசிகர்களின் மனதை கொள்ளைகொண்டுள்ளார் நடிகை கயாடு லோஹர். இவர் மலையாள சினிமா மூலம் நடிகையாக அறிமுகமாகியுள்ளார். தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை வெளியிட்டு தனக்கென்று தனி ரசிகர்கள் பட்டாளத்தை உருவாக்கியுள்ளார்.

மேலும் சமீபத்தில் வெளிவந்த டிராகன் படம் மாபெரும் வெற்றியை இவருக்கு தேடி கொடுத்துவிட்டது. இதன் மூலம் தமிழ் சினிமா ரசிகர்கள் மத்தியில் தனக்கென ஒரு இடத்தை பிடித்து கொண்டார். இந்நிலையில், தற்போது இவர் அழகிய உடையில் எடுத்திருக்கும் புகைப்படங்கள் இதோ,

# ரெடின் கிங்ஸ்லி - சங்கீதா தம்பதிக்கு அழகிய பெண் குழந்தை







நெல்சன் இயக்கத்தில் வெளியான 'கோலமாவு கோகிலா' படத்தின் மூலம் நடிகராக அறிமுகம் ஆகியவர் ரெடின். இந்த படம் இவருக்கு தமிழ் சினிமாவில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தி கொடுத்தது. இந்த படத்தில் தனது நகைச்சுவையினால் அனைவரையும் கவர்ந்தார். இப்படத்திற்கு பின்னர் நகைச்சுவை நடிகராக தொடர்ந்து நடித்து வந்தார் ரெடின்.

நடிகர் சிவகார்த்திகேயனின் 'டாக்டர்' படத்தில் இவரது நகைச்சுவை அனைவரையும் கவர்ந்தது. அதன்பின்னர் விஜயுடன் 'பீஸ்ட்' மற்றும் ரஜினியுடன் 'ஜெயிலர்' படத்தில் நடித்து இருந்தார். இந்த நிலையில் கடந்த 2023-ம் ஆண்டு சின்னத்திரை நடிகையான சங்கீதாவை காதலித்து திருமணம் செய்து கொண்டார். அதனை தொடர்ந்து இத்தம்பதி சமூக வலைத்தளங்களில் அவ்வப்போது புகைப்படங்களை வெளியிட்டு வந்தனர். கடந்த சில தினங்களுக்கு முன்பு மனைவி சங்கீதாவுக்கு பிரமாண்டமாக வளைகாப்பு நிகழ்ச்சியை ரெடின் நடத்தி இருந்தார். பிரபலங்கள், சின்னத்திரை பிரபலங்கள் என பலரும் கலந்து கொண்டு தம்பதியை வாழ்த்தி இருந்தனர்.

இந்த நிலையில், ரெடின் கிங்ஸ்லி- சங்கீதா தம்பதிக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

ரெடின் கிங்ஸ்லி தனது மகளை கையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் அழகிய புகைப்படத்தை பகிர்ந்து இந்த தகவலை சங்கீதா தெரிவித்துள்ளார். இதுதொடர்பான புகைப்படங்கள் வைரலான நிலையில் ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# ’தீயவர் குலை நடுங்க’ படத்தின் முதல் பாடல் ரிலீஸ்




ஐஷ்வர்யா ராஜேஷ் சமீபத்தில் நடித்து வெளியான சுழல் 2 வெப் தொடர் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இதைத்தொடர்ந்து அடுத்ததாக ‘தீயவர் குலை நடுங்க’ என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை அறிமுக இயக்குநரான தினேஷ் லக்ஷ்மனன் இயக்கியுள்ளார். இப்படத்தின் முதல் பாடலான அந்திபேர அழகலியே பாடல் நாளை வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இப்படத்தில் ஐஷ்வர்யா ராஜேஷுடன் அர்ஜுன், ராம்குமார் சிவாஜி, ஜிகே ரெட்டி, பிரவீன் ராஜா, பிராங்ஸ்டர் ராகுல் மற்றும் தங்கதுரை முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்தை ஜி அருள் குமார் தயாரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. திரைப்படம் விரைவில் வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# ரசிகர்கள் பேராதரவோடு 50 நாட்களை கடந்து திரையரங்குகளில் வெற்றி நடை போடும் ’ஃபயர்



'தங்க மீன்கள்' மூலம் ராம், 'குற்றம் கடிதல்' வாயிலாக பிரம்மா, 'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்' ஊடாக பாலாஜி தரணிதரன், 'ரம்மி' வாய்ப்பால் பாலகிருஷ்ணன் என பல்வேறு திறமைமிக்க இயக்குநர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் மீது வெளிச்சம் பாய்ச்சியவரும், ஜெ எஸ் கே ஃபிலிம் கார்ப்பரேஷன் நிறுவனம் மூலம் தேசிய விருது பெற்ற வெற்றிப் படங்களை தயாரித்தவருமான ஜெ எஸ் கே சதீஷ் குமார், 'தரமணி' திரைப்படத்தில் நடிகராக அறிமுகமாகி, 'கபடதாரி', 'ஃபிரெண்ட்ஷிப்', 'அநீதி', 'வாழை' என நடிகராகவும் தொடர்ந்து தன்னை திறம்பட வெளிப்படுத்தி பாராட்டுகளை அள்ளி வருகிறார்.

ஜே எஸ் கே என்று திரையுலகினரால் அன்போடு அழைக்கப்படும் இவர், முதன்முறையாக இயக்குநர் அவதாரம் எடுத்த படம் தான் 'ஃபயர்'. பிப்ரவரி 14 அன்று திரையரங்குகளில் வெளியான் 'ஃபயர்', 50 நாட்களைக் கடந்தும் வெற்றி நடை போட்டு வருகிறது.

பெரிய நட்சத்திரங்கள், இயக்குநர்களின் படங்களின் ஆயுட்காலமே ஒன்று அல்லது அதிகபட்சம் இரண்டு வாரங்கள் என ஆகிவிட்ட இந்த காலகட்டத்தில் 'ஃபயர்' படத்தின் மாபெரும் வெற்றி ஜே எஸ் கே மற்றும் படக்குழுவினரை மட்டுமின்றி ஒட்டுமொத்த தமிழ் திரையுலகத்தையே உற்சாகப்படுத்தி உள்ளது.

இந்த ஆண்டு சுமார் 80 படங்கள் இதுவரை வெளியாகியுள்ள நிலையில் 'டிராகன்', 'குடும்பஸ்தன்' உள்ளிட்ட வெகு சில திரைப்படங்களே லாபத்தை ஈட்டியுள்ளன. இந்நிலையில் பெரும்பாலும் புதுமுகங்கள் மற்றும் அறிமுக இயக்குநர் கூட்டணியில் உருவான 'ஃபயர்' இத்தகைய வெற்றியை ஈட்டியுள்ளது கதையையும் திறமைகளையும் மட்டுமே நம்பி படமெடுக்கும் தயாரிப்பாளர்களுக்கும் இயக்குநர்களுக்கும் பெரும் நம்பிக்கையை ஊட்டி உள்ளது. இப்படத்தை ஜே எஸ் கே ஃபிலிம் கார்ப்பரேஷன் பேனரில் தயாரித்திருப்பதோடு, பிரதான பாத்திரமொன்றில் ஜெ எஸ் கே நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

'ஃபயர்' படத்தின் வெற்றியை தொடர்ந்து படங்களை இயக்குவதற்கும், நடிப்பதற்கும் ஜே எஸ் கே-க்கு அழைப்புகள் வந்த வண்ணம் உள்ளன. இது பற்றி கூறிய அவர், "நல்ல உள்ளடக்கத்தை தமிழ் ரசிகர்கள் எப்போதும் ஏற்பார்கள் என்பதற்கு 'ஃபயர்' வெற்றியே சாட்சி. இதற்காக தமிழக மக்களுக்கும், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும், படக்குழுவினருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தரமான படங்களை தொடர்ந்து தயாரித்து இயக்குவதோடு மட்டுமில்லாமல், சவாலான வேடங்களில் தொடர்ந்து நடிப்பேன்," என்றார்.



நடிகை மாளவி
மோகனன் ட்ரெ
உடையில் பேஷ
ஷோவில் கலந்
கொண்டிருக்கும் அ
ஸ்டில்கள்.
கவர்ச்சியாக எ
சென்று இருக்கி
பாருங்க.

நடிகை சித்தி இத்னானி சேலையில் ஹாட் போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்கள். ரசிகர்களை கவரும் அழகிய ஸ்டில்கள் இதோ.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# திரையரங்குகள் கிடைக்காமல் தவிக்கும் உயிர் மூச்சு




பிராட்வே சுந்தர் இயக்கத்தில் தீபா சங்கர், மீசை ராஜேந்திரன், கிங்காங், டெலிபோன் ராஜ், பெஞ்சமின்,விக்னேஷ்,சஹானா ஆகியோர் நடித்த உயிர் மூச்சு திரைப்படம் ஏப்ரல் 3ம் தேதி திரையரங்குகளில் ரிலீசாகிறது..

முதலுதவி பற்றிய மையக்கருத்துடன் வரதட்சணை கொடுமை, லஞ்சம் ஊழல், மதுபோதையால் ஏற்படும் சீரழிவு பற்றிய கதை களத்துடன்., தமிழ் திரை உலகில் முதன் முதலில் வில்லனாக அறிமுகமாகும் டெலிபோன் ராஜின் வில்லத்தனத்தில் விறுவிறுப்பான திரைக்கதையுடன் உருவாகி இருக்கும் உயிர் மூச்சு திரைப்படம் தியேட்டர்கள் கிடைக்காமல் தவித்து வருகிறது...

இது பற்றி நடிகர் மீசை ராஜேந்திரன் கூறும் போது..

நான் இதுவரை ஏற்காத புதிய வேடத்தில் உயிர் மூச்சு திரைப்படத்தில் நடித்திருக்கிறேன்.. நடிகை தீபாவின் நீதிமன்ற காட்சி வரும்போது நான் என்னை அறியாமல் கண் கலங்கி விட்டேன் அந்த அளவுக்கு சிறப்பாக நடித்திருக்கிறார்..

இன்றைய காலகட்டத்திற்கு தேவையான கதையை அத்திமரப்பட்டி விவசாயி ஜோதிமணி எழுதியிருக்கிறார்., தற்போது கோடைகால விடுமுறையில் பெரிய நடிகர்களின் படங்கள் பல வருவதால் நல்ல கதை அம்சம் கொண்ட உயிர் மூச்சு திரைப்படத்திற்கு தியேட்டர்கள் கிடைக்காமல் இருப்பது ஏமாற்றம் அளிக்கிறது.. விரைவில் தமிழகமெங்கும் இந்த திரைப்படத்திற்கு தியேட்டரில் அதிகரிக்கும் என நம்புகிறேன் என்று கூறினார்..

இந்த திரைப்படத்தை இயக்கிய பிராட்வே சுந்தர் ஏற்கனவே அரசியல் சதுரங்கம், விதி எண் 3, கருப்பு பக்கம் ஆகிய திரைப்படங்களை இயக்கி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# HIT 3 படத்தில் நடிக்கும் கார்த்தி?



தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நானி. கடைசியாக இவர் நடிப்பில் வெளியான படம் 'சூர்யாவின் சனிக்கிழமை' படம் வசூல் மற்றும் விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்றது.

இதைத் தொடர்ந்து 'ஹிட் 3 படத்தில் நானி நடித்துள்ளார். ஹிட் 3 படத்தை பிரபல இயக்குநர் சைலேஷ் கொலானு இயக்குகிறார்.

பிரசாந்தி திபிர்னேனி தயாரிப்பில் உருவாகும் இப்படம் வரும் மே மாதம் 1 ஆம் தேதி திரைக்கு வருகிறது. ரத்தம் தெறிக்கும் கிரிமினல் ஜானரில் உருவாகியுள்ள ஹிட் 3 படத்தின் டீசரரை படக்குழு அண்மையில் வெளியிட்டது. போலீஸ் கதாபாத்திரத்தில் நானி இப்படத்தில் நடித்துள்ளார். இந்நிலையில் படத்தின் முதல் பாடலான ப்ரேம வெல்லுவா பாடலை படக்குழு வெளியிட்டு நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் படத்தில் நடிகர் கார்த்தி கௌரவ வேடத்தில் நடித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் ஹிட் 4 படத்தில் கார்த்தி கதாநாயகனாக நடிக்க வாய்ப்பு இருப்பதாக நெட்டிசன்கள் கூறிவருகின்றனர். இதனால் படத்தின் மீதுள்ள எதிர்ப்பார்ப்பு அதிகரித்துள்ளது. இதுக்குறித்த அதிகார்ப்பூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.






## வாடிய பார்வை

வாசலில் யாரோ
வந்தவர் தானென்று
வாசலைப் பார்க்கிறார்
வாடிய பார்வையில் .....
வெளியிலே போகாமல்
வீட்டுக் குள்ளே
வழியின்றி நடந்தே
வாழ்க்கையைக் கடத்தி
எதுவந்த போதும்
எடுத்துக் கொள்ளும்
முதுமையின்
நிலைமையும்
முரண்பாடும்
இதுவே!



**வைரமணி**
சென்னை

## எண்டிசை!

சவலை வெண்பா!

கிழக்கு வடக்குடன்
கேண்மையாம் தெற்கே

அழகான மேற்கும்
அமைந்து.......

நாற்றிசை நானிலம்
சாற்றிடக்காணுமே

போற்றிடுதல்
என்றும் பொலிவு!

தென்கிழக்கு தென்மேற்கு
தேனாம் வடமேற்கும்

அன்பாய் வடகிழக்கும்
ஆக்கிடும் ..........

பல்லாற்றும்
மக்கள்தாம்
பாங்காக
வாழ்ந்திட
நல்லெண்
திசையே
நலம்!



**முனைவர் இராம. வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## கோலம்

அவள் ஒரு நாள் சிக்கு
கோலம் போட்டாள்
அதில் நான் சிக்காமல்
தப்பித்துக்கொண்டேன்.....

இன்னொரு நாள் பூக்கோலம்
இட்டாள் நான்
வண்டாய்
மாட்டிக்
கொண்டேன்



**தேன்ராஜா**
நெய்வேலி'

## நிரந்தரம்

பசையிருந்தால் உறவுகள்
நெருங்கும் பிரபலமானால்
ஆதரவாளர் பெருகுவர்
வசீகர தோற்றத்தால் ஈர்க்கும்
வேட்கை இவை யாவும்
நிலையற்ற மாற்றங்கள்

ஆசை காட்டி மோசம்
விளைவிப்பர்
பணமீட்ட குறுக்குப் பாதை
நாடாதே இழப்பீட்டால்
மாய்த்துக் கொள்ளாதே
படிப்படியாய்
முன்னேறுவதே
உத்தமம்



**பி. திலகவதி,**
சென்னை.

## நான் ஓய்வெடுக்கும் நேரம்

புறக்கணிக்கப்பட்ட
வர்ணங்களால்
அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன
பூக்கள்

விருப்பப்படி வட்டமடித்து
வரும் வண்ணத்துப் பூச்சிகள்
வெவ்வேறு பூக்களில்
அமர்கின்றன

மரத்தினடியில் நிழலாட
சும்மா நிற்கும் மரங்களை
கிச்சுக் கிச்சு மூட்டி
விளையாடுகின்றன காற்றின்
கைகள்

அங்காடிகளின் முதல்
தளத்தில் குளிரூட்டப்பட்ட
அறைகள் முழுவதுமாய்
மூடப்பட்டிருக்கின்றன...

தார்ச்சாலையில் உச்சி
நேரத்தில் ஆட்கள் வேலை
செய்கிறார்கள்

மதிய உணவு
இடைவேளையில்
அணி வகுத்து நிற்கும்
வாகனங்களை வழிமறித்துப்
பசியூட்டுகின்றன சிவப்பு
விளக்குகள்

நீலவானம் மேகங்களுக்
கிடையில் மூடியும் மூடாமல்
காட்சியளிக்கிறது

பரபரப்பில் சிதறித் தெறிக்கும்
கவிதைகள்
நான்
ஓய்வெடுக்கை
யில்
வந்தமர்கின்றன



**ம.திருவள்ளுவர்**

## சிறகடிக்க ஆசை

பரந்த நீல வானத்தில்
விரிந்து பறக்க ஆசை

பாரமில்லா மனத்தோடு
தூரப் பறக்க ஆசை
இதயத்தில் ஈரத்தோடு
இமயம் தொட ஆசை

காற்றுக்கு வலிக்காது
நீருக்கு வேர்க்காது
நிலவில் பறக்க ஆசை

எல்லையில்லா
நிலத்தில் எல்லோரும்
நேசிக்க எங்கும் இன்ப
ஊற்றாகி சிறகை விரிக்க
ஆசை

வஞ்சமில்லா மானிடரும்
கொஞ்சு தமிழ்
பேசி வர நெருப்புக்கும்
குளிர் வந்து நேசத்தை
உமிழ்ந்து விடும்

சீரான சிந்தனையில்
நேரான பாதை சென்று
யாருக்கும் அஞ்சாமல்
சிறகுக்கு வலிக்காமல்
ஊரெங்கும் போக வேண்டும்
நம்பிக்கை
துணையாகி
நாடெல்லாம்
பறக்க
வேண்டும்.



**தமிழ்நிலா**

பிள்ளைக்கு தூளி
கட்டிவிட்டு வயலுக்கு
போகும் அம்மா '
தாதி கிழவி ஆகி
பார்த்துக்கொள்கிறது
மரம் .

**சிவசந்திரன்.**
மதுரை

## திரைப்படக் கவிதை

காதல் ஓவியம் கண்டு
உள்ளம் கொள்ளைக்
கொண்டு
உலகம் சுற்றும் வாலிபனாக
துள்ளித் திரிந்த
காலமெல்லாம்
சந்தோஷக் கனவாகிக்
கடக்க.....

அவள் மெல்லச் சிரித்து
கைக் கொடுக்கும் கையாக
மாலையிட்டாள் ஓர் மங்கை
சொல்லத் துடிக்கும்
மனசோடு காலமெல்லாம்
காதல் சொல்ல...

வீடு மனைவி மக்களென
ஜாடிக்கு ஏத்த மூடியாக
வரவு நல்ல உறவாக
வாழ்க்கை சக்கரம் உருள
எல்லாம் இன்பமயம்

பௌர்ணமி நிலவில்
அந்தமான் காதலி

நினைவே ஓர் சங்கீதமாக
கரையெல்லாம் செண்பகப்
பூவோடு காலமெல்லாம்
காதல் வாழ்க என
அலைகள் ஓயாதக் கடலில்
மனசுக்குள்
மத்தாப்பூ மலர
அவள் ஒரு
தொடர்கதை ...



**N PADMAVATHY**
Chennai.

## நறுக்ஸ் நொறுக்ஸ்

நம்மை வைத்து
நாமே பூட்டிக் கொள்ளும்
செவ்வகச் சிறை...
செல்போன்!

**ரிஷிவந்தியா**
தஞ்சாவூர்.

## முதல் காலடி

வண்ண தானம்
செய்கிறது_ மயில்
வாழ்வை மகிழ்விக்க!

வாழ்வை வெல்லும் படி
வலை பின்னி காட்டுகிறது
சிலந்தி!

எண்ணத் தடத்தை
எண்ணிய வழியில்
தன் குழியை அடைகின்றன
எறும்புகள்!

ஊறும் உணர்வும்
உதிக்கும் சிந்தனையும்
ஊருக்கு பயன் என்கிறது
குருவிக்கூடு!

இயலாமையால் ;
அல்ல
முயலாமையால்தான்
தோல்வி என்பதை
சொல்கிறது அலை!

அழியாத மூலதனம்
முயற்சியே என்கிறது
அன்றாடம் வருகிற;
பொழுது!

வாழ்வின் சிறப்பு
வாழும் வகையில் தான்
என்பதை உணர்த்துகிறது
காற்றாடி!

முயற்சி செய்யாத போது
தான்
தோல்வியில் முடிகிறது
வாழ்க்கை!

வாழ்க்கை செடியின்
வேரும்;
வாழும் பாதையின்
ஒளியும்;
தன்னம்பிக்கை தான்!

முயற்சித்த படியே இரு!
முன்னேற்ற சிகரத்தின்
முதல் காலடி
உன்னுடையது தான்!!



**வெ. தமிழழகன்**
எம்ஏ பிஎட், சேலம்

## "வறுமையில் வசந்தம்"

ஏழ்மைச் சிரிப்பில்
சோகமான வசந்தம்!

வறுமைப் புன்னகையில்
வறட்சியின் ஈரம்!

பசிக்கும் பட்டினிக்கும்
பதறாத பக்குவம்!

உழைப்பில் மட்டுமே
உற்சாக உற்சவம்!

ஊதியம் வந்திட
உல்லாச கீதம்//

பற்றாக்குறை
கண்டிட
பழைய சோற்று
ராகம்!

பொழுது போக்கில்
காண்பதில்லை இன்பம்!

அழுது புரண்டு
தீர்ப்பதில்லை துன்பம்!

வியர்வைச் சொட்டில்
வருவதே ஆனந்தம்!

கள்ளமில்லா இந்த
உள்ளங்கள்
காலத்தின் தேவைகள்!

பணமே குறிக்கோளாய்
எண்ணி
வாழாத மேதைகள்!



**முகில் தினகரன்,**
கோயமுத்தூர்

## கொடுப்பிணை.!

குழந்தைகளின்
கும்மாள ஆளோட்டம்...
புத்துணர்ச்சி குதூகலம்...
அதம்பரியும் நீருக்குள்
மீனினங்களின் பதபதைப்பு...
அடக்குமுறைக்கு ஆளில்லா
விடுதலை வெறியாட்டம்..
.நீள்தண்டோடு கண்கவர்
அல்லிமலர் சாற்றலும்..
நிரம்ப கலக்கிய நீர்
தீர்த்தவாரியுமாக..
கோடை வெக்கை
குமைச்சலில் இருந்து
அசுவாசமடைகிறார்...
குளத்தங்கரை அரசமரத்துப்
பிள்ளையார்.!

**க.குமாரகுரு,**மயிலாடுதுறை

## அழகு நிலவே...

வானத்து தேவதையொன்று
எனது இன்னல்களைக்
களைய உனது உருவில்
வந்ததடி!
மனமகிழ்வைத் தந்ததடி!

எங்கள் குலம் காக்கும்
குலதெய்வத்தின்
முகம் கண்டேனே!
உன்னுருவில்
என் கண்மணியே!

அமுதமுண்டு
சாகாவரம் பெற்றனரே
தேவர்கள்!
உன் ஓர விழிப்
பார்வையே
எனது ஆயுளைக் கூட்டுமடி
என் ஆருயிரே!

எங்களது வம்சம் காக்க வந்த
வடிவழகே! பூரண சந்திரனின்
முகப்பொலிவே!

என் மனக் காயங்கள்
எல்லாமே உன்னை ஆரத்
தழுவ ஆதவனைக் கண்ட
பனி போல் விலகுமடி!

பசும்பொன்னே
முத்தமிழே வாடா
மலரே!!!!



**கோவைக்கவி புவனா**
கோயமுத்தூர்

## ஆவல் இல்லாதவன்...

அழகின் ரகசியமே...
அன்பின் வடிவமே...
நட்பின் இலக்கணமே...
நம்பிக்கை கொண்டவனே...
இரக்கம் உள்ளவனே...
இரகசியம் காப்பவனே...
இராத்திரி தூக்கம் கெடுப்பவனே...
பண்பில் சிறந்தவனே...
பாகுபாடு இல்லாதவனே...
பார்ப்பவர் நெஞ்சில் நிறைபவனே...
பசித்தவர் கண்டு உதபுவனே...
பழிவாங்கும் எண்ணம் இல்லாதவனே...
பழிப்பவர் எவரையும் பகைக்காதவனே..
பகைவரையும் நட்பாக்க எண்ணுபவனே...
புகைப்பழக்கம் இல்லாதவனே...
புகழுக்கு மயங்காதவனே...
புத்தி சாலியாக திகழ்பவனே...
இன்னும்.... இன்னும்...நல்ல... குணங்கள்
உன்னில் எத்தனையோ உண்டு...
எல்லாம் இருந்து என்ன செய்ய...
பெண்ணின் மனதை அறிய ஆவல்...
இல்லாதவனாய் இருக்கிறாயே....



**எஸ்.மணிவண்ணன்,** ரெட்டிய பட்டி

# நூல் விமர்சனம்

**கொஞ்சும் காதல், கெஞ்சும் கவிதை !**
**(காதலர்களுக்கு மட்டும்)**
**நூல் ஆசிரியர் : கவிஞர் நாவல் காந்தி**
**செல் : 93602 44810.**
**navealgandhi123@gmail.com**
**நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி !**
**முதற்சங்கு பதிப்பகம், 19, மீட் தெரு, கல்லூரிச் சாலை, நாகர்கோயில்–1. செல் : 94420 08269 விலை :ரூ. 70.**


நூலாசிரியர் கவிஞர் நாவல் காந்தி வளர்ந்து வரும் கவிஞர். இவரின் "இன்னும் இருக்கிறது" என்ற நூலில் படித்த கவிதைகள் இன்னும் இருக்கிறது நினைவில்.கொஞ்சம் காதல் கெஞ்சும் கவிதை நூல், காதலர் தினத்தில் வெளிவந்துள்ள காதல் கவிதை நூல். (காதலர்களுக்கு மட்டும்) என்று எழுதி உள்ளார். இந்த உலகில் உள்ள அனைவருமே காதலர்கள் தான். காதலை விரும்பாதவர்கள் யாருமில்லை. காதலை சொந்தக் குடும்பத்தில் எதிர்த்தாலும் திரைப்படத்தில், நாவலில் ஆதரிப்பார்கள். நூல் முழுவதும் காதல்! காதல்! காதல்!

இந்நூல் காதலை காதலிப்பவர்களுக்கு மட்டும் என்று காணிக்கையாக்கி உள்ளார். நாகர்கோயில் இந்து கல்லூரி முதல்வர் முனைவர் பெருமாள், முதியவர் போ. முருகேசன், நாவலாசிரியர் மலர்வதி ஆகியோரின் அணிந்துரை மிக நன்று. நூலின் மகுடத்தில் பதித்த வைரக்கற்களாக ஒளிர்கின்றன. முதற்சங்கு ஆசிரியர் சிவனிசதீஸ் அவர்களின் பதிப்புரையும் மதிப்புரையாக உள்ளது. நூலாசிரியர் நாவல் காந்தி மாற்றுத் திறனாளி. தனி முத்திரை பதித்து வரும் படைப்பாளி. மாற்றுத் திறனாளிகள் அனைவரும் பெருமை கொள்ளும் விதமாக படைத்து வரும் படைப்பாளி. முகநூலிலும் முத்திரை பதித்து வருபவர். முதுமுனைவர் வெ. இறையன்பு இ.ஆ.ப. அவர்கள் சொல்வது போல, எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கும் திறனாளி, படைப்பாளி, பாராட்டுக்கள்.

முதியவர்கள் படித்தாலும், அவர்களை இளையவர்களாக்கி மலரும் நினைவுகளை மலர்விக்கும் ஆற்றல் காதல் கவிதைக்கு உண்டு என்பதை உணர்த்தும் விதமாக கவிதைகள் உள்ளன. இளையவர்கள் மட்டுமல்ல, முதியவர்களும் படிக்கலாம் என்று பரிந்துரை செய்கிறேன். கவிதைக்கு கற்பனை அழகு, கற்பனையும் வாசிக்க அழகு என்பதை மெய்ப்பிக்கும் கவிதை.

தங்கம் வெட்டி எடுக்கப்படுகிறது என்று யார் சொன்னது பெற்றெடுக்கப்படுகிறது நான் சொல்கிறேன் உனைப் பார்த்து.

காதலின் முன்னுரை கண்களில் தொடங்கி, சிந்தையில் கலந்து, உயிரோடு உறவாடுகின்றது. விழி வழி வழியும் காதலை உணர்த்திடும் கவிதை




ஹைக்கூ வடிவில் மிக நன்று.

விழிகள் நான்கும் விளையாடுகிறது காதல் கபடி ! இந்த வரிகளை இப்படி மாற்றினால் சிறந்த ஹைக்கூ ஆகி விடும். இதனை. விளையாடுகிறது காதல் கபடி விழிகள் நான்கு ! என்று எழுதினாலும் ஹைக்கூ நுட்பம் கிடைக்கும்.

நூலாசிரியர் கவிஞர் நாவல் காந்திக்கு வேண்டுகோள் : அடுத்த நூல் ஹைக்கூ வடிவில் முயற்சி செய்யுங்கள். முயன்றால் முடியும். பரிசு நிச்சயம்.

காதலில் வென்றால் காதலி அல்லது காதலன் !

காதலுக்காக கொடி பிடித்து கவிதை வடித்த நூலாசிரியர் கவிஞர் நாவல் காந்திக்கு பாராட்டுக்கள். கௌரவக்கொலை செய்யத் துடிக்கும் மனித விலங்குகள் அனைவருக்கும் இந்த நூலை வழங்கி கட்டாயமாக படிக்க வைத்தால் காதலின் மேன்மையை உணருவார்கள் என்று உறுதி கூறலாம். மழையை நெசவாளிகள், வியாபாரிகள் விரும்புவதில்லை. ஆனால் விவசாயிகள் விரும்புவார்கள். காதலர்களும் மழையை நேசிப்பார்கள். காரணம் என்ன? பதில் கூறும் விதமான கவிதை ஒன்று.

பொழிகிறது அடைமழை நம் இருவரையும் ஒன்றினைக்கிறது ஒரு குடை!

காதலன் காதலிக்குப் பரிசளிப்பதும், காதலி காதலனுக்குப் பரிசளிப்பதும், காதலில் வாடிக்கை. அது குறித்த கவிதை ஒன்று.

கை கடிகாரம் வாங்கித் தந்தாய் நேரம் காட்டுவதை விட அதிக நேரம் காதலையே காட்டுகிறது ! அழகியல் சார்ந்த கவிதைகளும் உள்ளன. காதல் பற்றியே அதிகம் சிந்தித்து, அசை போட்டு வடித்த கவிதைகள் நன்று. சிற்பி சிலை செதுக்கும் கவனத்துடன் கவிதைகள் எழுதி உள்ளார். தேவையற்ற சொற்கள் எதுவுமில்லாமல் செதுக்கி இருப்பது சிறப்பு!

இரும்பானவர்களும் துரும்பாய் தான் போவார்கள் காதல் உருக்கம் வந்து விட்டால். திருவள்ளுவர் காமத்துப்பாலில் வடித்தது போல வடித்துள்ளார்.காதல் நோயில் பிரிவு வந்தால் வாடி விடுவார்கள் என்பதையும் கவிதையில் உணர்த்தியது சிறப்பு. காதலியின் முகத்தை மலர் என்று பல கவிஞர்கள் வர்ணித்து விட்டார்கள். நூலாசிரியர் கவிஞர் நாவல் காந்தி வித்தியாசமாக எழுதி உள்ளார்.

நொடிக்கு நொடி பூக்கும் பூ உன் முகம் ... காதலியின் முகத்தை நிலவு என்றும் பல கவிஞர்கள் எழுதி விட்டனர். இவரும் காதலி முகத்தை நிலவு என்றதோடு நிற்காமல் நிலவை விட உயர்வானது என்கிறார். எப்படி?

வளர்பிறை தேய்பிறை காணாத முழு நிலவு உன் முகம்! காதலிக்கும் காதலனுக்கு தன் காதலி எப்படி இருந்தாலும் தேவதையாகவே தெரியும் என்பது உண்மை. தேவதையின் முகவரி கேட்டாள் ஒருத்தி கொடுத்து விட்டேன் உன் முகவரியை!

காதல் வந்தால் கவிதை வரும் என்பதை ஒப்புதல் வாக்குமூலம் போல வடித்த கவிதை இதோ! காதல் கருவுற்ற உடனேயே பிரசவிக்க தொடங்கி விடுகிறது கவிதைகளாக...

இன்றைய காதலர்களின் தனிப்பெரும் தகவல் தொடர்பு சாதனமாக இருப்பது அளப்பரிய அலைபேசி. காதலர்களுக்குள் ஊடல் வந்து விட்டால் அலைபேசி ஓய்வெடுக்கும் என்பதை உணர்த்தியது சிறப்பு. உன்னோடு சண்டையில் மட்டுமே ஓய்வெடுத்து கொள்கிறது என் கைபேசி. உழைத்துக் கொண்டே இருக்கும் அலைபேசி ஊடலின் போதாது ஓய்வெடுக்கப்படும்.


77-ம் பக்கம் மிகப்பெரிய என்பதற்கு பதிலாக மிகப்பொரிய என்று உள்ளது. அடுத்த பதிப்பில் திருத்தி விடுங்கள். காதல் மணம் பரப்பும் கவிதைகள் நன்று. பாராட்டுக்கள். அட்டைப்பட வடிவமைப்பு உள்ள அச்சு யாவும் நன்று. பதிப்பாளருக்கும் பாராட்டுக்கள்.நூலாசிரியர் நாவல் காந்தி அவர்கள் தொடர்ந்து எழுதிட வாழ்த்துக்கள் பாராட்டுக்கள். அடுத்த நூல் சமுதாயக் கவிதைகள் நூலாகட்டும்

## நினைவில் நின்றவை மனத்தை நிறைத்தவை


பறவை ஒலிகள் எங்கோ கேட்கும்
இசையின் முனகல் இறைவன்அருளில்
முதியோர் கட்டளை விரும்பிய நாங்கள்
நினைவுகள் மனதில் நின்றவையே



கிணற்றுக் குளியல் ஆற்றுக்குளியல்
வாய்க்கால் குளியல் நதியில் கடலில்
விளையாடி மகிழ்ந்தே பொழுதும் போனது
நினைவுகள் மனதில் நின்றவையே



தட்டாம்பூச்சி பொண்வண்டு பூச்சிகள்
பட்டாம் பூச்சிகள் பறப்பதைப் பிடித்து
மெல்லிய உணர்வில் மயங்கிய ஆடல்
நினைவுகள் மனதில் நின்றவையே



வெள்ளை சோற்றை நிலவின் ஒளியில்
நிறைத்து நடுவில் கருப்பு பொட்டாய்
விழுகின்ற சாரில் சுவைத்து உண்டது
நினைவுகள் மனதில் நின்றவையே

செடிகளில் பூக்கும் மலர்களைப் பறித்துக்
காம்பில் வடியும் தேனை உறிஞ்சி
மாலைகட்டி பிள்ளையார் பூசையில் கலந்தது
நினைவுகள் மனதில் நின்றவையே



பள்ளிக்குச் சென்று பாடம்படித்து
ஏற்றம் இறைக்கும் நீரை இறைத்து
இருகைஏந்தி குடித்துத் தாகம் தீர்த்தது
நினைவுகள் மனதில் நின்றவையே

மாலையில் ஒரு குடம் குடிநீர்க் கொணரக்
குளத்துக்குச் சென்று தாமரை மலருடன்
பேசிசிரித்து மீன்கள் கடிக்கும் காலைநகர்த்திய
நினைவுகள் மனதில் நின்றவையே

இரவில் வானில் தோன்றும் விண்மீன்கள்
முதலில் தோன்றும் எண்ணிக்கை மிகவே
அண்ணாந்து பார்ப்பதில் கழுத்தும் வலித்த
நினைவுகள் மனதில் நின்றவையே



**K BANUMATHI NACHIAR**
DIVAGIRI




## நான் ஓய்வெடுக்கும் நேரம்

புறக்கணிக்கப்பட்ட
வர்ணங்களால்
அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன
பூக்கள்

விருப்பப்படி வட்டமடித்து
வரும் வண்ணத்துப் பூச்சிகள்
வெவ்வேறு பூக்களில்
அமர்கின்றன

மரத்தினடியில் நிழலாட
சும்மா நிற்கும் மரங்களை
கிச்சுக் கிச்சு மூட்டி
விளையாடுகின்றன காற்றின்
கைகள்

அங்காடிகளின்
முதல் தளத்தில்
குளிரூட்டப்பட்ட
அறைகள்
முழுவதுமாய்
மூடப்பட்டிருக்கின்றன...
தார்ச்சாலையில்
உச்சி நேரத்தில்
ஆட்கள் வேலை
செய்கிறார்கள்

மதிய உணவு
இடைவேளையில்
அணி வகுத்து நிற்கும்
வாகனங்களை வழிமறித்துப்
பசியூட்டுகின்றன சிவப்பு
விளக்குகள்

நீலவானம்
மேகங்களுக்கிடையில்
மூடியும் மூடாமல்
காட்சியளிக்கிறது



பரபரப்பில் சிதறித்
தெறிக்கும்
கவிதைகள்
நான் ஓய்வெடுக்கையில்
வந்தமர்கின்றன .

**ம.திருவள்ளுவர்**

## ஒன்பான் சுவை!

சவலை வெண்பா!
காப்பியத்தில் ஒன்பான்
சுவைதேவை என்றேதொல்

காப்பியர் கூறினரே!
கண்ணாய்...........

உணவில் அறுசுவை
ஓர்ந்துண்ணல் போலே

மணக்குமொன்
பான்சுவை மன்!

நகைச்சுவை நல்மருட்கை
நல்லுவகை அச்சம்

வெகுளி சமநிலை வீறு
....
இளிவரல் நல்பெருமி
தம்தான் அழுகை

களிப்பாமே காப்பியத்தில்
காண்!

## குழந்தைகள் புத்தக நாள்!

நேரிசை வெண்பா!
வாசிப்பின் ஆர்வத்தை
வண்ணமாய்த் தூண்டிடவும்
நேசமுடன் புத்தகத்தில்
நெஞ்சத்தைப்..பாசமாக
வைத்திடவும் கண்டநல்
வீறுடை நாளன்றோ
புத்தக நாளாம் பொலிவு!

படிக்கும் விருப்பத்தைப்
பாங்காகக்காக்க
துடிப்போடு நூல்களைத்
தேனாய்க்...குடிக்க
குழந்தைகளை
ஊக்குவித்துக்
கூடிப்பயில அழகான
புத்தகநாள் ஆம்!



**முனைவர்.**
**இராம.வேதநாயகம்.**



## மழை நாளின் இரவு

பனி போர்த்திய இரவு
அலைபேசியில் அழைப்பொலி
திரையில் உன்முகம்

அனல் பறக்கும்
அந்த நொடியில்
புதுப்புனல் துளிகள் எங்கும்
என் அன்பே உன் முகம்

ஊதக்காற்றுடன் ஊதா
மின்னல்கள் எழுதுவதெல்லாம்
உன் பெயர் ஓர் கவிதையென

எலும்புவரை ஈரக்காற்று
ஏதேதோ சொல்ல வரும்
மனதின் வலிமையிலா
வலியாலான மொழி

தொடர்பில் இருக்கும்
வினாடிகள் எல்லாம்
இதயத்தின் ’லப்.. டப்’
லவ் டிப்ஸ்
கொடுத்துக்கொண்டே

நாவின் இனிமையும்
நாளின் ஆசீர்வதிக்கப்பட்ட
மணித்துளிகளும் ஈரமில்லா
தொண்டையில் சிறு இருமலை
வரவழைக்கிறது

என்ன ஆச்சு என்று
கேட்கும் குரலில் அனுதாபம்
இல்லை .. அனுகூலமே
வியாபித்து இதயத்தை ஓட
ஓட துரத்தி அலைகிறது

நதியின் பதிவு அலையாத்தி
பகுதியில் வீழ்ந்து
விடுவதுபோல் இருந்தாலும்
சதுப்புநில காடுகள்
வேர்கள்போல கண்களுக்குத்
தெரியாத வேர்கள்
வேகங்களைக்
கட்டுப்படுத்துவதுபோல்
இரவையும் நம்
ஏக்கங்களையும்
கட்டுப்படுத்தி..
பாடாய்ப்படுத்துகிறது நமது
அந்தத் தொலைவு

சரிதான்
இன்றையக்குளிருக்கு
இந்த ஒருக்கப் காதலும்
மெழுகின் சுடரும் ..
நம் காதுகளில் நம்
பெருமூச்சுகளின்
பின்னணியும் துணையாக
விழித்தே நகர்த்துவோம் நம்
இனிய பொழுதுகளை

**ஜவஹர் பிரேம்குமார்**
பெரியகுளம்

## ஊடலும் கூடலும்

சிறு சிறு வாக்குக்களால்
ஓரிரு நாள் உறவோடு
பிரிஞ்சு கெடந்திருந்தாலும்
புருஷனின் ருசியறிவாள்
பிரிவெங்கனம் முடியும்
உறவெப்போது தொடரும்
என்பதல்லவோ அவளின்
தவம் தன் அன்பை, காதலை
உண்ணும் உணவில்
உணர்வோடு
சமைத்தளிப்பாள்;
உவகை மிகுதியால்
தன்னையும் சேர்த்தே
அளிப்பாள்!

**KMD.முத்துக்குமார்,**
மைசூர்.

## அடையாளம்

மொழிதான் உன் முகவரி..
பேச்சுதான் உன்
அடையாளம்... உடைதான்
உன் நாகரிகம்... வளச்சிதான்
உன் பொருளாதரம் ...
வாழ்க்கைதான் உன்
தன்மானம்...
மொழியை மறந்தால் உன்
இனம் அழிந்து போகும்...
உன்னை நீ அறியாவிட்டால்
நீயே அழிந்து போவாய்...
பிற மொழி உன்னை வாழ
வைக்கும்...
தாய் மொழி நம் இனத்தையே
வாழ வைக்கும்...!!

**பொன்.கருணா**
நவி மும்பை

## சதுரங்கம்

அதிகாரம் ஏதுமின்றி
ராணியின் பாதுகாப்பில்
வாழ்ந்தாலும்
ஊருக்கு அவர் ராஜா தான்

ராணிகளை இழந்த
ராஜாக்கள் நீண்ட நாள்
தாக்குப் பிடிப்பதில்லை

வரும்...ம் ஆனா வராது
என்னத்த கண்ணையா
பீச் குதிரைகள் எவ்வளவு
முயன்றாலும்
மூன்று கட்டங்களை
தாண்டுவதில்லை

நிறம் மாறாத
அமைச்சர்கள்
பக்குவமாய் குறுக்கு
சால் ஓட்டி பிழைத்துக்
கொள்வார்கள்

முன்னும் பின்னும் எதிரிகளை
தாக்கும் பலம் மிகுந்த
யானைகளுக்கு
குறுக்குவாட்டில் இருக்கும்
எதிரிகள் கண்ணுக்கு
தெரிவதில்லை



களத்தில் கடைசி வரை
பின் வாங்க தெரியாமல்
வீரமுடன் போராடி
உயிரிழப்பது எளிமையான
சிப்பாய்கள் தான்

சதுரங்கத்தில் மட்டுமல்ல
வாழ்க்கையிலும்

**நாகை பாலா**

## விடுதலைப் போராட்ட வீரர்!

வ.வே.சு.ஐயர்!
(வரகனேரி வேங்கடேச
சுப்பிரமணிய ஐயர்)
நேரிசை வெண்பா!
பன்முக வித்தகர்!
பாங்கான ஆன்மிகர்!
பன்மொழி வல்லுநர்!
பண்புடன் ..அன்பும்
சுறுசுறுப்பும் சேர்ந்திடக்
காணும் வவேசு!
சிறுகதையின்
தந்தையே சீர்!
தமிழ்மரபின் காவலர்!
தக்கநல் வீரர்!

கமழ்ந்திடும் நற்றமிழில்
காணும்... அமைந்த

உவகைப் பனுவல்கள்
உன்னதமாய்க் கண்ட
வவேசுவை
வாழ்த்தல் வளம்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## வாழ்க்கை

அன்புத் துணைவனே!
ஆருயிர்க் கணவனே!

அன்று கண்ணிலே கலந்தாய்!
என் எண்ணத்தில் நின்றாய்!

வண்ண வண்ணக்
கனவுகளை
கண்ணெதிரில்
நனவாக்கினாய்!

திண்ணமான உன் அன்பில்
விண்ணிலே பறந்தேன்!

சின்னச் சின்ன
சந்தோஷங்களை
சன்னமாய்
அனுபவித்தோம்!

அழகான பிள்ளைகள்!
அறிவாக வளர்த்தோம்!

சிறப்பான கல்விதனை
சீராகக் கொடுத்தோம்!

தீமைகள் விலக்கி
திறமைகள் வளர்த்தோம்!
பெருமையான தருணங்களில்
உரிமையுடன் உடனிருந்தோம்!

அவரவர் பாதையில்
சென்றபின்
நாமிருவர் மட்டுமே
தனிமையிலே!

இன்பமாய் நாம் இருவர்
இணைந்தே இதயம் மகிழ
வையகம் சுற்றுவோம்!

இனி என்றென்றும் நமக்கு
தேனிலவே! ஆனந்தமாய்
நம் காதல் வாழ்வை



காவியமாய்த்
தொடர்வோம்!
கவிதையாய் வாழ்வோம்!

**ராதா பாலு**

## மரணம்!

மனிதா!
மரணம் தொடுகிற
இரகசியம்
மறைக்கப்பட்டுள்ளது
அதுஎப்போது
வருமென்பது தெரியாது.
தெரிந்தால் நிம்மதி
பறிக்கப்பட்டு விடும்.

மணிக்கணக்கா?
மாதக்கணக்கா?
வருடக்கணக்காக?
இல்லை மரணம்
என்பது
நொடிக்கணக்கு.

ஏழை பணக்காரன்
சாதி மதமெல்லாம்
மரணத்திற்கு தெரியாது.

காலநேரம் நெருங்கி விட்டால்
கட்டாயம் கல்லறைதான்.

அதனால் உன்னால்
முடிந்தவரை நல்லதை மட்டும்
பூமிக்கு செய்துவிட்டு
புதைந்து போ

மறைந்துபோனாலும்
மண்ணில் பெயர்
நிலைக்க
திருவண்ணாமலை
எழுத்தாளர் ந.சண்முகம்
அய்யாவைப்போல்
வாழ்ந்து காட்டு...!



**கே.எஸ்.ரவிச்சந்திரன்**
மணமேல்குடி.

## "இங்கே இப்படித்தான்"

விண்ணுக்கு நண்பனாய்
மேகக் கூட்டம்

எண்ணிற்குத் தோழமையாய்
கூட்டலும் கழித்தலும்

மண்ணிற்க்கு காவலாய்
மரங்கள் மலைகள்

பண்ணிற்குச்
சுவையாய் எதுகையும்
மோனையும்

கண்ணிற்குக் கவசமாய்
புருவங்கள் இமைகள்

தண்ணீர்க்குச் சகோதரனாய்
குளிர்ச்சியும் சுவையும்

கண்ணீர்க்குத் தடுப்பாய்
ஆறுதலும் அனுசரணையும்



நேர்மைக்குத்
துணையிங்கு
தோல்வியும் துரோகமும்!

**முகில் தினகரன்,**
கோயமுத்தூர்

## கதவிற்கு பின்னால் கடவுள்

ஊரெல்லாம் கொண்டாட்டம்
இவன் மட்டும் யாருமன்றி
திண்ணையில்
அமர்ந்திருக்கிறான்..

பட்டாடை உடுத்தி
வலம்வரும் அம்மன் ஊர்வலம்
கேட்டுக் கொண்டே வெளிர்
ஆடையில் உலாவருகிறது
நிலவு போர்த்திய
அம்மனொருத்தி

இன்றுதான் இறந்த
மகனுக்கு கண்ணீர் அஞ்சலி
செலுத்தியிருப்பார் அப்பா
கலட்டிய தாலியில்
கணவனின் கைரேகை
தேடுகிறாள்
மனைவி இல்லாத அப்பாவின்
சைக்கிளில் கைப்பிடியை
பிடித்து கலங்குகிறான் மகன்

வேட்டு சத்தத்தில்
கலங்கிய உள்ளத்திற்கு
ஊருக்கு வெளியே ஒரு
தனிமைக்குடில் அதில்
யாரும் பார்த்திடாமல்
தாண்டவமாடுகிறார்
தாழிடாமல் வெளியே
நடமாடும் கதவுக்கு பின்னால்
ஒரு கடவுள்..

**சே கார்கவி கார்த்திக்**

## நிழலும் நிஜமும்

அதிகாலைப் பொழுதின்
குளிர்ந்த காற்றின்
சுவாசமாக நீ.........

உச்சிநேர வெயிலில்
மரத்தின் இலையில்
ஓவியமாய் நீ.....

அந்தி நேர
தென்றலில் ஒலிக்கும்
இசையாக நீ......

இரவு நிலவொளியில்
வண்ண ஓவியமாய்
உன்னோடு கைகள்
கோர்த்து கவி
பாட ஆசை கொண்ட
என் நிழலாய் நீ........
என் நிலவாய் நீ.........

கால மரத்தை வேகமாக
உலுக்க உதிரும்
இலைகளோடு
நினைவின் நிழல்........

தொடரும் வாழ்வில்
நிஜங்களோடு வாழ்வோம்



நிழலாய்
அல்ல...
நிஜங்களின்றி
நிழலில்லை

**N.PADMAVATHY**
Chennai

## ‘அடை’

வீட்டில் "இன்று
இரவு என்ன டிபன்?!
வினவினேன்..
‘அடை’ என்றாள் மனைவி..
"அட.. அடையா..!" என்றாள்
மகள்.. "அடச்சே.. அடையா?"
என்றான் மகன்..
நான் எதையும்
காட்டாத முகத்துடன்
மனைவியின் பார்வையில்
இருந்து மெதுவாக
மறைய எத்தனித்தேன்...

**தேன்ராஜா,** நெய்வேலி’

எந்த ஊரையும்
தித்திக்கச் செய்து விடும்
வித்தையை தெரிந்து
வைத்திருக்கிறது
ஒரு கோப்பைத் தேநீர்.
(கவிஞர் பேராவின்
"கோப்பை நிறைய
கவிதைகள்–2)



## கல்வி

பனங்காய் தலைசீவ
பக்குவம் தான் கற்றேன்
முனைப்புடன் நான்கற்ற
முதற்கல்வி யே இதுதான்
அப்பா தந்திட்ட
அருமை யாம் கல்வி
தப்பாதே இந்தத்
தொழில்
தரும் கல்வி
எப்போதும்
கைகொடுத்து
எங்களுக் கே
துணைவரும்!!



**வைரமணி**
சென்னை

## *புரட்டிப்போடும் புத்தகம்*

ஒவ்வொரு முறை புத்தக
த்திருவிழாவிற்குச்செல்லு
ம்போதெல்லாம்...
கைகொட்டிச்சிரிக்கின்றன...
வாங்கியதை ஸ்டேட்ஸ்
மட்டும்
போட்டுவிட்டு..
புரட்டாமல்கூட
விட்டுவிட்ட
புத்தகங்கள்!!



**காளிதாசன்**
நீர்விளங்குளம்

அழகு நிலையம்
போய்வந்தபின், கண்ணாடி
பார்த்ததும் தோன்றுகிறது:
இத்தனை
அழகும்
அவர்களிடமா
வாங்கி
வந்தோம்?



**கே.பி.**
**ஜனார்த்தனன்**



## ஆலமரத்தின் பரிதவிப்பு

மரம் நமக்கான வரம்
வனமில்லையேல்
நாட்டின் வளமில்லை.

மரம் வளர்ப்போம் என
முழக்கமிட்டு சாலை
விரிவாக்க சூழ்நிலையில்
சூழலை அழிக்கின்றோம்.

மரக்கன்றுகள்
நட்டு வளர்ப்போம்
ஆனாலும் பாதுகாத்தலில்
எத்தனை சவால்கள்.

பால் மரம் என்ற
ஆலமரம் போன்ற
மரங்களையாவது
எந்த வகையிலாவது
பெயர்த்து எடுத்து
வேறு இடத்தில்
நட்டாலும்
நன்மை தரும்.

நூற்றாண்டு மரங்களுக்கு
மறுவாழ்வு தந்து
வாழ வைப்போம்
வாருங்கள்...

பாலூட்டி வளர்த்த மரம்
பழம் கொடுத்து,
பார்த்து ரசித்த மரம்
பொருளாதார முன்னேற்றம்,
சாலை விரிவாக்க
நடவடிக்கையால்
பெயர்த்து எறிந்து
பிரிந்து போக
காத்திருக்கையில்
பரிதவிக்கும்
ஆலமரம்!.



**எறும்பூர் கை.**
**செல்வகுமார்,**
செய்யாறு.

## விதியை வெல்வோம்

நீ மெல்ல மெல்ல சிரித்தாய்,
ஒன்று சொல்ல சொல்ல
நினைத்தாய்!சொல்ல
வந்ததை சொல்லாமல்
போனதேன்?
நானும் மெல்ல சிரித்தேன் ,
ஒன்று சொல்ல நினைத்தேன்
சொல்ல வழியில்லாமல்
கடந்துவிட்டேன்!
நம் காதல் வாழவேண்டாமா?
கொட்டும் மழையில்
சிறியதோர் குடையில்
நாமிருவரும் பயணித்தால்
நனைந்திடுவோம் என
நினைத்து குடையை விட்டு
விலகி உன் நினைவால்
மழையில் நனைந்தவன் நான்,
கொளுத்தும் கத்திரி
வெயிலில் நின் காலில்
செருப்பில்லாமல் நடப்பது
கண்டு என் செருப்பை
உனக்கு கொடுத்து
சிவந்தகாலோடும்,
நின்நிழலோடும் ,
நின் நினைவோடும்
நடந்தவன் நான்!
நம் காதல்
வலிமையானதுதானே?
வலிகள்
கொடுக்காதே!
வலிய வந்து
வம்பிழுக்கவில்லை,
மௌனம்
கலைத்திடு,
உனை திருமணம் செய்தவன்
இறந்துவிடுவான் என்ற
சோதிடம் பலித்ததை
அறிந்தாயோ?
நின் முதல் திருமண
நிகழ்வின் சோகம் மறந்திடு,
அது ஒரு கனாக்காலம் விதி
வலியது என முதல்கணவன்
இறந்த துயர் துடைக்க நான்
தயாராதானே!
என் தோள் மீது சாய்ந்து
துயரம் துடைத்திடு ,
என் சாதகத்திலும்
அதே நிலைபாடுதான்
எனை திருமணம்
செய்தால்பாவைக்கு இறப்பு
வருமாம் அதுவும் ஜோதிடம்
சொல்லியதாம், அப்படி
ஒரு மாற்றுப் பிழையை
விதியால் வெல்வோம் நிம்மதி
கொண்டு வாழ்வோம்
விதிதான் வலியதென்றால்
வாழ்வில்தான்
ஒன்றாகவில்லை இருப்பினும்
இறப்பிலாவது ஒன்றாகலாம் ,
நாள் நட்சத்திரம்
ராகுகாலம் எமகண்டம்
,குளிகன் என பஞ்சாங்கம்
பார்க்கவேண்டாம்



புறப்படு புதியதோர்
உலகம் படைப்போம்
எனினும் நம் காதல்
வாழ்க பல்லாண்டு வாழ்க,

**நா.புவனாநாகராஜன்**
செம்பனார்கோவில்

## எனக்குள் இனித்த கற்கண்டு

நீண்ட நாள் எழுதாமல்
வைத்திருந்த பேனாவைப்
போலத்தான் முரண்டு
பிடித்துக்கொண்டிருக்கிறது
வார்த்தைகள் சேராத
கவிதை வரிகள்

சொர்க்கம் புகும்
வழி எது என்று
கேட்டால் சொல்வேன்
அவ்வப்போது திறந்து
மூடும்
உன் அதிசய பூவிதழ் என்று

இப்போதெல்லாம்
தனிமையில் நான்
என்ற எண்ணமே
இல்லை என்னுள்
என்விரலை இறுகப்
பற்றி இருக்கும் நீ
அணிவித்த
மோதிரத்தால்



**சு,கலா,** ஆசிரியை
ஆமத்தூர்



உன் சொல்லுக்கு மட்டுமே
தலையாட்டும் "பூம்பூம் மாடு"
நான்..

எத்தனையோ எழுத
இருந்தும் உன் பெயரை
கிறுக்கி கொண்டிருக்கிறேன்
கவிதை என..

தேடல்களில் தொலைந்து
உன் பார்வையில் நிகழ்கிறது
எனக்கான மீட்பு..

உள்வாங்கி பின் வெளிப்படும்
அலையாக..

உன் நினைவுகளில்
பெருங்கடல்.. ஒன்று
என்னுள் சத்தமில்லாமல்
ஆர்ப்பரிக்கிறது !!!

**சிவசந்திரன்**

## நீந்துதல் எளிதன்று...

வாழ்விக்க வந்த மழையின்
வரைமுறையற்ற நீட்சி
பெரு வெள்ளம்.
நீர்மைப் பெருக்கத்தில்
கரையாது திண்மமாகும்
கண்ணீரின் உவர்ப்பு.
ஓட்டத்தின்
திசைக்கெதிராய்
தக்கை போல்
எஞ்சியிருக்கிறது
மீந்த வாழ்வு.
அடித்துச் செல்லப்பட்ட
சேய்மை
அரண் தாண்டி
மீண்டெழுந்து துஞ்சுகிறது
துடிதுடித்த தாய்மையின்
தோளில். நிற்கட்டும்
தூறல்.
நீந்துதல்
அத்தனை
எளிதன்று.



**தாணப்பன்**
**கதிர்**

# வாசகர் கடிதம்

மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2900 பேர் இறந்ததாக செய்தி மீட்பு பணியில் என்ன செய்கிறார்கள்? புதன்கிழமை நிலவரப்படி 4639 பேர் காயம் அடைந்துள்ளனர். தாய்லாந்தில் ஏற்பட்ட பூகம்பத்தில் 22 பேர் இறந்துள்ளனர். கட்டிடங்கள் இடிந்து சேதமாகியுள்ளன 72 பேர் காணாமல் போய்விட்டார்கள். இதனிடையே மியான்மாருக்கு நிவாரண பணிகளுக்காக அங்குள்ள சீன தூதரகம் 1.5 மில்லியன் யுவானை வழங்கி உள்ளது. மியான்மாரின் ராணுவ அரசாங்கம் சீன செஞ்சிலுவை சங்கத்தின் உதவி வாகன அணிவகுப்பை எச்சரிக்கும் விதமாக வானத்தை நோக்கி சுட்டதாக தெரிவிக்க அதைத் தொடர்ந்து தங்களுடைய மீட்புக் குழுவும் பொருள்களும் பாதுகாப்பு இருப்பதாக தெரிவித்த நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. இந்த பின்னணியில் மனிதாபிமானb உதவிகளுக்காக மக்களை அணுக இருக்கும் தடைகளை அகற்றவும் உதவி செய்ய வரும் அமைப்புகளுக்கு இருக்கும் தடைகளை நீக்கவும் ராணுவ அரசாங்கத்தை மனித உரிமைகள் மார்பகம் வலியுறுத்துள்ளது.

மேலும் இந்த மியான்மார் நில நடுக்கத்தில் நான்கு நாட்களுக்கு பிறகு ஒரு மூதாட்டி உயிருடன் மீட்பு.

ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு. பொதுமக்கள் சுற்றுலா பயணிகள் வெளியேற்றம். வட கட்டளை ஆண்டில் அமைந்துள்ள தீவு நாடான வயசிலிருந்து நாலு லட்சம் பேரை கொண்ட ஒரு தீவு இதில் 33 எரிமலைகள் உள்ளது. இந்நிலையில் அந்நாட்டின் தலைநகரின் தெற்கே ரையாக்ஜென் தீபகற்பத்தில் அமைந்துள்ள எரிமலையில் வெடிப்பு ஏற்பட்டு லாவா குழம்பு வெளியேறிய பகுதியில் கரும்புகை சூழ்ந்துள்ளது. சுற்றுலா பயணிகளும் பொதுமக்களும் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஒரே நாளில் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் திபத்தில் நிலநடுக்கம். ஒரே நாள் அதிகாலையில் அடுத்தடுத்த நாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் மக்கள் பீதி அடைந்துள்ளனர். பாகிஸ்தானில் ரிக்டர் நாலு புள்ளி மூன்றாக பதிவானது. ஆப்கானிஸ்தானிலும் 4.7 திபத்தில் 4.3. இதன் பாதிப்பு குறித்து எந்த செய்தியும் வெளிவரவில்லை.

ஒரு பத்தி செய்தியில் சுனிதா வில்லியம் இந்தியா வருகை. அவர் இஸ்ரோ விஞ்ஞானிகளை சந்திக்க வருவதாக செய்தி. மலேசியா தலைநகர் கோலாலம்பூர் அருகே எரிவாயு குழாய் வெடித்த சிதறி பூமிக்கு அடியில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் 12 பேர் படுகாயம் அடைந்தனர். 82 நபர்கள் விபத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

புர்கினா பாசோவின் ராணுவ முகாம் மீது கடந்த வாரம் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 50 பேருக்கும் மேற்பட்டோர் உயிர் இழந்துள்ளனர். இந்த பயங்கரவாத பொருட்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் இதை நடத்தி வருவதாக தெரிகிறது.

இவ்வளவு பிரச்சனைக்கும் இடையில் ஒரு அழகான செய்தி. கிப்லி புகைப்படத்தை கட்டணம் இன்றி உருவாக்கலாம். கடந்த சில நாட்களாக சாட் ஜிபிடி மூலம் உருவாக்கப்பட்ட கிப்லி வகை புகைப்படங்கள் பிரபலமடைந்தன. அனைவரும் இந்த கிபிலி படத்தை உருவாக்கலாம் என்று செய்தி வந்துள்ளது.

நாட்டுக்கு என்று ஒரு மரியாதை உள்ளது அதை காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமை. தெலுங்கானாவில் நடந்த நிகழ்ச்சி மிகவும் அவமானத்திற்குரியது. கலாச்சாரம் பண்பாடு என்று பேசிக்கொண்டு இதுபோன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபட்டால் நாட்டின் பெயரை கெடுப்பதாகும். அதுபோன்று வெளிநாட்டு பயணிகளிடம் தவறாக நடந்து கொள்வதற்கு அதிகபட்சண தண்டனை கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் திருந்துவார்கள்.

வயநாடு நிலச்சரிவில் 298 பேர் பலி. நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தகவல். கடந்த ஆண்டு ஜூலை யில் நடந்த பருவ மழையும் அதை ஒட்டிய நிலச்சரிவும். நான்கு கிராமங்கள் நிலச்சரிவில் சின்னாபின்னமானது. 32 மாயமாகியும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவர்களும் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அது சரி திமர் என்று அதைப் பற்றி எதற்கு இப்பொழுது பேசுகிறார்கள் என்று கேட்கிறார்கள் மக்கள்.

காற்று மாசுக்கு போக்குவரத்து துறை முக்கிய காரணம். இப்படி சொன்னது வேறு யாரும் இல்லை நிதின் கட்காரி. மும்பை அடுத்த தானேயில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார சைக்கிளை அறிமுகப்படுத்தையில் பேசியது என்னவென்றால் அதிகரித்து வரும் நகரமயமாக்குவது கருத்தில் கொண்டு நெரிசலை குறைக்கவும், உகந்த பயணத்தை ஊக்குவிக்கவும் தனியான சைக்கிள் ஓடு பாதைகான உட்கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றார்.

வேளாண்மை படிப்புகளில் விவசாயின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை. வேரவையில் எம்எல்ஏ காங்கிரஸ் கோரிக்கை. உருப்படியான ஐடியா. நல்லதும் கூட.

க்ரைம் கார்னரில் குஜராத் பட்டாசு தொழிற்சாலையில் பெரிய விபத்து 17 பேர் பலி. அடுத்து 2019ல் நடந்த பாலியல் குற்றத்தில் ஈடுபட்ட போக்சோ குற்றவாளிக்கு 3.5 ஆண்டுகள் சிறை தண்டனை. அது சரியா அதுவரைக்கும் அவர் எங்க இருந்தாராம்? இதை நான் கேட்கவில்லை. பொதுமக்கள் தான். ஒரு தண்டனை கொடுக்க ஆறு ஆண்டுகளா?

திருவண்ணாமலையில் ஆரணியை அடுத்த கிராமத்தில் இரண்டு மாணவிகள் நீரில் மூழ்கி மரணம். நீச்சல் தெரியாததால் இது நடந்ததாம்.

இன்னும் சுவாரஸ்யமான செய்திகளை பார்க்கலாம்.

** புதுச்சேரியில் பாட புத்தகங்களை திறந்து வைத்து எழுதுமாறு ஆசிரியர்கள் கூறியதாக புகார். அதனால் அவர்கள் மீது விசாரணை நடத்த கோரி மாநில கல்வித்துறை இயக்குனரிடம் தமிழ் உரிமை இயக்கத்தினர் கோரிக்கை மனுக்களை வழங்கினர்.

கச்சத்தீவு மீட்பு தீர்மானம் ஒருமனதாய் சட்டசபையில் நிறைவேறியது. இது ஒரு சிந்துபாத்து தொடர்போல் ஓடிக்கொண்டே இருக்கிறது. இது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கவில்லை என்று பேசப்படுகிறது. முடிவாய் நல்லது நடந்தால் சரி. மீனவர்களுக்கும் நல்லது.

ஆணவப் படுகொலைகளை தடுக்க தனி சட்டம் கொண்டு வர வேண்டும். இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மா முத்தரசன் கூறினார். என் பின்னணி என்னவெனில் சமீபமாக வித்யா என்பவர் கொல்லப்பட்டது ஆணவப் படுகொலையால் அல்ல என்று அவர்கள் கூறினர். இருப்பினும் இது போன்ற ஆணவம் படுகொலைகளை தடுக்க தனி சட்டம் கொண்டு வர வேண்டும் என்றார்.

2024 25 ஜிஎஸ்டி வரி 9.4 சதவீதம் அதிகரிப்பு. அரசாங்கத்துக்கு வருமானம் மக்களுக்கு???

சென்னை ஐ சி எஃப் பில் 3007 ரயில் பெட்டிகள் தயாரித்து சாதனை. ஆஹா அருமை. கச்சத்தீவு விவகாரத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் கபடநாடகம் என்றார் அண்ணாமலை. மேலும் அவர் கூறுகையில் கச்சத்தீவு மீதான இந்திய உரிமையை விட்டுக் கொடுத்த கட்சி திமுக. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து இருக்கும் இந்த நேரத்தில், நடிப்பாக நடித்துக் கொண்டிருக்கிறார் முதல்வர் என்றார் அண்ணாமலை அவர்கள். கச்சத்தீவை விட்டுக் கொடுத்து 50 ஆண்டுகள் மௌனமாக இருந்து தமிழக மீனவர்கள் வாழ்வாரத்தை பாதிக்கப்படவிட்டு விட்டு தேர்தல் நேரத்தில் மட்டும் கச்சத் தீவு பார்ப்போம் என்று நாடகம் ஆடும் திமுகவையும் காங்கிரஸையும் மக்கள் ஒருபோதும் கண்டுகொள்ள போவதில்லை என்றார் அண்ணாமலை. எது எப்படியோ கச்ச தீவு யார் மீட்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஒவ்வொரு தேர்தலுக்கும் அது பேசு பொருளாகி கொண்டு இருக்கிறது என்கின்றனர் பொதுமக்கள்.

கதை, கவிதை, நூல் விமர்சனம், பல் சுவை களஞ்சியம் அனைத்து பகுதிகளும் அருமை. குறிப்பாய் தலையணை மந்திரம் ரொம்பவே அருமையாக எழுதியிருக்கிறார். பயணங்கள் முடிவதில்லை ராஜஸ்தான் பற்றிய கட்டுரை அருமை. தினம் ஒரு தலைவர்கள் பகுதி ரொம்பவே அற்புதம். பஞ்ச பூதங்களை வென்றவர் யார் கட்டுரை அழகு. சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். வாங்க சம்பாதிக்கலாம் பகுதியில் ஒவ்வொரு யுக்தியும் ரொம்பவே அருமை. தமிழில் பெயர் பலகை வைக்காத கடைகள் நிறுவனங்களின் உரிமை ரத்து. தொழிலாளர் உதவி கமிஷனர் எச்சரிக்கை. முத்தாய்ப்பாய் ரவுசு மணி அருமை.



-ஜெயந்தி சுந்தரம்

கச்சத்தீவு மீட்புத் தீர்மானம் சட்டசபையில் நிறைவேறியது#அனைத்துக் கட்சிகள் ஒரு மனதாக ஆதரவு

பிரதமர் மோடியை சந்திக்க முதல்வர் ஸ்டாலின் நேரம் ஒதுக்க விண்ணப்பம்

ஆணவப் படுகொலைகளை தடுத்திட தனிச்சட்டம் இயற்றிட வேண்டும்#முத்தரசன் யோசனை

நலத்திட்டங்களை விரைந்து முடித்திட அதிமுக சார்பில் கள்ளக்குறிச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் ஈபிஎஸ் தலைமையில் நடக்கிறது

பிரியாணி சாப்பிட்ட இருபது பேருக்கு சிகிச்சை#திருவல்லிக்கேணி பிரபல அசைவ ஓட்டலுக்கு சீல் வைப்பு

கச்சத்தீவு விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலின் கபட நாடகம் #பாஜக தலைவர் அண்ணாமலை

இரண்டு சிறுகதைகளுமே நன்று

புதுக் கவிதைகள் அழகாக செதுக்கப்பட்டிருந்தன

வாசகர் கடிதங்கள் பொறுப்புடன் எழுதப்பட்டிருந்தன

நூல் விமர்சனம் அருமை

வாங்க சம்பாதிக்கலாம் பகுதி சூப்பர்

புதுச்சேரியில் பாடப்புத்தகங்களைப் பார்த்து எழுதுமாறு ஆசிரியர்கள் கூறியதாக மாணவர்கள் புகார்

குஜராத் பட்டாசு தொழிற்சாலையில் பெரும் வெடி விபத்து #17 பேர் பலி

தெலுங்கானா : வெளிநாட்டுப் பயணியை பாலியல் வன்கொடுமை செய்த டாக்ஸி டிரைவர்#அதிர்ச்சி சம்பவம்

சீனாவும் இந்தியாவும் நெருக்கமாக இணைந்து செயல்படவேண்டும்#சீன அதிபர் ஜி ஜின்பிங் விருப்பம்

விண்வெளி மங்கை சுனிதா வில்லியம்ஸ் இந்தியா வருகை

கிப்லி புகைப்படத்தை கட்டணமின்றி உருவாக்கலாம்

ஒரே நாளில் பாகிஸ்தான், திபெத், ஆஃப்கானிஸ்தானில் நில நடுக்கம்

ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு#பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வெளியேற்றம்

வயநாடு நிலச் சரிவில் 298பேர் பலி# நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தகவல்

விக்கெட் வீழ்த்தியதை விநோதமாய் கொண்டாடிய லக்னோ வீரருக்கு(திக்வேஷ் ராதி) 25% அபராதம்#நடுவர் களத்தில் எச்சரிக்கை விடுத்தார்



-பி. சுரேகா
சென்னை

வணக்கம் 3/4/2025 அன்றைய தமிழ்நாடு இ பேப்பர்.காம் முதல் பக்கத்தில் கச்சத்தீவு மீட்பு தீர்மானம் என்ற சட்டசபையில் நிறைவேறியதை பற்றி விவரமாக படித்ததும் இன்றைய இந்திய அரசியல் மிக அருமையாகவும் தெளிவாகவும் புரிந்தது. இன்றைய பஞ்சாங்கம் மிக அருமையான தகவலாக எனக்கு நல்லவற்றை அழகாக சொன்னது. எல்லை கட்டுப்பாடு கோட்டை தாண்டி பாகிஸ்தான் ராணுவம் என்ற செய்தி அதிர்ச்சியாக இருந்தது. இன்றைய திருக்குறள் மிகவும் அருமை. அதன் பொருளும் திருக்குறளையும் படிக்கும் போது உற்சாகமாக இருந்தது. மதுரையில் 5000 மரக்கன்றுகள் நடப்பட்ட சாதனை பற்றி படித்ததும் பெருமையாக உணர்ந்தேன்.. கள்ளக்குறிச்சியில் நான்காம் தேதி அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் என்ற எடப்பாடி பழனிசாமி அவர்களின் அறிவிப்பை படித்ததும் என்ன ஆர்ப்பாட்டமோ என்று யோசிக்க வைத்தது. கிவி பழத்தில் உள்ள வைட்டமின்கள் மற்றும் அதன் பயன்களைப் பற்றி படித்தது இவ்வளவு நாள் இந்த பழத்தை சாப்பிடாமல் இருந்தோமே இனி சாப்பிட வேண்டும் என்று தீர்மானிக்க வைத்த நல்ல அருமையான தகவலை நலம் தரும் மருத்துவம் பகுதியில் தெரிந்து கொண்டேன். சென்னையில் உள்ள ஐ சி எப். ஆலையில் ஒரே ஆண்டில் 3007 ரயில் பெட்டிகள் தயாரித்து சாதனை புரிந்த அந்த செய்தியை படத்துடன் படித்த பொழுது என் தந்தை ஐ சி எ பில் வேலை செய்த அந்த நாட்கள் என் கண் முன்னே வந்து நின்றன .. தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் துரைசாமி வரலாறு மிகவும் அருமை. நல்ல புதிய புதிய தலைவர்களை பற்றி அழகாக வரலாற்றுச் செய்தியாக கொடுத்து எங்களின் வரலாற்று அறிவுக்கு நல்ல தீனி அளிக்கும் தமிழ்நாடு இ பேப்பருக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். பல்சுவைக் களஞ்சியம் பகுதி மிகவும் அருமை அதில் வரும் மீம்ஸ் நம் கவலையை மறந்து ஆனந்தமாக சிரிக்க வைப்பது உண்மை. வாங்க சம்பாதிக்கலாம் என்று சம்பாதிக்கும் அழகான வழிமுறைகளை சொல்லிக் காட்டி எல்லோருக்கும் ஊக்கமளிக்கும் தமிழ்நாடு இ பேப்பருக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். தமிழ்நாடு இ பேப்பரில் பதினாறாம் பக்கம் என்றாலே மிகவும் பரவசம் ஊட்டும் பக்கம். அதில் வரும் கோவில் செய்திகளும் எங்கெங்கு என்னென்ன திருவிழாக்கள் நடந்தது என்றும் மிக அருமையாக படங்களுடன் படிக்கும் போது அந்தந்த ஊர்களுக்கே சென்று நேரில் பார்த்தது போல ஒரு ஆத்ம திருப்தியை அளிப்பது தான் உண்மை. புதுச்சேரியில் பொதுத் தேர்வில் பாடபுத்தகங்களை பார்த்து எழுதுமாறு ஆசிரியர்கள் கூறியதாக புகார் என்ற செய்தியை படித்தது மாணவர்கள் படிக்காமலேயே தேர்வு எழுதி வெற்றி பெற்று விடலாமா என்று எண்ண வைத்த செய்தி. ஒரே நாளில் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் திபெத் மற்றும் எல்லா ஊர்களிலும் நிலநடுக்கம் என்ற செய்தி அதிர்ச்சியாக இருந்தது இந்த நிலநடுக்கத்தில் எத்தனை நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மிகத் தெளிவாக எங்களுக்கு உணர்த்தி எச்சரிக்கை உணர்வை கொடுத்த தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்தின் மிக அருமையான பணிக்கு ஒரு ராயல் சல்யூட்.உங்கள் பணி என்றென்றும் இதுபோல் சிறக்க இறைவனை பிரார்த்திக்கிறேன்



-உஷா முத்துராமன்

தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் அவர்களுக்கும் மற்றும் அங்கு பணிபுரியும் அன்பு உடன்பிறப்புகளுக்கும் என் இனிய வணக்கம் !

கச்சத்தீவை மத்திய அரசு மீட்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. கச்சத்தீவை தாரை வார்த்து பல ஆண்டுகள் ஆன பிறகு அதை மீட்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவருவது அபத்தமானது.

கச்சத்தீவை இலங்கைக்கு கொடுக்கும் போதே தமிழக அரசு போராட்டம் நடத்தி அதை தடுத்து இருக்க வேண்டும். இப்போது தீர்மானம் போடுவது என்பது தும்பை விட்டுவிட்டு வாலை பிடிப்பதற்கு ஈடானது.

" கச்சத்தீவு விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலின் கபட நாடகமாடுகிறார் " என்று பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டுகிறார்.

மியான்மரில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தின் விளைவாக ஆயிரக்கணக்கான பேர் இறந்திருக்கின்றனர் மற்றும் காயமடைந்திருக்கின்றனர். அவர்களுக்கு விரைவாக மருத்துவ உதவி, உணவு, உடை, இருப்பிடம் போன்றவை தேவைப்படுகின்றன.

உலக நாடுகள் பலவும் மியான்மருக்கு உதவிப் பொருட்களை அனுப்பி வருகின்றன.

சீனாவின் அரசுடன் மியான்மர் ராணுவ ஆட்சிக்கு சுமூகமான உறவு இல்லை என்பதால் சீனாவின் பொருட்களை ஏற்றி வந்த செஞ்சிலுவை வாகனத்தை எச்சரிக்கும் வகையில் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தி இருக்கிறார்கள் மியான்மர் ராணுவத்தினர்.

ராணுவ ஆட்சியாளர்களுக்கு கொஞ்சம் கூட நெஞ்சிலே ஈரம் இல்லை என்பதை இது காட்டுகிறது. இப்போது யார் உதவி செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் மியான்மர் மக்கள் இருக்கிறார்கள். ராணுவமோ முரண்டு பிடிக்கிறது.



-வெ.ஆசைத்தம்பி
தஞ்சாவூர்

# வாசகர் கடிதம்

கச்சத்தீவு மீட்பு தீர்மானம் சட்டசபையில் வெற்றிகரமாக நிறைவேற்றி இருக்கிறார்கள் ஆனால் அது எப்போது நடைமுறைக்கு வரும் என்று தெரியவில்லை. நலம் தரும் மருத்துவத்தில் கிவி பழம் பற்றி குறிப்பிட்டது புதுமையாக இருந்தது. அண்ணாமலையை மாற்றிவிட்டு நைனார் நாகேந்திரனை பாஜக தலைவராக போடும் முயற்சி நடைபெறுவதாக உள்ள செய்தி எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. ஆதார கரம் கதை சற்று புதுமையாக இருந்தது. ஷாலினி பாண்டே எல்லாம் தெரிந்து தானே நடிப்பு தொழிலுக்கு வந்திருக்கிறார். சின்னஞ்சிறு கோபுவின் தும்மியது யார் என்ற கவிதை எதார்த்தமாக இருந்தது. தலையணை மந்திரம் பற்றிய கட்டுரை விளக்கம் அற்புதமாக இருந்தது. மதுரவாயல் துறைமுகம் இடையே இரண்டு அடுக்கு மேம்பால பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டும் அப்போதுதான் போக்குவரத்து நெரிசல் குறையும். எட்டையபுரம் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் பாலியல் சீண்டல். இந்த நேரத்தில் பாரதியார் உயிரோடு இல்லையே என்ற நினைப்புதான் வருகிறது. புதுச்சேரி பொதுத்தேர்வில் பாடப்புத்தகங்களை பார்த்து எழுத ஆசிரியர் அனுமதி. நல்லா தானே உதவி செய்து இருக்கிறார். பிறகு ஏன் அவரை குறை சொல்ல வேண்டும். ஆனந்த் அம்பானி 140 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள துவாரகா கோவிலுக்கு நடைப்பயணம் அப்படியாவது அவரது எடை குறையுமா என்று பார்க்கலாம். சீனாவும் இந்தியாவும் இணைந்து நெருக்கமாக செயல்பட வேண்டும். எதற்கு அருணாச்சல பிரதேசத்தை தாரை வார்த்து கொடுத்தது போதாதா. மீண்டும் ஊர் பெருமை கோவில் வரலாறு பெருமை போன்ற கட்டுரைகளை இ பேப்பரில் வெளியிட வேண்டும் சன்மானம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை அப்போதுதான் ஊர் பெருமை கோவில் பெருமைகளைப் பற்றி அறிந்து கொள்ள முடியும்.



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

தமிழ்நாடு இ பேப்பர் க்கு தலை வணக்கம் நலம் தரும் மருத்துவம்.... கிவி பழம் நன்மைகள் கால்சியம் நிறைந்துள்ள பழம் பற்களுக்கு நல்லது. இன்று வந்த அனைத்து பதிவுகளும் அருமையான பதிவுகள் இன்று பிறந்தநாள் திருமண நாள் காணும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் வாழ்க வளமுடன் உள்ளூர் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை தினமும் அளிக்கும் உள்ளது உள்ளபடி செய்திகளை கொடுக்கும் தமிழ்நாடு இ பேப்பர் க்கு நெஞ்சார்ந்த நன்றிகள் தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் S. நிர்மலா.



-நிர்மலா ஸ்ரீதரன்
திருவண்ணாமலை

03.04.2025 ’தமிழ்நாடு இ பேப்பர். காம்’ வழக்கம் போல் அனைத்துச் செய்திகளையும் தாங்கிய நாளிதழாக வெளிவந்திருக்கிறது.

கட்சத்தீவு மீட்பு தீர்மானம் ஒவ்வொரு சட்டப்பேரவையிலும் கொண்டு வரப்படுகிறது. ஆனால் அதன் உண்மைதன்மை குறித்து எதுவும் வெளிப்படையாக தெரியவில்லை.

பசுமையான இந்தியவை உருவாக்குவதுதான் தங்கள் யங் இந்தியன்ஸ் அமைப்பின் குறிக்கோள் என்று பிரகடனம் செய்து 5000 மரக்கன்றுகளை நட்டிருக்கும் அவர்களுக்கு வாழ்த்துகளைச் சொல்வோம். இது ஒவ்வொரு மாவட்டத்திலும் விரிவடைய வேண்டும்.

இபாஸ் நடைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து நீலகிரியில். வியாபாரிகள் முழு கடையடைப்பு நடத்தி இருக்கின்றனர். தற்போது சீசன் துவங்கியுள்ள நிலையில் இது போன்ற கடையடைப்பு அங்கு ஏற்கனவே வந்திருக்கும் சுற்றுலாப்பயணிகளுக்கு பெரிதும் சிரமத்தை தந்திருக்கும். சுற்றுசூழல் பாதிக்கப்படும். என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதேவேளையில் சுற்றுலா பயணிகளின் எண்ணங்களுக்கும் வாழ்வாதரத்தை நம்பி அங்கேயிருக்கும் மக்களையும் கருத்தில் கொண்டு நல்ல தீர்வு காணப்பட வேண்டும்.

வெம்பக்கோட்டை அகழ்வாய்வில் கிடைத்த தங்கங்தாலான மணியும், சுடுமண் பதக்கமும் நமது நாகரிகத்தை உலகிற்கு பறைசாற்றுவதாக இருக்கிறது.

மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால வெண்ணைத்தாழி திருவிழா கட்டுரை நேரில் கலந்து கொண்ட மனநிறைவைத் தந்தது.

தினம் ஒரு தலைவர்கள் வரிசையில் துரைச்சாமி வரலாற்று கட்டுரை அவர் பற்றிய முழுத்தகவலையும் தந்தது. சின்ன மருதுவின் மகனான துரைச்சாமி பினாங்கு சிறையில் பட்ட கஷ்டங்கள் தியாகத்தை பறைசாற்றியது.

தலையணை இன்றி உறங்கப்பழகிக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வை தலையணை மந்திரம் கட்டுரை ஈந்தது.

தமிழில் பெயர் பலகை வைக்காத கடைகள், நிறுவனங்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என்று அறிவுறுத்தி இருக்கும் தமிழக அரசுக்கு பாராட்டுகள். தாய்மொழியில் பெயர் இடம் பெறாத கடைகள் இல்லாதிருந்தால் ‘றைந்துவிடப்போவதில்லை.

ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ள 13 ஆயிரம் சதுர கி.மீ வனப்பகுதிகள் மீட்கப்பட வேண்டும்.



-ப. தாணப்பன்
திருநெல்வேலி

தமிழ்நாடு இ.பேப்பரில் கிவி பழத்தின் பயன்களைப் பற்றி படித்து வியந்துப் போனேன். இந்த பழத்தைப் பற்றியே நான் ஒரு நாலைந்து வருடமாகதான் கேள்விப்பட்டு வருகிறேன். கிவி பழம் ஆஸ்துமாவை சரி செய்யும், எலும்புகளின் வளர்ச்சிக்கு உதவும், இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்றெல்லாம் படித்து வாங்கி சாப்பிட்டுப் பார்த்தேன். அந்தளவுக்கு ருசி என்று சொல்லமுடியாது. ஆனால் இந்த பழத்தால் பலன் அதிகம் என்பதை புரிந்துக்கொண்டேன். இன்னொரு விஷயம் ஆஸ்திரேலியாவின் பறக்காத பறவை கிவிக்கும், இதற்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை!

கே. பானுமதி நாச்சியாரின் ’தேனீ’ என்ற சிறுகதை எல்லோருக்கும் சேமிப்பு அவசியம் என்பதை உணர்த்தியது. இன்னொரு விஷயம், தேனீக்கள் தனக்காகதான் சேமிக்கிறது. ஆனால் பாவம் அதை மனிதர்களும், கரடிப்போன்ற சில பிராணிகளும் திருடி சாப்பிட்டு விடுகின்றனர்.

சீர்காழி ஆர். சீதாராமனின் ’ஆதரவுக் கரம்’ என்ற சிறுகதை அன்பான இரக்கக்குணமும், நன்றியுணர்வும் இருந்தால் முதியோர் இல்லமே தேவைப்படாது என்பதை உணர்த்தியது.

’தேனீ’, ’ஆதரவுக்கரம்’ என்ற இந்த இரண்டு சிறுகதைகளுக்கான ஓவியங்களும் அழகழகாக மனதைக் கவருகின்றன.

மல்லிகா கோபால் ஒரு அரைப்பக்க கட்டுரையிலேயே இராஜஸ்தான் மாநிலத்தை அதில் பார்க்க வேண்டிய இடங்களை கண்முன்னே கொண்டுவந்துவிட்டார். பயணங்கள் முடிவதில்லை பகுதி வாழ்க்கையில் உல்லாசமாக ஊர் சுற்றிப்பார்க்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்துகிறது.

கோபாலன் மேனியில் வெண்ணெய் அடிக்கும் உற்சாகமான மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால் ஸ்வாமி வெண்ணெய்த் தாழி திருவிழாவைப் பற்றி படித்தபோது, இந்த விழாவுக்கு ஒரு தடவை கட்டாயம் போகவேண்டும் என்று தோன்றியது. இந்த கட்டுரையை எழுதிய எழுத்தாளர் ஆனந்த் ஸ்ரீனிவாசன் மன்னார்குடியை சேர்ந்தவர். அதனால் அந்த அனுபவ அழகுடன் கட்டுரையை உயிரோட்டமாக எழுதியிருக்கிறார்.

தினம் ஒரு தலைவர்கள் வரிசையில் ’துரைச்சாமி’யை பற்றி படித்தபோது, அது மற்ற தலைவர்கள் வாழ்க்கையை விட சோகமாகவும், வருத்தம் தருவதாகவும் இருந்தது. இவர் சின்ன மருதுவின் மகன் என்றதும் ஒரு வியப்பு ஏற்பட்டது. பதினைந்து வயது பையனாக நாடு கடத்தப்பட்ட துரைசாமி, கிழவராக இந்தியா வந்து இறந்த வரலாறு மகா கொடுமை. நினைக்கவே கண் கலங்குகிறது.



-சின்னஞ்சிறுகோபு,
சிகாகோ





































VASTU SHASTRA
CONSULTATION
உங்கள் இருப்பிடத்தின் மூலம் பொருளாதாரம்,
மன நிம்மதி, வியாபார வளர்ச்சி, ஆரோக்கியம் மேம்பட
உங்கள் சொந்த வீடு, வாடகை வீடு, மனை, கடை,
அலுவலகம், தொழிற்சாலை மற்றும் புது வீடு கட்டவும்,
புதுமனை வாங்கவும் அனைத்திற்கும் வாஸ்து சாஸ்த்திரபடி
சிறந்த முறையில் ஆலோசனை வழங்கி, எளிய முறையில்
அனைத்து வாஸ்து பரிகாரங்களும் செய்யப்படும்.
வாஸ்த்து நிபுனர்
வாஸ்த்து பாலாஜி
-:தொடர்புக்கு:-
80727 28883 / 95433 96637
குடியிருக்க வீடு வாஸ்த்து சாஸ்த்திரப்படி நல்ல படியாக அமைத்தால்
அந்த வீடு கோயிலாகும்! அந்த வீட்டில் இறைவனும் குடி கொள்வார்!


எம்.சாஜித்
Cell: 99529 48097
86103 69634
மேக்ஸ்
கால் பராமரிப்பு
தோல் காலணிகள்
தோல் செருப்புகள்
தோல் பொருட்கள்
மொத்த மற்றும் சில்லறை விற்பனை
:044-4323 5591
எண்.150, வேப்பேரி உயர் சாலை,
பெரியமேட், சென்னை - 600 003.


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS


VIP Call 9443782573 VIP CITY
DON'T MISS THE GREATEST OF ALL TIME OPPORTUNITY
OWN PREMIUM PLOTS IN COIMBATORE AT AN ATTRACTIVE PRICE!
CITYSCAPE
SULUR, COIMBATORE
1400 SQ.FT TO 2700 SQ.FT
VILLA PLOTS STARTING FROM ₹12 LAKHS ONWARDS
NEW TOWN
APPANAICKENPATTI, COIMBATORE
513 SQ.FT TO 1677 SQ.FT
VILLA PLOTS STARTING FROM ₹12 LAKHS ONWARDS
FINE ASSETS
KADAMPADI, COIMBATORE
513 SQ.FT TO 1677 SQ.FT
VILLA PLOTS STARTING FROM ₹16 LAKHS ONWARDS
CHETTIPALAYAM, COIMBATORE
600 SQ.FT TO 1860 SQ.FT
VILLA PLOTS STARTING FROM ₹16 LAKHS ONWARDS
Star Breeze
KOVILPALAYAM, COIMBATORE
600 SQ.FT TO 2700 SQ.FT
VILLA PLOTS STARTING FROM ₹17 LAKHS ONWARDS
cosmo square
EACHANARI, COIMBATORE
600 SQ.FT TO 2400 SQ.FT
PRICE STARTING FROM ₹25 LAKHS PER PLOT


Mahipal Jain
+91 89395 74836
+91 44477 60158
fabricstudio4@gmail.com
fabricstudio4
PRESIDENT
THE MENS FABRICS
15/55, Elephant Gate Street,Chennai - 600 079.


ROYAL GARMENTS
044-4210 5041
988430 5041
988458 2270
Wholesale Dealers in :
Banian, Jutty, Mat, Towels, Lungies Etc.,
#6/18 Rajagopal Street, Opp to Police Quarters,
(M.C.Road) Old Washermenpet, Chennai - 21.


Manjal Mart
SOMETHING FOR EVERY FAMILY
எந்தவித கலப்படமும் இல்லாத தரமான
மஞ்சள், குங்குமம், விபூதி, சந்தனம்,
ஜவ்வாது, விற்பனைக்கு உள்ளது
www.manjalmart.com


MODERN HOUSE FOR SALE
IN KOVILPATTI
சுபா நகர்
50 லட்சம்
வடக்கு வாசல்
CONTACT US
6380603606


SOFTWARE /
WEBSITE
IN USDT
COLOR PREDICTION GAME
Join Violet
Join Red
Join Green
9853719337, 7436914247


M.SAJID
Cell: 99529 48097
86103 69634
Max Feet Care
Leather Shoes
Leather Sandals
Leather Goods
Wholesale & Retail
:044-4323 5591
No. 150, Vepery High Road,
Periyamet, Chennai - 600 003.


MLM PERFECT
MLM SOFTWARE DEVELOPMENT
IN EMI @RS.999
MLM Software in Monthly EMI (EASY INSTALLMENT @ RS.999/- onwards.
PRODUCT BASE
INVESTMENT PLAN
CRYPTOCURRENCY
•Product Base MLM Software
•Investment Plan MLM Software
•Cryptocurrency Services
•Cryptocurrency MLM Software
CONTACT US www.mlmperfect.com
98537 19337
74369 14247


• ஏழாயிரம்பண்ணை ரோடு
• பழைய அப்பனேரி
• 14 பிளாட்
LAND FOR SALE
IN KOVILPATTI
BOOK NOW
6380603606


Wanted
SECRETARY FOR A DOCTOR
Clinic Located at:
MADIPAKKAM
JOB TIMING
WEEKDAYS -4 pm to 9 pm
SUNDAY -10 am to 2 pm.
Contact: 9884447865



UBS BRIDAL STUDIO
7449094713
7358096233
Stitching & Sales
All Ladies Wear Stitching
UBS
BRIDAL STUDIO
u_b_s_bridal_studio
No.8, Rainbow Complex
Chinna Naickam Street,
Sowcarpet Chennai -79


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale
Dealers In: Designer
Sarees, Chudidhar,
Laganga, Choli &
Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


வரி விளம்பரம் பகுதியில் உங்கள்
விளம்பரங்களை பிரசுரித்து
உங்கள் வியாபாரத்தை
பெருக்குங்கள்
₹299-க்கு
சிறப்பு
சலுகையில்
உங்கள் விளம்பரங்களை
தரமாக
வெளியிடுகிறோம்.
மேலும் விபரங்களுக்கு...
cell: 8122664699



# பல்சுவை களஞ்சியம்





## சர்க்கரை நோய் ஒழிக்கும் ஸ்ரீ வெண்ணிக்கரும்பேஸ்வரர் சுவாமி திருக்கோயில்...

சங்க காலத்திலேயே பிரசித்தி பெற்ற இத்தலம் ஞான சம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் போற்றி பாட பட்ட தலமாகும். இங்குள்ள கடவுளை சுந்தரர்

“மருகல் உறைவாய் மாகாளத்தாய்! மதியம் சடையானே!
ஆருகர் பிணி நின் அடியார் மேல் அகல அருளாயே கருகாற் குரலாய் வெண்ணிக் கரும்பே!”

என்று பிணி தீர்க்கும் பெருமானாக பாடியுள்ளார்.

இத்தலத்தில் அருள் பாலிக்கும் ஸ்ரீ வெண்ணிக்கரும்பேஸ்வர பெருமாள் பக்தர்களின் அனைத்து பிணிகளையும் குறிப்பாக சர்க்கரை நோயைப் போக்குபவராக இருக்கின்றார்.







இக்கோயிலில் அளிக்கப் படும் விபூதியின் மகிமையை பாருங்கள். விபூதியை ஒரு சிட்டிக்கை குடிநீரில் கலந்து தினம் சூரிய உதயத்தின் போதும் சூரிய அஸ்தமனத்தின் போதும் அருந்த வேண்டும். தொடர்ந்து 24 நாட்கள் 108 முறைகள் “ஸ்ரீ வெண்ணிக்கரும்பேஸ்வராய நமஹ” என்று ஜெபித்த பின்னர் அந்நீரை அருந்த வேண்டும். அதன் பின்னர் படிப்படியாக சர்க்கரை நோய் குறைந்து முடிவில் காணாமல் போய் விடுகிறது என்று பக்தர்கள் கூற கேட்டேன்.

எனவே சர்க்கரை நோய் உள்ளவர்கள் இத்திருத்தலம் சென்று விபூதி பெற்று நோயை வெல்லலாம் என்பதால் பக்தர்களை சென்று தரிசித்து பயன் பெற வேண்டுகிறேன். இத்திருத்தலம் சதுர்யுகம் கண்ட ஸ்தலமாகும்.

இங்கு காட்சியளிக்கும் ஸ்ரீ வெண்ணிக்கரும்பேஸ்வரர் ஒரு கரும்பு வடிவில் சுயம்பு மூர்த்தி என்றும் அறியப் படுகிறது.

தேவசேனா சுப்ரமணியர் திருக்கல்யாண வைபவ பத்திரிக்கை இத்தலத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் கந்தபுராணக் குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.

அம்பாள் ஸ்ரீ சௌந்தரநாயகி என்றும் அழகியநாயகி என்றும் அழைக்கப் படுகிறார். பெயருக்கேற்றார் போல் அழகிய முகமண்டலத்துடன் யாவருக்கும் காட்சியளிக்கிறார். இங்கு அட்சராப்யாஸ தேவி என்ற அம்பாளுக்கும் சன்னதி உள்ளது. இவர் ஒரு கரத்தில் புத்தகமும் மற்றொரு கரத்தில் குழந்தை கண்ணனையும் வைத்து காட்சி தருகிறார். இவர்தான் கண்ணனுக்கு அட்சராப்யாஸம் செய்ததாக நம்ப படுகிறது. இக்கோயிலில் உள்ள சூரிய புஷ்கரணி மற்றும் சந்திர புஷ்கரணி தீர்த்தங்கள் எல்லா விதமான நோய்களையும் ரோகங்களையும் ஒழிக்க வல்லனவாகும்.

இத்தனை சிறப்பு மிக்க சுயம்பு மூர்த்தியான ஸ்ரீ இஷுபுரீஸ்வரர் (இஷு என்றால் கரும்பு என்று அர்த்தம்) இங்கு ஸ்ரீ வெண்ணிகரும்பேஸ்வரர் என்றும் போற்ற படுபவர்.

இக்கோயில் தமிழ்நாடு, திருவாரூர் மாவட்டத்தில் கோயில்வெண்ணியில் அமைந்துள்ள ஒரு சக்தி வாய்ந்த சிவஸ்தலமாகும்.



ரமா ஸ்ரீனிவாசன்

# மீம்ஸ்








# பொன்மொழிகள்

(1)

172 ஒவ்வொரு மனிதனும் தான் செய்துவிட்ட தவறுக்குத் தந்து வரும் பெயரே அனுபவம்
- ஆஸ்கார் ஒயில்டு

(2)
தீர்க்கதரிசி தங்கள் நாவினால் பேசுவதில்லை. வாழ்க்கையின் மூலமே பேசுகிறார்கள்
- மஹாத்மா காந்தி

(3)
மனிதன் கடைபிடிக்க வேண்டிய அத்தியாவசியமான கடமைகள் - ஈந்து வளர்த்த தாய் தந்தையருக்கும், உறவினக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை செவ்வனே செய்ய வேண்டும். நட்புக்கு இலக்கணமானவர்களிடத்து அறநெறியுடன் நடந்து கொள்ள வேண்டும். பறவைகள், விலங்குகள் இவைகளிடத்திலும் அன்புடன் நடந்து கொள்ளவேண்டும்
- புத்தர்







(4)
உண்மையின் பொருட்டு எதையும் தியாகம் செய்யலாம், ஆனால் எச் சூழ்நிலையிலும் உண்மையினை தியாகம் செய்யக் கூடாது
- விவேகானந்தர்

(5)
சிந்தனை - சக்தியின் பிறப்பிடம்
விளையாட்டு - இளமையின் ரகசியம்
படிப்பு - அறிவின் ஊற்று
நட்பு - மகிழ்ச்சிக்கு வழி
உழைப்பு - வெற்றியின் விலை
- நபிகள் நாயகம்



ஆர். ஹரிகோபி,
புது டெல்லி



## விடுகதை

| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |



# ஜோக்ஸ்


கணவன்: என்ன என் செல்போனை செக் பண்ணிட்டியா ?

மனைவி: பண்ணிட்டேன்.

கணவன்: எல்லாம் சரியா இருக்கா? இப்ப சந்தேகம் இல்லையே..

மனைவி: எல்லாம் சரியா இருக்கு அதான் சந்தேகமே..

எப்பிடி போனாலும்... செக் வச்சா என்னதான் பண்றது...



---------------------
Someone:- ஏன் தினமும் தண்ணி அடிக்கிற?

Me:- அவள மறக்கத்தான்

Someone:- யாரு அவ?

Me:- ரொம்ப வருஷமா தண்ணி அடிச்சதுல அவ யாருனு மறந்து போச்சு.
---------------------

"குழந்தை அழுதுட்டு இருக்கும் போது, 'டிவி' சீரியல் பாக்குற..."

"சும்மா இருங்க...

குழந்தையும் சிரியல் பார்த்து தான் அழுதிட்டிருக்கு !"
----------------------

அடிமைக்கும், கொத்தடிமைக்கும் என்ன வித்தியாசம்?

ஒரு பெண்ணைக் காதலிக்கும் பொது நீங்க அடிமை....

அதுவே அந்த பெண்ணையே கல்யாணம் பண்ணிடீங்கன்னா நீங்க கொத்தடிமை...

----------------------

"அரண்மனைக்குள் புலவர் வந்தவுடனே, கண்ணாடி போடுறீங்களே... ஏன் மன்னா"

"தலைவலி வந்தவுடனே, கண்ணாடி போட்டுக்கணும்ன்னு வைத்தியர் சொன்னார் அமைச்சரே !"

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## 7-ந்தேதி தென்காசி கோவில் கும்பாபிஷேகம்



தென்காசி காசி விஸ்வநாதர்-உலகம்மன் கோவிலில் சுமார் 18 ஆண்டுகளுக்குப் பிறகு மகா கும்பாபிஷேக விழா வருகிற 7-ந் தேதி (திங்கட்கிழமை) காலை 9 மணி முதல் 10 மணிக்குள் நடைபெறுகிறது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த சில மாதங்களாக கோவிலில் திருப்பணிகள் மும்முரமாக நடைபெற்றது. கோவில் ராஜகோபுரம் வர்ணம் தீட்டப்பட்டு, மின் விளக்கு அலங்காரத்தில் ஜொலிக்கிறது.

7-ந் தேதி நடைபெறும் கும்பாபிஷேக விழாவிற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு யாகசாலை பூஜைகள் இன்று தொடங்கியது. அதிகாலை 5 மணி அளவில் உலகம்மன் சன்னதி மண்டபத்தில் கோவிலின் அறங்காவலர் குழு தலைவர் வல்லம் பாலகிருஷ்ணன் மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், கோவில் செயல் அலுவலர் பொன்னி ஆகியோர் முன்னிலையில் மகா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகாலட்சுமி ஹோமம், சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள், மங்கள வாத்தியம் முழங்க நடை பெற்றது.

நிகழ்ச்சியில சைவ சமய ஆதீனங்கள் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சிக்கு வருகை தந்த ஆதினங்களுக்கு அறங்காவலர் குழு தலைவர் வல்லம் பால கிருஷ்ணன் பொன்னாடை மற்றும் மலர் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

இன்று அதிகாலையில் தொடங்கிய யாகசாலை பூஜையில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர்.

## ராமபிரான் காலடிபட்ட புனிதத் தலங்கள்



ராம ஜென்ம பூமி என்று அழைக்கப்படும் இந்த இடம் தான், ராமர் பிறந்த ஊர். சிறு பிள்ளையாக அவர் விளையாடியதும், 14 ஆண்டுகால வனவாசத்திற்குப் பிறகு, அவர் அரியணையில் அமர்ந்து அரசாட்சி செய்ததும் இந்த இடம்தான்.
தமிழில் ராமாயணத்தை எழுதிய கம்பர். வட நாட்டில் ராமாயணத்தை எழுதிய துளசிதாசர், மகாத்மா காந்தி போன்றவர்களுக்கு உத்வேகம் அளித்த, ராம நாமத்தின் ஊற்றுக்கண் இந்த இடமாகும்.
வாரணாசியில் இருந்து 189 கிலோமீட்டர் தூரத்தி லும், லக்னோவில் இருந்து 128 கிலோமீட்டர் தொலை விலும் இருக்கிறது. அயோத்தி, வாரணாசி யில் இருந்து லக்னோ செல்லும் ரெயில் மார்க்கத் தில் இருக்கிறது அயோத்தி ரெயில் நிலையம்.

**பக்ஸர்**

விஸ்வாமித்திரர், தன்னுடைய யாகத்திற்கு இடையூறாக இருக்கும் தாடகையை அழிப்பதற்காக ராமரையும், லட்சுமணனையும் காட்டிற்கு அழைத்துச் சென்றார். அப்போது அவர்கள் இருவருக்கும் பலை, அதிபலை என்ற முக்கியமான இரண்டு மந்திரங்களை உபதேசித்த இடம் இதுவாகும். சித்தாசிரமம்', 'வேத சிரா', 'வேத கர்ப்பா', 'க்ருஷ்' என்று வேறு பெயர்களாலும் இந்த இடம் அழைக்கப்படுகிறது. பாட்னாவில் இருந்து மொகல்சராய் செல்லும் ரெயில் மார்க்கத்தில் முக்கியமான ரெயில்நிலையம், பக்ஸர்.

**ஜனக்பூர்**

மிதிலை நாட்டை ஆண்ட ஜனகரின், அரசாட்சி நடைபெற்ற இடம் இந்த ஜனக்பூர். இங்கிருந்த பெரிய மைதானத்தில்தான். சீதையை மணப்பதற்காக சிவ தனுசை ராமர் முறித்த சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. சீதாமடி என்ற இடத்தில் இருந்து சுமார் 40 கிலோமீட்டர் தூரத்தில் ஜனக்பூர் உள்ளது.

**வால்மீகி ஆசிரமம்**

பெரும் வழிப்பறி கொள்ளையனாக இருந்து, பின் மனம் மாறி ராமபிரானின் காவியத்தை எழுதிய வால்மீகி முனி வர் வாழ்ந்த இடம் இதுவாகும். பிரயாகைக்கு தெற்கே 30 கிலோமீட்டர் தூரத்தில் இந்த இடம் உள்ளது.
மேலும் இரு இடங்களையும் வால்மீகி ஆசிரமமாகக் கூறுகின்றனர். கான்பூர் அருகே பிடுரில் உள்ள கங்கை கரையிலும், சீதாமடி அருகேயும் வால்மீகி முனிவர் வசித்ததாக சொல்லப்படுகிறது.

**சித்திரக்கூடம்**

ராமர் வனவாசத்தில் முக்கிய இடம் இது.ராமர் 14 ஆண்டுகள் வனவாசம் சென்ற போது, சீதை மற்றும் லட்சுமணனுடன் இந்த சித்திரக்கூடம் பகுதியில் சில மாதங்கள் தங்கியிருந்தார். அங்கு அனுசுயா, அத்ரி, மார்க்கண்டேயர் ஆகிய ரிஷி பெருமக்களுடன் ராமரும் தவம் இயற்றியதாக ராமாணயம் சொல்கிறது.
அலகாபாத்தில் இருந்து ஜபல்பூர் செல்லும் ரெயில் மார்க்கத்தில் மாணிக்பூர் ஜங்ஷன் உள்ளது.
இங்கிருந்து 36 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் சித்திரக்கூடம் ரெயில் நிலையத்தில் இறங்கி, இந்த பகுதிக்குச் செல்லலாம்.

**ராமேஸ்வரம்**

ராமபிரான் இங்கிருந்துதான், இலங்கைக்குச் செல்ல பாலம் அமைத்தார். பின்னர் வெற்றிக்கொடி நாட்டி திரும் பியதும், இங்குள்ள மணலில் சிவலிங்கம் ஒன்றை செய்து வழிபட்டார். அந்த மணல் லிங்கம்தான் ராமேஸ்வரத்தில் உள்ள ராமநாதர் கோவிலின் மூலவராக இன்றளவும் உள்ளதாக தல புராணம் தெரிவிக்கிறது.

## இன்று மருதமலை முருகன் கோவில் கும்பாபிஷேகம்



கோவையில் பிரசித்தி பெற்ற மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோவில் 7-ம் படை வீடு என பக்தர்களால் போற்றப்படுகிறது. இந்த கோவிலில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடந்தது. இதைத்தொடர்ந்து கோவிலில் பல்வேறு திருப்பணிகள் செய்யப்பட்டு இன்று (4-ந்தேதி) கும்பாபிஷேகம் நடக்கிறது.
இதற்கான விழா கடந்த சில தினங்களுக்கு முன்பு தொடங்கி நடந்து வருகிறது. கோவிலில் பிரமாண்ட யாகசாலை மண்டபம் அமைக்கப்பட்டு யாகசாலை பூஜைகளும் நடந்து வருகின்றன. கோபுரங்களில் புதிய கலசங்கள் பொருத்துதல் உள்பட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடந்து வருகின்றன. கோவில் முழுவதும் மின் அலங்காரம் செய்யப்பட்டு கோவில் மின்னொளியில் ஜொலிக்கிறது.
நேற்று முன்தினம் மாலை 3-ம் கால வேள்வி பூஜை நடந்தது. நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு 4-ம் கால வேள்வி பூஜை நடத்தப்பட்டது. மாலை 4.30 மணிக்கு 5-ம் கால வேள்வி பூஜை நடக்கிறது.
விழாவின் சிகர நிகழ்ச்சியான கும்பாபிஷேகம் இன்று (4-ந் தேதி) காலை 8.30 மணி முதல் 9.30 மணிக்குள் நடக்கிறது. முன்னதாக நாளை அதிகாலை 4.30 மணிக்கு 6-ம் கால வேள்வி பூஜை நடக்கிறது. காலை 6 மணி முதல் 6.45 மணிக்குள் திருச்சுற்று தெய்வங்களுக்கு, பரிவார மூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம், காலை 7.30 மணிக்கு யாக சாலையில் இருந்து மூலவருக்கு திருக்குடங்கள் ஏந்தி கோவிலை வலம் வரும் நிகழ்ச்சி, காலை 8.30 மணிக்கு மருதாசலமூர்த்தி கோபுர விமானம், ஆதி மூலவர் கோபுர விமானம், ராஜகோபுரம், கொடிமரம், பரிவார கோபுர விமானங்களுக்கு கும்பாபிஷேகம், 9 மணிக்கு ஆதிமூலவர், விநாயகர், மருதாசலமூர்த்தி, பட்டீஸ்வரர், மரகதாம்பிகை, வீரபாகு, கரிவரதராஜ பெருமாள், சண்டிகேஸ்வரர் ஆகிய தெய்வங்களுக்கு கும்பா பிஷேகம் நடக்கிறது. தொடர்ந்து மூலவருக்கு பேரொளி வழிபாடு நடக்கிறது.
டிரோன் உதவியுடன் பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது. பக்தர்கள் கும்பாபிஷேகத்தை காணும் வகையில் பெரிய எல்.இ.டி. திரைகளும் அமைக்கப்பட்டு உள்ளது.

## சதுரகிரி மலை கோவிலுக்கு நாள்தோறும் அனுமதி





விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் பிரசித்தி பெற்ற சதுரகிரி சுந்தர-சந்தன மகாலிங்கம் கோவில் அமைந்துள்ளது. 4 பக்கமும் மலைகள் சூழ்ந்துள்ள இந்த கோவில் பகுதி அடர்ந்த வனப்பகுதியை கொண்டது.

சித்தர்கள் வாழும் பூமியாக அறியப்படும் இந்த மலையில் உள்ள சிவனை வழிபட்டால் நன்மைகள் நடக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

இதன் காரணமாக ஒவ்வொரு மாதமும் அமாவாசை, பவுர்ணமி, பிரதோஷம் நாட்களில் பக்தர்கள் மலையேறிச் சென்று தரிசனம் செய்து வருவார்கள். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சதுரகிரிக்கு செல்ல பக்தர்களுக்கு எந்த கட்டுப்பாடும் இல்லாமல் இருந்தது. இதனால் விசேஷ நாட்கள் மட்டுமின்றி அனைத்து நாட்களிலும் பக்தர்கள் சென்று வந்தனர்.

இந்த நிலையில் மலையில் பெய்த கனமழை காரணமாக காட்டாற்று வெள்ளத்தில் சிக்கி 10-க்கும் மேற்பட்ட பக்தர்கள் பலியாகினர். 100-க்கும் மேற்பட்டோரை வனத்துறையினர் பல்வேறு மீட்டனர்.

இதை தொடர்ந்து சதுரகிரிக்கு செல்ல பக்தர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. மாதந்தோறும் அமாவாசை, பவுர்ணமியை முன்னிட்டு தலா 4 நாட்கள் மட்டும் அனுமதி வழங்கப்பட்டது. தற்போது வரை இந்த நடைமுறை வழக்கத்தில் இருந்தது. கடந்த சில ஆண்டுகளாக சதுரகிரி கோவில் பிரபலமடைய தொடங்கியது.

இதன் காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் அதிகளவில் வரத் தொடங்கினர். ஒவ்வொரு முறையும் கூட்டம் அதிகரித்தது. குறிப்பாக ஆடி, தை, மகாளய அமாவாசை, சிவராத்திரி போன்ற விழாக்களின்போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சதுரகிரிக்கு குவிந்து வருகின்றனர்.

இதற்கிடையில் பிரசித்தி பெற்ற சதுரகிரி கோவிலுக்கு பக்தர்களை தினமும் அனுமதிக்க வேண்டும் என மதுரை ஐகோர்ட்டு கிளையில் வழக்கு தொடரப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதிகள் பக்தர்களை தினமும் தரிசனம்செய்ய அனுமதிக்க வேண்டும் என உத்தர விட்டதோடு சில வழிகாட்டு தல்களையும் வழங்கினர்.

மதுரை ஐகோர்ட்டு உத்தரவை நடை முறைப்படுத்துவது குறித்து விருதுநகர் மாவட்ட அதிகாரிகள், வனத்துறை யினர் தீவிர ஆலோசனை நடத்தினர். இறுதியில் இன்று (3-ந் தேதி) முதல் நாள்தோறும் பக்தர்களை சதுரகிரிக்கு அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டது.


இதுகுறித்து மாவட்ட வருவாய் அதிகாரி ராஜேந்திரன் கூறுகையில், மதுரை ஐகோர்ட்டு உத்தரவுப்படி சதுரகிரிக்கு தினமும் செல்ல பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. காலை 6 மணி முதல் 10 மணி வரை மட்டுமே சோதனை சாவடி வழியாக பக்தர்கள் அனுமதிக்கப்படு வார்கள். மாலை 4 மணிக்குள் லையில் இறங்கி திரும்பி வந்துவிட வேண்டும்.

உரிய அனுமதியின்றி எவரேனும் மலையில் தங்கி இருந்தால் கடுமு நடவடிக்கை எடுக்கப்படும். சதுரகிரிக்கு அனு மதிக்கப்பட்ட வழியில் மட்டுமே செல்ல வேண்டும். வேறு எந்த பகுதியிலும் நுழையக்கூடாது. மதுரை ஐகோர்ட்டு வழிகாட்டுதல்களை பின்பற்றி பக்தர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

இதற்கிடையில் மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவுப்பட்டி இன்று முதல் சதுரகிரிக்கு செல்ல பக்தர்கள் அனுமதிக்கப்பட்ட னர். காலை 6 மணிக்கு தாணிப்பாறை அடிவார கேட் திறக்கப்பட்டது. ஆனால் பக்தர்கள் யாரும் வரவில்லை.

நேற்று இரவு உத்தரவு வந்ததால் பொது மக்களுக்கு உடனடியாக விபரம் தெரியவில்லை. இதனால் இன்று பக்தர்கள் யாரும் சதுரகிரிக்கு வரவில்லை. இனிவரும் நாட்களில் பக்தர்கள் நாள்தோறும் வர ஆர்வம் காட்டுவார்கள் என தெரிகிறது.

## திருப்பதி மலை அடிவாரத்தில் புதிய தூங்கும் விடுதி



திருப்பதியில் ஏழுமலையானை தரிசிக்க வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போது திருப்பதி மலையில் 55 ஆயிரம் பக்தர்கள் தங்குவதற்கான விடுதிகள் மட்டுமே உள்ளன.

தினமும் தரிசனத்திற்கு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருவதால் அவர்கள் தங்குவதற்கு தேவையான வசதிகள் இல்லாமல் அவதி அடைந்து வருகின்றனர்.

இது குறித்து அமராவதியில் நேற்று முதல் மந்திரி சந்திரபாபு தலைமையில் திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர்.நாயுடு, திருப்பதி தேவஸ்தான முதன்மை செயல் அலுவலர் சியாமளா ராவ், இணை செயல் அலுவலர் வெங்கைய்ய சவுத்ரி மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் ஆய்வு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் திருப்பதி மலையில் பக்தர்களின் நெரிசல் குறித்தும், தங்கும் இட வசதிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

ஆய்வுக் கூட்டத்தில் அலிபிரியில் 3 தனியார் ஓட்டல்கள் கட்ட 35 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு இருந்தது.

தனியார் ஓட்டல் கட்ட ஒதுக்கப்பட்ட நிலங்களை சந்திரபாபு நாயுடுவின் உத்தரவின் பேரில் ரத்து செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் 25 ஆயிரம் பக்தர்கள் தங்கும் வகையில் விடுதிகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளன.

தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் தங்கள் வாகனங்களை அலிபிரியில் நிறுத்திவிட்டு மின்சார பஸ்களில் செல்வதால் காற்று மாசு ஏற்படுவது குறையும். பார்க்கிங் வசதி பிரச்சனைகள் தீர்க்கப்படும்.

மேலும் அலிபிரியில் ஆன்மீக சூழ்நிலை, தூய்மையை உறுதி செய்வ தற்கான ஏற்பாடுகளை செய்ய தேவஸ்தான அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

திருப்பதியில் நேற்று 72,721 பேர் தரிசனம் செய்தனர். 25,545 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ 4 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 14 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

# மூன்றாம் நாள் காலை ரிஷபம் வாகனத்தில் வீதி உலா



வாழைப்பந்தல் அருள்மிகு ஸ்ரீதர் மசம்பவர்த்தினி சமேத அருள்மிகு ஸ்ரீபக்த வச்சலேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் பார் போற்றும் பங்குனி உத்திர பிரம்மோற்சவ பெருவிழா நடந்தது. மூன்றாம் நாள் காலை ரிஷபம் வாகனத்தில் வீதி உலா நடந்தது.

## அரக்கனை வதம் செய்த பச்சைக்காளி, பவளக்காளி உற்சவம்

**தஞ்சாவூர், ஏப். 4:**

தஞ்சாவூரில், அரக்கனை வதம் செய்த கோடியம்மனின், பச்சைக்காளி, பவளக்காளி உற்சவம் வெகு விமர்சையாக நடந்தது.

தஞ்சாவூரை, ஆண்ட சோழ மன்னர்கள், நிசும்பசூதனியை வெற்றித்தெய்வமாகப் போற்றி, எட்டு திசைகளிலும் அம்மன் கோவில்களை உருவாக்கினர். விஜயாலயச் சோழனால், நிசும்பசூதனி அம்மன் சன்னதி ஒன்றை கரந்தையில் அமைக்கப்பட்டது.

தஞ்சன் என்ற அரக்கனை, சாந்தமான பச்சைகாளியாகவும், ருத்ரமாக பவளக்காளியாகவும் அம்மன் அவரதாரம் எடுத்து, அரக்கனை வதம் செய்து அழித்தார். அரக்கனை அழிக்க கோடி அவரதாரம் எடுத்தால், அம்மனுக்கு கோடியம்மன் என்ற பெயர் உருவானது. கோடியம்மன் கோவிலில் பச்சைக்காளி, பவளக்காளி உற்சவ திருவிழாவிற்காக, கடந்த மார்ச் 18ல் காப்புக் கட்டுதலுடன் விழா துவங்கியது.

தொடர்ந்து, மேல ராஜ வீதியில் சங்கரநாராயணன் கோவிலுக்கும், கொங்கணேஸ்வரர் கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு துவங்கி



நேற்று அதிகாலை வரையில், பச்சைக்காளி, பவளக்காளி உறவாடுதல் நிகழ்ச்சி நடந்தது. இதில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இன்று பச்சைக்காளி, பவளக்காளி ஐம்பொன் திருமேனிகள் அலங்கரிக்கப்பட்ட தேரில் எழுந்தருளி நான்கு ராஜ வீதிகளிலும் வலம் வந்து களிமேட்டுக்கு அழைத்துச் செல்லும் நிகழ்ச்சியும், இரவு களிமேட்டில் வழிபாடுகள் நடைபெறும். பிறகு, களிமேட்டில் இருந்து 5ம் தேதி காலை கோடியம்மன் கோவிலை வந்தடைதல், 6ம் தேதி காப்பு அவிழ்ப்பு ஆகிய நிகழ்ச்சியுடன் விழா நிறைவு பெறுகிறது.

## ராஜஸ்தான் ,ஒடிசா மாநிலங்கள் உருவான நாள் விழா




சென்னை கவர்னர் மாளிகையில் நேற்று நடந்த ராஜஸ்தான்,ஒடிசா மாநிலங்கள் உருவான நாள் விழாவில் கலாசார நடனம் ஆடிய கலைஞர்களுக்கு கவர்னர் ரவி பரிசளித்தார்.

## தர்ம சாஸ்தா கோவிலில் பங்குனி விழா



குமரி மாவட்டத்தில் பாரம்பரிய முறைப்படி பழங்குடி சமுதாய மக்கள் நேரடியாக பூஜை நடத்தும் அரகநாடு தர்ம சாஸ்தா கோவிலில் பங்குனி விழா நேற்று கொடி ஏற்றத்துடன் துவங்கியது.

## உக்கல் அருள்மிகு மடாவளம் காமாட்சி அம்பாள் கோயிலில் மகா ஆரத்தி தரிசனம்

**செய்யாறு ஏப்.4:**



செய்யாறுஅடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் காமாட்சி அம்பாள் கோயிலில் நேற்று முன்தினம் மாலை மகா ஆரத்தி தரிசன நிகழ்வு நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் காமாட்சி அம்பாள் கோயிலில் நேற்று முன்தினம் மாலை யாகசாலை பூஜை ,கலச புறப்பாடு ஆகிய நிகழ்வுகளை ஆலய குரு சங்கர் குருஜி நடத்தினார். பின்னர் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் அம்பாள் பக்தர்களுக்கு அருள் பாலித்தார் . திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முன்னதாக பக்தர்களுக்கு கோயில் நிர்வாகத்தின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

## கவிக்கோ துரை வசந்தராசன் அவர்களுக்கு தன்முனைத் தமிழாழி விருது



சென்னை எழும்பூர் இக்சா அரங்கில் நடைபெற்ற தன்முனைத் திருவிழாவில் தன்முனைக் கவிதைகள் குழும நிறுவனர் முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்கள் பண்ணைத் தமிழ்ச்சங்க நிறுவனத் தலைவர் கவிக்கோ துரை வசந்தராசன் அவர்களுக்கு தன்முனைத் தமிழாழி விருதினை வழங்குகிறார். கவிஞர் அமுதா தமிழ்நாடன், அன்பு பாலம் விஜய் ஆனந்த், கவிஞர் நெல்லை அன்புடன் ஆனந்தி, கன்னிக்கோவில் இராஜா, அமுதபாரதி, அன்புச்செல்வி சுப்புராஜூ ஆகியோர் உடன் இருக்கிறார்கள்.

## வருகின்ற 15,16,17 தேதிகளில் விவசாய சங்க 30 வது மாநாடு



நாகப்பட்டினத்தில் வருகின்ற 15,16,17 ஆகிய மூன்று தினங்களில் நடைபெறும் விவசாய சங்க 30 வது மாநாட்டில், வலங்கைமான் ஒன்றியத்தில் இருந்து 2000 விவசாயிகள் கலந்து கொள்வது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய குழு கூட்டத்தில் முடிவு.

## உலக ஆட்டிசம் நாள்




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் இ.ஆ.ப. அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் உலக ஆட்டிசம் நாள் முன்னிட்டு ஆட்டிசம் குறைபாடுள்ள குழந்தைகளுடன் கேக்குகள் வெட்டி அவர்களுக்கு வழங்கினார்.

## நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி



கோடை வெயிலின் தாக்கம் காரணமாக திருவண்ணாமலை 2.4.2025 அன்று காமாட்சி அம்மன் கோவில் அருகில் நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சியில் உபயதாரர் திரு. Vn A.C மணிகண்டன் தலைவர் ஆரிய வைசிய சமாஜம் தலைவர் மற்றும் வாசவி சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு 500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு நீர் மோர் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஆர். சி. தொடக்கப் பள்ளியின் விளையாட்டு விழா




கும்பகோணம் வட்டம் வடகரை ஆர். சி. தொடக்கப் பள்ளியின் விளையாட்டு விழா 3.4.25. அன்று நடைபெற்றபோது பள்ளியின் ஆசிரியைகள் .

**செய்திபடம் : குடந்தை பரிபூரணன்.**

## வீரமாகாளி அம்மன், வீரமாமுனியன் ஆலயத்தின் மூன்றாம் ஆண்டு வருடாபிஷேக விழா



புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள திருக்களம்பூரில் அருள்மிகு வீரமாகாளி அம்மன்,அருள்மிகு வீரமாமுனியன் ஆலயத்தின் மூன்றாம் ஆண்டு வருடாபிஷேக விழா நடைபெற்றது. சிவாச்சாரியார் சிவ ஸ்ரீகுமார் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் யாக வேள்வி நடத்தி புனித நீர் அடங்கிய கலசத்தை ஆலயத்தைச் சுற்றி எடுத்து வந்து சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்தனர் விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை திருக்களம்பூர் கண்ணபட்டார் பங்காளிகள் செய்திருந்தனர். விழாவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## திருப்பதி கோதண்டராமர் கோவிலில் தேரோட்டம்



திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் கீழ்உள்ள திருப்பதி கோதண்டராமர் கோவிலில் நேற்று தேரோட்டம் நடந்தது.

ரவுசு மணி

வயலெண்டாக சாதிக்க முடியாததை செயலை

சைலண்டாக இருந்தால் நிச்சயம் சாதிக்கலாம்



V. முத்து ராமகிருஷ்ணன்

## புதியதாக நியமிக்கப்பட்ட சேர்மன் , உறுப்பினர்களுக்கு கவர்னர் வாழ்த்து

**புதுச்சேரி, ஏப்.4:**

புதியதாக நியமிக்கபட்டுள்ள புதுச்சேரி குழந்தைகள் உரிமை மற்றும் பாதுகாப்பு ஆணையத்தின் சேர்மன் சிவராமன் மற்றும் உறுப்பினர்கள் சிவக்குமார், முருகசாமி, ஜெகநாதன், கோமுகி, கார்குழலி கலைச்செல்வி ஆகியோர் மரியாதை நிமித்தமாக கவர்னர் கைலாசநாதனை சந்தித்தனர்,

புதியதாக நியமிக்கப்பட்ட சேர்மன் மற்றும் உறுப்பினர்களுக்கு கவர்னர் வாழ்த்துக்களை தெரிவித்துக்



கொண்டார், மேலும் சிறார்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்கும் வகையில் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்றும் ஆணையத்தின் செயல்பாடுகளுக்கு அரசு உறுதுணையாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.




புதுச்சேரி இராஜீவ் காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 30ஆம் ஆண்டு விழா சபாநாயகர் செல்வம் பங்கேற்பு.

## குழந்தை நட்சத்திரம் லியானாவிற்கு விருது வழங்கும் விழா



**சென்னை, ஏப்.4:**

தமிழக திரைப்பட துணை நடிகர் நடிகைகள் மற்றும் திரைப்பட உதவியாளர் நல சங்க ஆண்டு விழாவில் மாநில தலைவர் பன்னீர்செல்வம் முன்னிலையில் அகஸ்தியர் ஹெர்பல் நிறுவனர் நாகலிங்கம், வாழை ஹோட்டல் நிறுவனர் இணைந்து குழந்தை நட்சத்திரம் லியானா, மேக்கப் ஆர்ட்டிஸ்டும், நடிகையுமான அங்கிதா ஆகியோர்க்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

உடன் திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர், நடிகர் அப்பா பாலாஜி, வழக்கறிஞர் பிரியதர்ஷினி, எழுத்தாளர் விவேக் ராஜ் மற்றும் நடிகர்கள், நடிகைகள் அனைவரும் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. நடனமும், பாட்டும், பேச்சும் விழாவிற்கு பெருமை சேர்த்தது.

## உஜ்ஜயினி மாகாளியம்மன் ஆலய காப்புகட்டு நிகழ்ச்சி, பூத்தட்டும் சாமி வீதி உலா



புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அருள்மிகு உஜ்ஜயினி மாகாளியம்மன் ஆலய பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு (02.04.2025) காப்புகட்டு நிகழ்ச்சியும் பூத்தட்டும் சாமி வீதி உலாவும் நடைபெற்றது நிகழ்ச்சியை ஊர் பொதுமக்களும்.ஆபரண தொழிலாளர்களும் செய்திருந்தனர்.

# தமிழகத்தில் 17 மாவட்டங்களுக்கு கனமழை வாய்ப்பு

**சென்னை, ஏப்.4:**

நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகங்கை, தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் நாளை (ஏப்.4) கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் தெற்கு கேரள பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, (ஏப்.3) தென் தமிழகத்தில் அநேக இடங்களிலும், வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்தது.

நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகங்கை, தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்தது.

ஏப்.4-ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகங்கை, தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஏப்.5-ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, தேனி, திண்டுக்கல், தென்காசி, கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஏப்.6-ம் தேதி, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. ஏப்.7 முதல் ஏப்.9-ம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது .

ஏப்.3 மற்றும் ஏப்.5ம் தேதிகளில், தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை பொதுவாக இயல்பை ஒட்டி, இயல்பை விட சற்று குறைவாக இருக்கக்கூடும். ஏப்.6 மற்றும் ஏப்.7ம் தேதிகளில், தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், இன்று (ஏப்.4) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது அதிகபட்ச வெப்பநிலை 33 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும், என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### சென்னை மாநகராட்சியில் வேலை! 345 பணியிடங்கள்..

சென்னை: சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள நகர்புற சுகாதார நல மையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. மொத்தம் 345 பணியிடங்களுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த பணியிடங்களுக்கு யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம். கல்வி தகுதி என்ன? வயது வரம்பு உள்ளிட்ட விவரங்களை இங்கே பார்க்கலாம்.

பணியிடங்கள் விவரம்:

* மருத்துவ அதிகாரி - 60
* ஸ்டாஃப் நர்சு - 60
* பல்நோக்கு சுகாதார பணியாளர் (சுகாதார ஆய்வாளர் - கிரேடு-II) - ஆண்கள் - 60
* சப்போர்ட் ஸ்டாஃப் - 60
* துணை செவிலியர் மற்றும் பேறுகாலப் (பெண்) பணியாளர் (ANM) - 88
* எக்ஸ்-ரே தொழில்நுட்ப வல்லுநர் - 06
* Special Educator for Behavioural Therapy - 03
* Occupational Therapists - 03
* சமூக சேவகர் - 03
* மூத்த ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் - 01
* ஆய்வகம் - ஸ்டோர் அஸ்சிஸ்டண்ட் - 01

என மொத்தம் 345 பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன.

**கல்வி தகுதி:** பணியின் தன்மைக்கேற்ப கல்வி தகுதி மாறுபடும். மருத்துவ அதிகாரி பணிக்கு எம்பிபிஎஸ் முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். டிஜிஎன்எம், டிஎம்எல்டி, எட்டாம் வகுப்பு முடித்தவர்களுக்கான வேலை வாய்ப்புகள் உள்ளன. அதாவது ஸ்டாஃப் நர்சு பணிக்கு டிஜிஎன்.எம் அல்லது பிஎஸ்சி நர்சிங் முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். சப்போர்ட் ஸ்டாஃப் பணிக்கு 8 ஆம் வகுப்பு முடித்தவர்கள் எழுத படிக்க தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**வயது வரம்பு:** ஸ்டாஃப் நர்சு பணிக்கு விண்ணப்பிக்க வயது உச்ச வரம்பாக 50 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எக்ஸ்ரே டெக்னிஷியன், சப்போர்ட் ஸ்டாஃப் பணிக்கு 45 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். பல்நோக்கு சுகாதார பணியாளர் பணிக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு 35 ஆகும். இதர பணியிடங்கள் அனைத்திற்கும் 40 வயது அதிகபட்ச வயது வரம்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சம்பளம் எவ்வளவு?

* மருத்துவ அதிகாரி - ரூ.60,000/
* ஸ்டாஃப் நர்சு - ரூ. 18,000
* பல்நோக்கு சுகாதார பணியாளர் (சுகாதார ஆய்வாளர் - கிரேடு-II) - ஆண்கள் - ரூ.14,000
* சப்போர்ட் ஸ்டாஃப் - ரூ. 8,500
* துணை செவிலியர் மற்றும் பேறுகாலப் (பெண்) பணியாளர் (ANM) - ரூ.14,000
* எக்ஸ்-ரே தொழில்நுட்ப வல்லுநர் - ரூ.13,300
* Special Educator for Behavioural Therapy - ரூ.23,000
* Occupational Therapists - ரூ.23,000
* சமூக சேவகர் - ரூ. 23800/-
* மூத்த ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் - ரூ. 25000/-
* ஆய்வகம் - ஸ்டோர் அஸ்சிஸ்டண்ட் - ரூ.12000/-

தேர்வு முறை:

தகுதியும் ஆர்வமும் உள்ள விண்ணப்பதாரர்கள் தேர்வு அறிவிப்பினை படித்து உறுதி செய்து கொண்ட பிறகு விண்ணப்பிக்கலாம். தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். இந்த பணியிடங்கள் அனைத்தும் ஒப்பந்த அடிப்படையிலானது.

விண்ணப்பிப்பது எப்படி: விண்ணப்பிக்க ஆர்வம் உள்ள விண்ணப்பதாரர்கள் தகுந்த சான்றிதழ் நகல்களுடன் தபால் மூலமாகவோ நேரிலோ விண்ணப்பங்களை சமர்பிக்கலாம். தபால் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

The Member Secretary, Chennai City Urban Health Mission, Public Health Department, Ripon Buildings, Chennai - 600003

விண்ணப்பிக்க கடைசி நாள்: 11.04.2025 மாலை 5.00 மணிக்குள். இதற்குபிறகு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. அதிகாரப்பூர்வ அறிவிப்பினை படிக்க இங்கே கிளிக் செய்யவும்: https://chennaicorporation.gov.in/gcc/pdf/Urban_Health_Wellness.pdf

## அணையில் நீச்சல் அடித்த யானை



**பரம்பிக்குளம், ஏப்.4:**

பரம்பிக்குளம் அணையில் நீச்சல் அடித்து கரை யைக் கடந்த ஒற்றைக்காட்டு யானை வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கேரளம் பகுதியில் தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் கட்டுப்பாட்டில் உள்ளது பரம்பிக்குளம் அணை. இந்த அணை கேரளம் வனப்பகுதியை சுற்றி உள்ள தால் அவ்வப்போது வனத்தில் உள்ள புலி, யானை, சிறுத்தை, குரங்கு, ஓநாய் உள்ளிட்ட வனவிலங்குகள் தண்ணீர் குடிப்பதற்காக அணைக்கு வந்து செல்வது வழக்கம். தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் பெரும்பாலும் விலங்குகள் அணைப்பகுதி அருகே காணப்படுகிறது.

இந்நிலை யில் 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணை யின் நீர்மட்டம் இன்றைய நிலவரப்படி 51.25 அடி யாக உள்ளது. கிட்டத்தட்ட நிரம்பி காணப்படும் பரம்பிக் குளம் அணையில் ஒற்றைக்காட்டு யானை செவ்வா யன்று மதியம் நீச்சல் அடித்தபடி அக்கறையிலிருந்து இக்கரைக்கு வந்துள்ளது. இதனை அப்பகுதியைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் சிலர் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளனர். தற்போது இந்த வீடியோ வைரலாகி வருகிறது.

**காகத்தை கண்டு அச்சப்பட்ட யானை**

இதேபோன்று, புதனன்று தண்ணீருக்காக குட்டியு டன் வந்த மூன்று காட்டு யானைகள் கோவை தடாகம் பகுதியில் உள்ள பொன்னூத்து அம்மன் கோவில் அருகே உள்ள வனத் துறையினர் வைத்திருந்த தண்ணீர் தொட்டியில் யானைகள் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்தது. அப்பொழுது அங்கு வந்த ஒரு காகம், தொட்டியில் மேல் அமர்ந்தது. இதைக் கண்டு அச்சமடைந்த யானைகள் பின் வாங்கின அந்தக் காட்சி கள் அங்கு இருந்த ஒருவர் தனது செல்போனில் வீடியோ பதிவு செய்திருந்தார். அந்தக் காட்சிகள் தற்பொழுது சமூக வலைதளங்களில் வைரலாகி வரு கிறது.


## தீக்குழி அருகே குழந்தையுடன் விழுந்த நபர்

பள்ளிபாளையத்தில் கோவில் திருவிழாவின் போது, தீக்குழி அருகே பச்சிளம் குழந்தையுடன் தவறி விழுந்த நபரால் பரபரப்பு ஏற்பட்டது. நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் ஆவரங்காடு பகுதியிலுள்ள ஸ்ரீஅக்னி மாரியம்மன் கோவில் தீ குண்டம் இறங்கும் திருவிழா புதனன்று நடைபெற் றது. சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக் கான பக்தர்கள், சிறுவர், சிறுமியர், இளம் பெண்கள், இளைஞர்கள் என பல்வேறு தரப்பினர் பங்கேற்றனர். ஆவரங்காடு பகுதியைச் சேர்ந்த குமார் என்பவர், தனது ஆறு மாத பெண் குழந்தையுடன் தீ மிதிப்பதற்காக வந்தார். அப்போது அக்னி குண்டத்தில் நடந்து செல் லும் போது, எதிர்பாராத விதமாக நிலை தடுமாறி அக்னி குண்டத்தில் மிக அருகிலேயே தன் குழந்தையுடன் விழுந்தார். இதனால் அதிர்ச்சியடைந்த அங்கிருந்த வர்கள் குழந்தையையும், அவரையும் மீட்டனர். இச்சம்ப வத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## தமிழில் பெயர் பலகை...இல்லையென்றால் அபராதம்: திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அதிரடி

**திருவண்ணாமலை, ஏப்.4:**

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள வணிக நிறுவனங்கள், கடைகளில் தமிழில் பெயர் பலகை வைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.




திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பள்ளி - கல்லூரிகளில் உள்ள பெயர் பலகைகளை தமிழில் வைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில், தமிழில் பெயர்ப்பலகை வைப்பவர்கள் ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளில் குறிப்பிடப்படும் வார்த்தைகளை தமிழ் எழுத்தை விட சிறிய அளவில் வைக்க வேண்டும்.

வருகின்ற மே 15ம் தேதிக்குள் மாவட்டத்தில் உள்ள அனைத்து இடங்களிலும் தமிழில் பெயர் பலகை இருக்க வேண்டும். பிற மொழிகளில் பெயர் பலகைகள் இருந்தால் அபராதம் விதிக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் உத்தரவிட்டுள்ளார்.

## தென்காசி காசி விஸ்வநாதர் கோயில் கும்பாபிஷேகத்திற்கு இடைக்கால தடை!

**மதுரை, ஏப்.4:**

தென்காசியில் பிரசித்தி பெற்ற காசி விஸ்வநாதர் கோயில் அமைந்துள்ளது. பழமை வாய்ந்த இந்த கோவிலில் கடந்த சில மாதங்களாக புனரமைப்பு பணிகள் நடைபெற்று வந்தது. இதனிடையே கோயில் கும்பாபிஷேகம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், கோயிலில் புனரமைப்பு பணிகள் முழுமையாக நிறைவடையவில்லை என பக்தர்கள் பலரும் குற்றம் சாட்டினர்.




இந்த நிலையில், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது. தென்காசியை சேர்ந்த நம்பிராஜன் என்பவர் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார். புனரமைப்பு பணிகள் முழுமையாக நிறைவடையும் வரை கும்பாபிஷேகம் நடத்த கூடாது என கோரிக்கை விடுத்தார். இந்த நிலையில், கும்பாபிஷேகம் நடத்த இடைக்கால தடை விதித்து நீதிபதிகள் நிஷாபானு, ஸ்ரீமதி அமர்வு உத்தரவிட்டுள்ளது. புனரமைப்பு பணிகள் முழுமையாக நிறைவடைந்த பின்னரே கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என உத்தரவிட்டனர்.

## இலங்கை கடற்படை கைப்பற்றிய தமிழக மீனவர்களின் 74 படகுகளை கடலில் மூழ்கடிக்க முடிவு

**ராமேசுவரம், ஏப்.4:**

இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு பராமரிப்பின்றி சேதமடைந்துள்ள தமிழக மீனவர்களின் படகுகளை அந்நாட்டு மீன்வளத் துறை கடலில் மூழ்கடிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.



இலங்கை கடற்படையினரால் கடந்த 11 ஆண்டுகளில் சுமார் 500 படகுகளை கைப்பற்றி 3,800-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர். இதில் 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து 2024-ம் ஆண்டு வரையிலும் இலங்கை நீதிமன்றங்கள் தமிழகம், புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த 180 படகுகளை நாட்டுடமையாக்கி உள்ளன. மீனவர்களின் பல்வேறு கட்டப் போராட்டங்களுக்கு பின்னர் மத்திய, மாநில அரசுகளின் முயற்சிகளினால், சிறை தண்டனைக்கு பிறகும் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் படகுகள் விடுவிக்கப்படவில்லை.

இவ்வாறு இலங்கை கைப்பற்றிய தமிழக மீனவர்களின் படகுகள் தலைமன்னார், காங்கேசன்துறை, காரைநகர், க்ராஞ்சி, மயிலிட்டி, கல்பிட்டி ஆகிய மீன்பிடி இறங்குதளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இந்த மீன்பிடி இறங்குதளங்களை பயன்படுத்தி வந்த இலங்கை மீனவர்கள், தங்கள் படகுகளை நிறுத்துவதற்கு இடம் இல்லாமல் தமிழக மீனவர்களின் படகுகள் ஆண்டுக்கணக்காக ஒரே இடத்தில் மீன்பிடி இறங்குதளங்களில் நிறுத்தப்பட்டுள்ளதால் கடற்கரை மாசடைவதுடன் இலங்கை மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுவதாகவும் புகார் தெரிவித்தனர்.

மேலும், தமிழக மீனவர்களின் படகுகள் பராமரிப்பின்றி சேதமடைந்து, படகுகளின் உள்ளே மழை நீரும், கடல் நீரும் உட்புகுந்த நிலையிலும் உள்ளன.

இதில் அதிகம் சேதமடைந்து மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள 74 படகுகளை நடுக்கடலில் மூழ்கடிக்க அந்நாட்டு மீன்வளத்துறை முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மீனவர்களின் படகுகள் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என தமிழக மீனவர்கள் தொடர் போராட்டங்களை நடத்திய நிலையில், தற்போது படகுகளை கடலில் மூழ்கடிக்க முடிவு செய்துள்ளது தமிழக மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# பள்ளி மாணவ-மாணவிகள் 100 பேருக்கு கட்டணமில்லா உண்டு, உறைவிட நீட் பயிற்சி



தஞ்சாவூர், ஏப்.4-

தஞ்சாவூர் மாவட்டத்தில், மாவட்ட நிர்வாகம் சார்பில், பள்ளி கல்வித் துறை மற்றும் ரோட்டரி கிளப் ஆப் தஞ்சாவூர் இணைந்து நடத்தும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கான நீட் குறுகிய கால உண்டு, உறைவிட பயிற்சி துவக்க விழா, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலக வளாகத்தில், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் முன்னிலையில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில், தஞ்சாவூர் மாவட்டத்தில் நீட் தேர்விற்கு விண்ணப்பித்த 430 மாணவர்களின் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படும் நீட் குறுகிய கால பயிற்சிக்கு விருப்பம் தெரிவித்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியைச் சார்ந்த 100 மாணவர்களுக்கு, ரோட்டரி கிளப் ஆப் தஞ்சாவூர் மிட் டவுன் மூலம் சி அகாடமியில் கட்டணமில்லா உண்டு, உறைவிடப் பயிற்சி புதன்கிழமை முதல் நடைபெறுகிறது. நீட் குறுகிய கால பயிற்சியை திறம்பட மேற்கொள்ளும் பொருட்டு மாணவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடம், மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு மாணவ, மாணவிகளுக்கு நீட் தகுதி பயிற்சிக்குத் தேவையான கையேடுகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் இரா. அண்ணாதுரை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் எம். ரவிச்சந்திரன், மாவட்ட கல்வி அலுவலர் இள. மாதவன், மாவட்ட நீட் ஒருங்கிணைப்பாளர் வீ.அருள்ராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஊராட்சி மன்ற அலுவலகத்தை இடமாற்றம் செய்ய மக்கள் எதிர்ப்பு

நாமக்கல், ஏப்.4:

சிங்கிலிப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகத்தை இட மாற்றம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட ஆட்சி யரிடம் செவ்வாயன்று பொதுமக்கள் மனு அளித்தனர். அம்மனுவில், நாமக்கல் மாவட்டம், சிங்கிலிப்பட்டி கிராமத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகி றோம். கடந்த 30 ஆண்டுகளாக மாரியம்மன் கோவில் அரு கில் ஊராட்சி மன்ற அலுவலகம் செயல்பட்டு வருகிறது. அத னருகிலேயே, அங்கன்வாடி மையம், நியாயவிலைக் கடை, கிராம நிர்வாக அலுவலகம் உள்ளிட்டவை செயல் பட்டு வருகின்றன.

தற்போது 2 கி.மீ. தொலைவில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்களுக்கு அலைச்சல் ஏற்படுவதுடன், மிகுந்த சிரமத்துக்குள்ளாவர். எனவே, தற்போதைய ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் உள்ள காலியிடத்தில் புதிய ஊராட்சி மன்றக் கட்டிடத்தை கட்டி மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயிலில் பயணம் செய்யும் பெண்களின் பாதுகாப்புக்காக வாட்ஸ் அப் குழு துவக்கம்

தருமபுரி, ஏப்.4-

ரயிலில் பயணம் மேற்கொள்ளும் பெண்களின் பாதுகாப் புக்காக காவல் துறை சார்பில் வாட்ஸ் அப் குழு துவங்கப் பட்டுள்ளது. தருமபுரியில் ரயிலில் பயணம் செய்யும் பெண்கள் பாது காப்புக்காக வாட்ஸ்ஆப் குழு தொடங்கும் நிகழ்ச்சி செவ்வா யன்று தருமபுரி ரயில் நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

சேலம் வட்ட காவல் ஆய்வாளர் சிவசெந்தில்குமார் தலைமை வகித்தார். தருமபுரி பாதுகாப்புப் படை ஆய்வாளர் சந்தோஷ் கவுக்கர் முன்னிலை வகித்தார். ரயிலில் பெண் பயணிகள் பாது காப்பாக பயணம் மேற்கொள்வது குறித்தும், சமூக விரோதி களிடம் இருந்து ஏற்படும் பிரச்னைகளில் இருந்து தற்காத்துக் கொள்வது குறித்தும், விலை உயர்ந்த உடைமைகளை பாது காத்துக் கொள்வது குறித்தும், பிரச்சனை ஏதும் நிகழ்ந்தால் 1512, 139, 1091, 1098 எனற கட்டணமில்லா எண்களில் தொடர்பு கொள்ள வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதைத்தொடர்ந்து பெண் பயணிகள் பாதுகாப்பிற்காக 9498101964 என்ற தொலைபேசி எண் கொண்ட வாட்ஸ் ஆப் குழு தொடங்கப்பட்டது. இந்த குழுவின் மூலம் பெண்கள் தங்க ளின் பிரச்னைகளை தெரியப்படுத்தலாம். புகார்கள் குறித்து துறை அதிகாரிகள் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும், என அறிவுறுத்தப்பட்டது.

## அவசரகதியில் கான்கிரீட் சாலை எதிர்ப்பு தெரிவித்து மக்கள் முற்றுகை

திருப்பூர், ஏப்.4:

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட முருகம்பாளையம் பகு தியில் அவசரகதியில் கான்கிரீட் சாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் புதனன்று மாநகராட்சி 4 ஆவது மண்டல அலுவலகத்தை முற்றுகையிட்டதால் பர பரப்பு ஏற்பட்டது.

திருப்பூர் மாநகராட்சி, 41 ஆவது வார்டுக்குட்பட்ட அண்ணா நகர், முருகம்பாளையம் பட்டத்தரசி அம்மன் கோவில் உள்ளிட்ட வீதிகளில் பழுதடைந்த மழைநீர் வடி காலை அகற்றி புதிய மழைநீர் வடிகால் மற்றும் கான்கிரீட் சாலை அமைப்பதற்கு ரூ.26 லட்சம் மதிப்பீட்டில் கடந்த மாதம் 13 ஆம் தேதி பணி துவக்க விழா நடைபெற்றது. இந்நிலை யில், 25 நாட்கள் கடந்த நிலையில், இப்பகுதியில் கான்கிரீட் சாலை அமைப்பதற்காக அவசரகதியில் குழிகள் தோண்டப் பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், சாலையின் நடுவே இருக்கும் மின் கம்பத்தை மாற்றி அமைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், சாக் கடை வசதியும் ஏற்படுத்தப்படவில்லை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், சாக்கடை வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், உடைந்து விழும் நிலையில் உள்ள மின் கம் பத்தை மாற்றி அமைத்த பிறகே கான்கிரீட் சாலை அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். மேலும், முருகம்பாளையத்தில் உள்ள திருப்பூர் மாநகராட்சி 4 ஆவது மண்டல அலுவலகத்தை முற்றுகையிட்டு காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத்தொடர்ந்து அதிகாரி கள் பேச்சுவார்த்தை நடத்தி பொதுமக்களை சமாதானப் படுத்தினர்.

# வாழைத்தார்கள் விலை உயர்வு



கோபி, ஏப்.4:

கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெற்ற வாழைத்தார் ஏல விற்பனையில் வாழைத்தார் கள் விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்து உள்ளனர்.

ஈரோடு மாவட்டம், கோபி சுற்று வட்டாரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப் பளவில் விவசாயிகள் கதளி, நேந்திரன், செவ்வாழை, தேன்வாழை, பூவன், ரஸ்தாளி உள்ளிட்ட பல்வேறு ரகங்களில் வாழை சாகு படி செய்து வருகின்றனர். வாழை சாகுபடி யில் அறுவடை செய்யும் வாழைத்தார்களை கோபி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெறும் ஏலத்தில் கலந்து கொண்டு விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதனன்று ஏல விற்பனை நடை பெற்றது. இதில், கடந்த வாரம் கதளி, நேந் திரன் கிலோ ஒன்று 40 ரூபாய்க்கு விற்பனை யான வாழைதார்கள் புதனன்று நடைபெற்ற ஏலத்தில் 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை அதிகரித்து கிலோ ஒன்றுக்கு 55ரூபாய் முதல் 60 ரூபாய் வரைக்கு விற்பனை ஆனது.

இதே போல் கடந்த வாரம் குறைந்த விலைக்கு விற்பனை ஆன தேன்வாழை, செவ்வாழை இந்த வார விற்பனையில் தார் ஒன்று 800 ரூபாய் முதல் 900 ரூபாய் வரைக்கும் பூவன், ரஸ்தாளி உள்ளிட்ட வாழைதார்கள் 700 ரூபாய் முதல் 800 ரூபாய் வரையில் விற்பனை ஆனது. புதனன்று நடைபெற்ற ஏலத்தில் சுமார் பத்தாயிரம் வாழைதார்கள் வந்திருந்த நிலையில், வாழைத்தார்களை வியாபாரி கள் போட்டி போட்டுக்கொண்டு ஏலம் எடுத் தனர்.

மேலும், வரும் நாட்களில் தொடர் விஷேச தினங்கள் மற்றும் உள்ளூர் திருவிழாக்கள் என்பதால் பல்வேறு பகுதியிலிருந்து வந்த வியாபாரிகள் கோபி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெற்ற வாழைத் தார் ஏலத்தில் வாழைத்தார்களை போட்டி போட்டுக்கொண்டு ஏலம் எடுத்தனர். இத னால் வாழைத்தார்களின் விலை உயர்ந்து காணப்பட்டு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் தனர்.

# ஆட்டிசம் குறித்தான வாக்காத்தான் விழிப்புணர்வு கோவையில் மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்

கோவை, ஏப்.4:

ஆட்டிசம் குறித்தான விழிப்புணர்வு வாக்கத்தானை கோவையில் மாவட்ட ஆட்சியர் துவக்கிவைத்தார். உலக ஆட்டிசம் தினத்தை முன்னிட்டு கோவை பந்தய சாலை பகுதியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் வாக்கத்தான் நிகழ்ச்சி புதனன்று நடைபெற்றது.

இதில், சுமார் 50க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் அவர் களது பெற்றோர் கலந்து கொண்டனர். மாவட்ட ஆட்சியர் பவன்குமார் இந்நிகழ்வில், கலந்து கொண்டு ஆட்டிசம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நீல நிற பலூன்கள் பறக்க விட செய்தார். அதனைத் தொடர்ந்து வாக் கத்தான் நிகழ்வை துவக்கும் போது கொடியை ஆட்டிசம் சம்பாதித்த குழந்தையின் கையிலேயே கொடியை பிடித்து அசைக்க செய்து வாக்கத்தானை துவக்கி வைத்தார்.

தொடர்ந்து செய்தியாள ர்களுக்கு பேட்டியளித்த மாவட்ட ஆட்சியர், "ஆட்டிசம் குறித்து மக்கள் மத்தியிலும் பெற்றோர் கள் மத்தியிலும் விழிப்புணர்வை கொண்டு வர வேண்டும். இந்த நோய்க்கான முதல் கட்ட அறிகுறிகளை கண்டுபிடித் தால் உடனடியாக அதற்கான சிகிச்சைகளை அளிக்கலாம். அதனை பல்வேறு தனியார் அமைப்புகளுடன் இணைந்து அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது." என்றார்.

# வனப்பகுதியில் தீ விபத்தை தடுக்க நடவடிக்கை

சேலம், ஏப்.4:

வனப்பகுதியில் ஏற்படும் தீ விபத்தை தடுக்க வன த்துறையினர் கண்காணிப்பு, முன்னெச்சரிக்கைநடவடிக்கை களை தீவிரப்படுத்தியுள்ள னர்.



கோடைக்காலத்தில் வனப்பகுதி யில் தீ விபத்து ஏற்படுவதைத் தடுக்க காய்ந்த இலைகள், சருகுகள், காய்ந்த மரங்களை அகற்றும் பணியில் வனத் துறையினர் ஈடுபட்டுள்ளனர். அடிக்கடி தீ விபத்து நிகழும் பகுதிகளை அடையா ளம் கண்டு அங்கு கண்காணிப்பு பணி களை தீவிரப்படுத்தியுள்ளனர்.

அதன் படி, சேலம் மாவட்டத்தில் ஏற்காடு அடி வாரம், கன்னங்குறிச்சி, வலசையூர், வீராணம், கருங்காலி, செட்டிச்சாவடி, தேக்கம்பட்டி, குரும்பப்பட்டி, மஞ்சையன்காடு, வத்திக்காடு, மூங்கில்பாடி, சிவதாபுரம், அரியானூர், காக்கா பாளையம், சித்தாகோவில், இளம் பிள்ளை உள்ளிட்ட வனக்கிராமங்க ளில் வசிக்கும் மக்களிடையே தீ பற்றக் கூடிய பொருள்களை வனப்பகுதிக்கு எடுத்து செல்லக்கூடாது என அறிவுறுத் தப்பட்டது. வனப்பாதுகாப்பு சட்டத்தை மீறுபவர்கள் குண்டர் தடுப்புச் சட்டத் தின் கீழ் கைது செய்யப்படுவர் என எச் சரித்துள்ள வனத்துறையினர், பிற்பகல் 1 மணி முதல் 5 மணி வரை வனப்பகுதிக் குள் செல்வதை தடுக்க ரோந்துப் பணி யில் ஈடுபட்டுள்ளனர்.

## க்ரைம் கார்னர்

### கடைக்காரரை மிரட்டி பணத்தை திருடிய இருவர் கைது



தஞ்சாவூர், ஏப்.4:

தஞ்சையில் பூக்கடைக்காரரை மிரட்டி, கல்லாவில் இருந்து பணத்தை எடுத்துச்சென்ற வழக்கில் 2 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

தஞ்சாவூர் தொல்காப்பியர் சதுக்கம் பகுதியைச் சேர்ந்தவர் சங்கர்(42). இவர் அதே பகுதியில் பூக்கடை வைத்து நடத்தி வருகிறார். இந்நிலையில் கடந்த 31 ஆம் தேதி இவரது கடைக்கு வந்த 2 பேர், கல்லாவில் இருந்த ரூ.500 பணத்தை எடுத்தனர். இதை சங்கர் தட்டிக் கேட்ட போது அவரை மிரட்டியுள்ளனர். இதுகுறித்து, தஞ்சை கிழக்கு காவல்நிலையத்தில் சங்கர் புகார் செய்தார். இதன் பேரில் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

இதில் சங்கர் கடையில் இருந்து பணத்தை எடுத்துச் சென்றவர்கள், தஞ்சை கீழ வண்டிக்காரத் தெருவை அப்பாஸ் கார்த்தி (27) மற்றும் தஞ்சை வெட்டுக்கார தெருவைசேர்ந்த வெங்கடேசன் (28) என்பது தெரியவந்தது. இதையடுத்து, வெங்கடேசனை காவல்துறையினர் கைது செய்தனர். அப்பாஸ் கார்த்தி வேறொரு வழக்கில் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### ஆன்லைன் சூதாட்டத்தில் பணத்தை இழந்தவர் ரயில் முன்பு பாய்ந்து தற்கொலை




திருச்சி, ஏப்.4:

ஆன்லைன் சூதாட்டத்தில் ரூ.10 லட் சத்தை இழந்த தனியார் வங்கி உதவி மேலா ளர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் குறித்து போலீசார் விசா ரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், பிடாரமங்கலம் ஊராட்சி, தேவர்மலை பகுதி யைச் சேர்ந்தவர் ஜெயக்குமார் (33). இவருக்கு மனைவி மற்றும் இரு மகன்கள் உள்ள னர். இவர், ஈரோடு மாவட்டம், முத்தூரில் உள்ள தனியார் வங்கி கிளையில் உதவி மேலாளராகப் பணியாற்றி வந்தார். ஆன் லைன் சூதாட்டத்தில் ரூ.10 லட்சத்தை அவர் இழந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் ஜெயக்குமார் மனவேதனையில் காணப் பட்டுள்ளார்.

இந்நிலையில், நாமக்கல் மாவட்டம், மோகனூர் அருகே நெய்க்காரப்பட்டி பகுதியிலுள்ள தனது பாட்டி வீட்டிற்கு செவ் வாயன்று வந்துள்ளார். இதையடுத்து அவ் வழியாக சென்ற ரயில் முன் விழுந்து தற் கொலை செய்துகொண்டார். இதுகுறித்து தகவலறிந்த நாமக்கல் ரயில்வே போலீசார் அவரது உடலை மீட்டு, விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

### குட்கா கடத்திய 7 பேர் கைது ரூ.5 லட்சம் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல்

சேலம், ஏப். 4:

பெங்களூருவிலிருந்து சேலத்திற்கு மூன்று சொகுசு கார்களில் குட்கா மற்றும் ஹான்ஸ் போன்ற புகை யிலைப் பொருட்களைக் கடத்தி வந்த ஏழு பேரை சேலம் காவல்துறையினர் கைது செய்தனர்.

அவர்களிட மிருந்து ரூ.5 லட்சம் மதிப்புள்ள குட்கா பறிமுதல் செய்யப் பட்டது. சேலம் நகரில் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் ஹான்ஸ் பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்படுவதாக சேலம் டவுன் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத் தது. இதையடுத்து, மாநகர உதவி ஆணையர் ஹரி சங்கரி தலைமையில் ஆறு பேர் கொண்ட சிறப்புக் குழு அமைக்கப்பட்டது. கடந்த மூன்று மாதங்களாக, சேலம் நகரம் மற்றும் மாவட்டப் பகுதிகளில் இருந்து வரும் வாகனங்களை இந்த தனிப்பிரிவு போலீசார் கண் காணித்து வந்தனர். இந்நிலையில், செவ்வாய்பேட்டை பகுதியில் சொகுசு காரில் தடை செய்யப்பட்ட குட்கா பொருட் களை விற்பனை செய்த மணியனூரைச் சேர்ந்த லிங்கு ராஜ் என்பவரை போலீசார் கைது செய்தனர். விசாரணை யில், அவர் சேலம் நகரின் பல்வேறு இடங்களில் தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தது தெரி யவந்தது. இதனைத் தொடர்ந்து, சேலம் மாநகர மற்றும் செவ் வாய்பேட்டை போலீசார் இணைந்து நடத்திய சோதனை யில், 1,500 கிலோ எடையுள்ள ரூ.5 லட்சம் மதிப்புள்ள குட்கா பறிமுதல் செய்யப்பட்டது. இந்த கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டதாக பெங்களூரு கடை உரிமையாளர் உட்பட ஏழு பேர் கைது செய்யப் பட்டனர். மேலும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மூன்று சொகுசு கார்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்



# மாற்றுத்திறனாளி லாட்டரி முகவர்களுக்கு அரசின் உதவித் தொகை

திருவனந்தபுரம், ஏப்.4:

திருவனந்தபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலன்களுக்காக ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆர்.பிந்து தெரிவித்தார். இந்த நிதியாண்டில் 179 மாற்றுத்திறனாளி லாட்டரி முகவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு ரூ.5,000 வீதம் ரூ.8,95,000 மாற்றப்பட்டுள்ளது, என சமூக நீதித்துறை அமைச்சர் ஆர்.பிந்து கூறினார்.

நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பிற விளிம்புநிலை மக்களை உள்ளடக்கியதாக இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசாங்கம் காட்டும் உறுதிப்பாட்டின் ஒரு அளவீடாக இந்த லாட்டரி நிதி உதவி உள்ளது.

பல ஆண்டுகளாக செயலற்ற நிலையில் இருந்த லாட்டரி நிதி உதவித் திட்டம், முந்தைய இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசாங்கத்தால் மீண்டும் கொண்டுவரப்பட்டது. இரண்டு தவணைகளாக வழங்கப்பட்ட ரூ.2,500 தொகை, தற்போது ரூ.5,000 என்ற ஒரே தவணையில் வழங்கப்படுகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

# ஆன்லைனில் செயற்கை நுண்ணறிவு பயிற்சி கைட்டில் யார் வேண்டுமானாலும் படிக்கலாம்

திருவனந்தபுரம், ஏப்.4:

கேரள உட்கட்டமைப்பு மற்றும் கல்விக்கான தொழில்நுட்பம் (KITE) நடத்தும் ஆன்லைன் பயிற்சித் திட்டத்தின் இரண்டாவது தொகுதி ஏப்ரல் 12 ஆம் தேதி தொடங்கும். நான்கு வார 'ஏஐ எசென்ஷியல்ஸ்' பாடநெறிக்கு 10 விண்ணப்பங்கள் வரை சமர்ப்பிக்கலாம். பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வீடியோ வகுப்புகள் மற்றும் வளங்களுடன் கூடுதலாக, ஒவ்வொரு வாரமும் ஒரு ஆன்லைன் தொடர்பு வகுப்பும் உள்ளது.

சாதாரண மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் செயற்கை நுண்ணறிவு கருவிகளை திறம்பட பயன்படுத்த உதவுவதே இதன் நோக்கம். அலுவலகத் தேவைகள் உட்பட அன்றாட நடவடிக்கைகளுக்கு ஏஐ கருவிகளை எவ்வாறு பயன்படுத்துவது, சமூக ஊடகங்களுக்கான உள்ளடக்கத்தை உருவாக்குதல், கலை, இசை மற்றும் இலக்கியத் துறைகளில் பயன்படுத்தக்கூடிய கருவிகள், சுறுசுறுப்பான பொறியியல் மற்றும் பொறுப்பான ஏஐ போன்ற துறைகளில் மாணவர்கள் உட்பட அனைத்துப் பிரிவு மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் இந்தப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜிஎஸ்டி உட்பட ரூ.2,360 கட்டணம். பாடநெறியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். முதலில் பதிவு செய்யும் 2,500 பேருக்கு மட்டுமே அனுமதி. மேலும் தகவலுக்கு: www.kite.kerala.gov.in.

# தேசியநெடுஞ்சாலைமேம்பாட்டுக்கு 25 சதவிகிதம் நிதிஅளித்தது கேரளம்மட்டுமே: நிதின்கட்கரி

புதுடெல்லி, ஏப்.4:

தேசிய நெடுஞ்சாலை 66 மேம்பாட்டில் முதலீடு செய்த ஒரே மாநிலம் கேரளம் என்று ஒன்றிய தரைவழி போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. மாநிலங்களவையில் ஏ.ஏ. ரஹீமின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் நிதின் கட்கரி, ஐந்து மாநிலங்கள் வழியாக செல்லும் தேசிய நெடுஞ்சாலை 66 மேம்பாட்டிற்கான நிலம் கையகப்படுத்தும் செலவில் 25 சதவிகிதத்தை கேரளம் ஏற்றுக்கொண்டதாகக் கூறினார்.

கேரளாவின் முதலீட்டிற்குப் பதிலாக இழப்பீடு வழங்குவது பரிசீலனையில் இல்லை. 2019-25 ஆம் ஆண்டில், என்எச் 66 இல் உள்ள சுங்கச்சாவடிகளில் இருந்து ரூ.1449.56 கோடி பெறப்பட்டது.

கேரளத்துடன் சுங்க வசூலைப் பகிர்ந்து கொள்வதும் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் தெரிவித்தார். கேரள அரசின் சிறப்பான செயல்பாட்டினால் மாநிலத்தில் தேசிய நெடுஞ்சாலைகளின் மேம்பாடு சாத்தியமானது என்பதை அமைச்சரின் பதில் தெளிவுபடுத்துகிறது என்று ஏ.ஏ. ரஹீம் கூறினார்.

# மேற்கு வங்கத்தில் 25,000 ஆசிரியர்கள் பணி நீக்கத்தை உறுதி செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவு



புதுடெல்லி, ஏப்.4:

கடந்த 2016-ம் ஆண்டு மேற்கு வங்க ஆசிரியர் பணி நியமனம் சட்டவிரோதமாக நடைபெற்றிருப்பதாகக் கூறி கொல்கத்தா உயர் நீதிமன்றம் 25,753 பேரின் பணி நியமனத்தை ரத்து செய்த உத்தரவை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்து வந்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா மற்றும் நீதிபதி பி.வி. சஞ்சய் குமார் அடங்கிய அமர்வு முறைகேடான முறையில் ஆசிரியர் நியமனங்கள் நடந்திருப்பதால் இது மோசடிக்குச் சமம் என்று தெரிவித்தது. நீதிபதிகள் கூறுகையில், "முறைகேடாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதால், அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்ற கொல்கத்தா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையிடுவதற்கு சரியான காரணம் எதையும் நாங்கள் இதில் காணவில்லை. பணியிடங்கள் முறைகேடாக நிரப்பப்பட்டிருப்பதால் இது ஒரு மோசடியாகும்." என்று தெரிவித்தது.

என்றாலும் ஏற்கெனவே பணி நியமனம் பெற்றவர்கள் இதுவரை வாங்கிய ஊதியத்தைத் திருப்பித் தரவேண்டியது இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

முன்னதாக கடந்த ஆண்டு மே 7-ம் தேதி இந்த வழக்கில் கொல்கத்தா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை நிறுத்தி வைத்திருந்த உச்ச நீதிமன்றம், இந்த விவகாரத்தில் மத்திய புலனாய்வு முகமை அதன் விசாரணையைத் தொடர்வதற்கு அனுமதி அளித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

வழக்கு பின்னணி: மேற்கு வங்கத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கடந்த 2016-ம் ஆண்டில் மாநில பள்ளிக் கல்வித் துறை மூலம் ஆசிரியர் பணி நியமனம் நடைபெற்றது. மொத்தமுள்ள 24 ஆயிரத்து 640 ஆசிரியர் பணியிடங்களுக்கு 23 லட்சம் பேர் தேர்வு எழுதினர். இதில் 25 ஆயிரத்து 753 பேருக்கு ஆசிரியர் பணிக்கான நியமன ஆணையை மாநில அரசு வழங்கியது.

இந்த ஆசிரியர் பணி நியமனத்தில் ஊழல் நடைபெற்றிருப்பதாகவும், பலர் லஞ்சம் கொடுத்து ஆசிரியர் வேலை பெற்றதாகவும் கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22-ல் தீர்ப்பு வழங்கிய கொல்கத்தா உயர் நீதிமன்றம், 25 ஆயிரத்து 753 பேரின் பணி நியமனத்தை ரத்து செய்து உத்தரவிட்டிருந்தது.

இந்த ஊழல் வழக்கில், முன்னாள் கல்வி அமைச்சர் பார்த்தா சாட்டர்ஜி, திரிணமூல் கட்சி எம்எல்ஏகள் மானிக் பட்டாச்சாரியா மற்றும் ஜிபான் கிருஷ்ண சாஹா உள்ளிட்டோர் ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ரூ.34 கோடி வரி செலுத்த நோட்டீஸ்: உ.பி. தூய்மை பணியாளருக்கு பேரதிர்ச்சி

லக்னோ, ஏப்.4:

உத்தர பிரதேச மாநிலம் ஆக்ராவைச் சேர்ந்த தூய்மை பணியாளர் ஒருவருக்கு வருமான வரி துறை ரூ.34 கோடி வரி செலுத்தக் கோரி நோட்டீஸ் அனுப்பிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவரது மாத வருமானம் 15 ஆயிரம் ரூபாய் மட்டுமே.

சொற்ப வருமானம் ஈட்டும் தொழிலாளர்களுக்கு வருமான வரித் துறை கோடிக் கணக்கில் வரி செலுத்தக் கோரி தவறுதலாக நோட்டீஸ் அனுப்பி பேரதிர்ச்சி கொடுக்கும் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன.

அந்த வகையில் அண்மையில், உத்தர பிரதேசத்தில் உள்ள அலிகார்க்கில் ஜூஸ் கடை நடத்தி வரும் நபருக்கு ரூ.7.5 கோடி வரி செலுத்த கோரி வருமான வரி துறை நோட்டீஸ் அனுப்பியது பேசுபொருளானது. இந்த நிலையில், ஆக்ராவைச் சேர்ந்த கரன் குமார் என்பவருக்கும் ரூ.34 கோடி வரி செலுத்த கோரி வருமான வரி துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது ஊடகங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

தூய்மைப் பணியாளரான இவர் மாதம் 15 ஆயிரம் மட்டுமே சம்பாதித்து வருகிறார். மார்ச் 22-ம் தேதியிடப்பட்ட அந்த வருமான வரி துறை நோட்டீஸில் " கரன் குமாரின் வருமான வரி தாக்கல் படிவங்களை ஆய்வு செய்ததில் அவர் 2019-20-ல் 33 கோடியே 85 லட்சத்து 85 ஆயிரத்து 368 ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளார். எனவே, வருமான வரியாக அவர் ரூ.34 கோடி செலுத்த வேண்டும்" என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து கரண்குமார் கூறுகையில், " ஆக்ராவின் கைர் பகுதியில் உள்ள எஸ்பிஐ வங்கி கிளையில் தூய்மைப் பணியாளராக 2021 முதல் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து வருகிறேன். எனது மாத சம்பளம் 15 ஆயிரம் ரூபாய் மட்டுமே. படிக்காதவன் என்பதால் எனக்கு வந்த நோட்டீஸ் குறித்து எதுவும் தெரியாது. ஆனால், மற்றொருவர் மூலமாக அதுகுறித்து அறிந்து கொண்டபோது எனது தலையில் பேரிடி விழுந்தது போல் இருந்தது. நோட்டீஸ் குறித்து சந்தாஸ் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளேன்" என்றார். இவரின் பான் கார்டை பயன்படுத்தி ஒரு சிலர் மோசடியில் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# உ.பி.யில் வீடு இடிக்கப்பட்டபோது கையில் புத்தகத்துடன் ஓடிய சிறுமி: உச்ச நீதிமன்றத்தின் கவனம் ஈர்த்தார்

புதுடெல்லி, ஏப்.4:

உத்தரபிரதேச மாநிலம் அம்பேத்கர் நகரில் கடந்த மார்ச் 21-ம் தேதி சட்டவிரோத ஆக்கிரமிப்புகளை அதிகாரிகள் அகற்றினர். அப்போது ஒரு குடிசைக்கு அருகில் இருந்த கொட்டகை தீப்பற்றியதை தொடர்ந்து, அனன்யா யாதவ் என்ற 8 வயது சிறுமி தனது தாயிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு குடிசைக்குள் ஓடினாள். பிறகு இந்தி, ஆங்கிலம் மற்றும் கணிதப் புத்தகங்களை கொண்ட ஸ்கூல் பையை எடுத்துக்கொண்டு வெளியே ஓடி வந்தார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகியது.

இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் ஏ.எஸ்.ஓகா, உஜ்ஜல் புயான் அமர்வு நேற்று ஒரு வழக்கு விசாரணையில் இந்த வீடியோ ஒவ்வொருவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதாக தெரிவித்தது. இதுகுறித்து நீதிபதி புயான் கூறுகையில், "சமீபத்தில் புல்டோசர்களால் சிறிய குடிசைகள் இடிக்கப்படும் ஒரு வீடியோ வெளியாகியுள்ளது. இடிக்கப்பட்ட ஒரு குடிசையிலிருந்து ஒரு சிறுமி கையில் புத்தகங்களுடன் ஓடி வருவது ஒவ்வொருவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது"

அனன்யா யாதவ் அப்பகுதியில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் 1-ம் வகுப்பு படிக்கிறார். அனன்யா கூறுகையில், "எனது புத்தகங்களும் பையும் எரிந்துவிடுமோ என்று பயந்தேன். உடனே ஓடிச் சென்று அதை எடுத்துக் கொண்டு என் அம்மாவிடம் திரும்பினேன்" என்றார்.

# கைதிகளின் உரிமைகளை மதிப்பதில் முன்னணியில் கேரள காவல்துறை: ஆய்வு அறிக்கையில் தகவல்

புதுடெல்லி, ஏப்.4:

கேரளாவும் கேரள காவல்துறையும் பெருமைப்படத்தக்க மற்றொரு சாதனையைப் படைத்துள்ளன. கைது செய்யப்படுபவர்களின் உரிமைகள் குறித்து கேரள காவல்துறையினர் மிகவும் அறிந்திருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. இந்தியாவில் உள்ள காவல்துறை அதிகாரிகளில் பெரும் பகுதியினர் தங்கள் கடமைகளைச் செய்யும்போது சித்திரவதையைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்துகிறார்கள் என்பதையும் இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் காட்டுகின்றன.



இந்தியாவில் காவல் துறையின் நிலை குறித்த அறிக்கையில் (சிஎஸ்டிஎஸ்) இந்தத் தகவல் இடம்பெற்றுள்ளது. கேரள காவல்துறை குற்றவாளிகளுக்கு எதிரான கும்பல் கொலைகளை ஒரு சதவிகிதம் கூட ஆதரிக்கவில்லை என்றும் சிஎஸ்டிஎஸ் அறிக்கை கூறியுள்ளது.

ஜார்க்கண்ட் மற்றும் குஜராத் மாநிலங்களில் உள்ள காவல்துறையினர் கைது செய்யப்பட்டவர்களின் உரிமைகளை மதிக்கவில்லை. குற்றவாளிகளுக்கு எதிரான கும்பல் கொலைகளுக்கு ஆதரவான நிலை குஜராத் (57%), ஆந்திரா (51%), மகாராஷ்டிரா (50%), தமிழ்நாடு (46%) ஒடிசா (42%) ஆகிய மாநிலங்களில் அதிகமாக உள்ளது.

இது தொடர்பான தற்போதைய நிலைமை பின்வருமாறு:

கேரளம் (0%), பஞ்சாப் (3%), உத்தரபிரதேசம் (4%) தில்லி (10%).

இந்தத் தகவல், தில்லியைச் சேர்ந்த சென்டர் பார் தி ஸ்டடி ஆப் டெவலப்பிங் சொசைட்டீஸ் (சிஎஸ்டிஎஸ்) 17 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள பல்வேறு பதவிகளில் உள்ள 8276 காவல்துறை அதிகாரிகளிடம் நடத்திய ஆய்வின் அடிப்படையில் இந்த அறிக்கை அமைந்துள்ளது.

## விளையாட்டு செய்திகள்

# '25 ரன்கள் வரை குறைவாக எடுத்துவிட்டோம்' - ரிஷப் பந்த்

புதுடெல்லி, ஏப்.4:

பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான ஐபிஎல் லீக் போட்டியில் 25 ரன்கள் வரை குறைவாக எடுத்துவிட்டோம் என்று லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணியின் கேப்டன் ரிஷப் பந்த் தெரிவித்துள்ளார்.



பஞ்சாப், லக்னோ அணிகளுக்கு இடையிலான இந்த ஆட்டம் நேற்று முன்தினம் லக்னோவில் நடைபெற்றது. இதில் முதலில் விளையாடிய லக்னோ அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 171 ரன்கள் எடுத்தது.

பின்னர் விளையாடிய பஞ்சாப் அணி 16.2 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 177 ரன்கள் எடுத்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பிரியன்ஷ் ஆர்யா 8, பிரப்சிம்ரன் சிங் 69, கேப்டன் ஸ்ரேயஸ் ஐயர் 52, நேஹல் வதேரா 43 ரன்கள் எடுத்து அணிக்கு வெற்றி தேடித் தந்தனர். லக்னோ அணி இதுவரை 3 போட்டிகளில் விளையாடி ஒரு வெற்றி, 2 தோல்விகளைப் பெற்றுள்ளது. தோல்வி குறித்து லக்னோ அணியின் கேப்டன் ரிஷப் பந்த் கூறியதாவது:

இந்த லீக் ஆட்டத்தில் நாங்கள் எடுத்த ஸ்கோர் போதுமானதாக இல்லை. முதலில் பேட்டிங் செய்த நாங்கள் 20 முதல் 25 ரன்கள் வரை குறைவாக எடுத்துவிட்டோம் என்று நினைக்கிறேன். எங்களுடைய சொந்த மைதானத்தில் தோல்வி கண்டது வருத்தம் அளிக்கிறது. உள்ளூர் ஆடுகளத்தின் தன்மையை நாங்கள் மதிப்பீடு செய்து வருகிறோம்.

தொடக்கத்தில் விக்கெட்களை விரைவாக இழக்கும்போது பெரிய அளவிலான ஸ்கோர் எடுப்பது சிரமமான விஷயம்தான். ஆனால் எங்கள் அணியின் ஒவ்வொரு வீரரும் அதிரடியாக விளையாடி ஆட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முயன்றனர். ஆனால், துரதிருஷ்டவசமாக ஆட்டத்தை வெல்ல முடியவில்லை. இந்த ஆட்டத்தில் இருந்து நாங்கள் நிறைய பாடங்களைக் கற்றுக் கொண்டோம். இனி வரவிருக்கும் ஆட்டங்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்தி முன்னேற விரும்புகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மேற்கு இந்தியத் தீவுகள் அணியுடன் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் இந்திய அணி

புதுடெல்லி, ஏப்.4:

இந்த ஆண்டில் மேற்கு இந்தியத் தீவுகள் அணியுடன் 2 டெஸ்ட் போட்டிகளில் இந்தியா விளையாடுகிறது.

நடப்பாண்டில் இந்திய கிரிக்கெட் அணி பங்கேற்கும் போட்டிகள் தொடர்பான விவரங்களை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) நேற்று அறிவித்தது. அதன்படி அக்டோபரில் இந்தியாவுக்கு வரும் மேற்கு இந்தியத் தீவுகள் அணி, இந்தியாவுடன் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது. முதல் டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் அக். 2-ம் தேதியும், 2-வது போட்டி கொல்கத்தாவில் அக்டோபர் 10-ம் தேதியும் தொடங்க உள்ளது. இதைத் தொடர்ந்து, தென் ஆப்பிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்ய உள்ளது.

இந்தியா, தென் ஆப்பிரிக்க அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி டெல்லியில் நவம்பர் 14-ம் தேதியும், 2-வது போட்டி குவாஹாட்டியில் நவம்பர் 22-ம் தேதியும் தொடங்க உள்ளது.

நவம்பர் 30-ம் தேதி, 3 ஆட்டங்கள் கொண்ட சர்வதேச ஒரு நாள் போட்டித் தொடர் தொடங்குகிறது. ராஞ்சியில் நவம்பர் 30-ம் தேதி முதல் ஆட்டமும், ராய்ப்பூரில் டிசம்பர் 3-ம் தேதி 2-வது ஆட்டமும், டிசம்பர் 6-ம் தேதி விசாகப்பட்டினத்தில் 3-வது ஆட்டமும் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து 5 சர்வதேச டி20 ஆட்டங்களில் இரு அணிகளும் பங்கேற்கவுள்ளன.

முதலாவது டி20 போட்டி டிச.9-ம் தேதி கட்டாக்கிலும், 2-வது டி20 போட்டி டிசம்பர் 11-ல் புதிய சண்டிகரிலும், 3-வது டி20 போட்டி டிசம்பர் 14-ம் தேதி தரம்சாலாவிலும், 4-வது டி20 போட்டி டிசம்பர் 17-ம் தேதி லக்னோவிலும், 5-வது டி20 போட்டி டிசம்பர் 19-ம் தேதி அகமதாபாத்திலும் நடைபெறவுள்ளது.

# தேசிய வில்வித்தை: தமிழக வீராங்கனைக்கு 2 பதக்கம்

சென்னை, ஏப்.4:

தேசிய சப்-ஜூனியர் வில்வித்தை போட்டியில் தமிழக வீராங்கனை எஸ்.எஸ். மதுநிஷா 2 பதக்கம் வென்றார்.

14-வது தேசிய சப்-ஜூனியர் வில்வித்தைப் போட்டி ஆந்திர மாநிலம் குண்டூரில் கடந்த மாதம் 20-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை நடைபெற்றது. இந்தப் போட்டியில் 10 வயதான மதுநிஷா, 15 வயதுக்குட்பட்டோர் பிரிவிலும், 13 வயதுக்குட்பட்டோர் பிரிவிலும் 2-வது இடம் பிடித்து 2 வெள்ளிப் பதக்கங்களை கைப்பற்றினார்.

# ட்ரம்ப் வரி விதிப்பு அறிவிப்பால் இந்தியாவில் எந்தெந்த துறைகளுக்கு பெரும் பாதிப்பு?

**வாஷிங்டன், ஏப்.4:**

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் உலக நாடுகளின் மீது 26 சதவீதம் பரஸ்பர வரி விதிப்பை அறிமுகம் செய்துள்ள நிலையில், இந்தியாவில் எந்தெந்த துறைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என க்ளோபல் டிரேட் ரிசேர்ச் இனிஷியேடிவ் என்ற அமைப்பு கணித்துள்ளது.அதிகபட்சமாக கம்போடியா 49%, வியட்நாம் 46%, இலங்கை 44%, சீனா 34%, இந்தியா 26%, ஜப்பான் 24%, ஐரோப்பிய யூனியன் 20% மீது வரி விதிப்பு அமலாகிறது.

க்ளோபல் டிரேட் ரிசேர்ச் இனிஷியேடிவ் அமைப்பின் கணிப்பின்படி, இந்தியாவில் மீன் இறக்குமதி, இறைச்சி, பதப்படுத்தப்பட்ட கடல் உணவுத் துறை ஆகியவை பெருமளவில் பாதிக்கப்படும்.தொழில் துறையில் மருந்துகள் துறை, நகை, எலக்ட்ரானிக் பொருட்கள் துறை பாதிக்கக்கூடும். ரசாயனத் துறை, மருத்துவ உபகரணங்கள், எலக்ட்ரிக்கல் மற்றும் மெஷினரி துறைகள் கடுமையாக பாதிக்கப்படும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

தானியங்கள், காய்கறிகள், பழங்கள், வாசனைப் பொருட்கள், பால், நெய், வெண்ணெய், பால் பவுடன், சமையல் எண்ணெய், மதுவகைகள், ஒயின், ஸ்பிரிட் ஆகியனவற்றை இந்தியா ஏற்றுமதி செய்யும்போது இறக்குமதி வரி வித்தியாசங்களால் கூடுதல் சுங்க வரி சுமையும் சேரும் என்று கணித்துள்ளது.

# நான் வீழ்வேன் என நினைத்தாயோ?... சீக்கிரமா ஒரு முடிவுக்கு வாங்க... நித்தியானந்தா ரீஎன்ட்ரி!




நித்தியானந்தா கைலாசாவில் வசித்து வருவதாக கூறப்பட்டு வரும் நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு இறந்துவிட்டதாக அவருடைய சகோதரியின் மகன் சுந்தரேஸ்வரன் வீடியோ மூலம் தெரிவித்திருந்தார். அந்த வீடியோவில் இந்து தர்மத்தை காப்பதற்காக நித்தியானந்தா உயிர் தியாகம் செய்ததாக தெரிவித்திருந்தார். இதனையடுத்து, நித்தியானந்தாவின் பல்லாயிரம் கோடி சொத்துக்களை அபகரிக்க முயற்சி நடைபெறுகிறதா? என பக்தர்களுக்கு குழப்பம் ஏற்பட்டது. கைலாசாவில் வசித்துவரும் நித்தியானந்தா, உயிரிழந்து விட்டதாக செய்திகள் சமூக வலைதளங்களில் வேகமாக பரவிய நிலையில், கைலாசா இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி, நித்தியானந்தா கைலாசாவின் எக்ஸ் தளத்தில் வீடியோ வெளியிட்ட என்ட்ரி கொடுத்துள்ளார் . அந்த வீடியோவில் நான் வீழ்வேன் என நினைத்தாயோ? என்று தலைப்பிட்டு, "குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் உயிரோடு இருப்பேன். இந்து எதிரிகள், வெறுப்பாளர்கள் என்னுடைய நேரத்தை வீணடித்து வருகின்றனர். "மகனுங்களா.. நான் 126 வயதில்தான் பேக் பண்ணிட்டு போலாம்னு இருந்தேன். இப்படியே பண்ணா என் வாழ்நாளை 1,000 வருஷமாக்கிடுவேன் பாத்துக்கோங்க"என பேசியுள்ளார்.

மற்றொரு வீடியோவில், நான் உயிரோடுதான் இருக்கேனா, இல்லையா? ஒரு முடிவுக்கு வாங்கப்பா, என் சந்தேகத்தை தீர்த்து வையுங்க. நான் இறந்துவிட்டதாக சிலர் வீடியோ வெளியிட்டுள்ளனர். 3 மாதங்களில் 4,000 வீடியோக்களை வெளியிட்டுள்ளனர். அதை நான் எப்போது பார்த்து முடிப்பது? இப்போது எனக்கே சந்தேகமா தான் இருக்கு உயிரோடு இருக்கேனா இல்லையா என்று... எதாவது ஒரு முடிவுக்கு வாங்க" என குறிப்பிட்டுள்ளார்.

# 9 ரிக்டரில் கடுமையான நிலநடுக்கம் ஏற்படும்; 3 லட்சம் பேருக்கு ஆபத்து: ஜப்பான் அரசு எச்சரிக்கை



**டோக்கியோ, ஏப்.4:**

*9 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்படும் என்றும் அதன் மூலம் 3 லட்சம் பேர் வரையில் உயிர் இழக்க வாய்ப்புள்ளது என்றும் ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.*

*மியான்மர் மற்றும் அதன் அண்டை நாடான தாய்லாந்தில் கடந்த வெள்ளிக்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. 7.7 ரிக்டர் அளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்தனர். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். மியான்மரில் பேரழிவை ஏற்படுத்திய நிலநடுக்கத்திற்குப் பிறகு ஜப்பானுக்கு மெகா நிலநடுக்கம் ஏற்பட 80 சதவீதம் வாய்ப்புள்ளது என அந்நாட்டு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.*


*9 ரிக்டரில் நிலநடுக்கம்*

*உலகின் நிலநடுக்கங்களை அதிகம் சந்திக்கும் நாடுகளில் ஒன்று ஜப்பான். பசிபிக் தீவிர வளையம் (Pacific Ring of Fire) எனப்படும் பூகம்பத்தகட்டு சந்திப்பு பகுதியில் ஜப்பான் அமைந்திருப்பதே காரணம். ஜப்பானில் உள்ள நாங்காய் பள்ளத்தாக்கு (Nankai Trough) நிலநடுக்கத்தின் மையமாக உள்ளது. இது இரட்டை பூகம்பத் தகடுகள் சந்திக்கும் இடமாக உள்ளது.*

*இங்கு பிலிப்பைன் கடல் தட்டும், யூரேசிய தட்டும் மோதிக்கொள்கின்றன. இதன் காரணமாக பூமியின் உள் அழுத்தம் அதிகரித்து, ஒரு மிகப்பெரிய நிலநடுக்கம் உருவாகும் அபாயம் உள்ளது. சராசரியாக ஒவ்வொரு 100 முதல் 150 ஆண்டுகளுக்கு இடையே இந்தப் பகுதி பெரிய பூகம்பங்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக வரலாறு சொல்கிறது.*

*ஜப்பான் அரசு அண்மையில் வெளியிட்ட எச்சரிக்கையின் படி, நாங்காய் பள்ளத்தாக்கு (Nankai Trough) பகுதியில் 9.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்படும் நிலை உருவாகி இருக்கிறது. இதனால் உண்டாகும் சுனாமி அலைகள் ஜப்பானின் கடற்கரை நகரங்களை தாக்கும். இது 3 லட்சம் இறப்புகளை உண்டாக்கும். 1.5 டிரில்லியனுக்கும் அதிகமான பொருளாதார இழப்புகள் ஏற்படக்கூடும் என ஜப்பான் அரசு எச்சரித்துள்ளது. இந்த நிலநடுக்கம் எப்போது நடக்கும் என்பது குறித்த தெளிவான தகவல் இல்லை.*

# தங்கம் விலை மூன்றில் ஒரு பங்கு குறையும்... அமெரிக்க பங்குச் சந்தை நிபுணர் கருத்து!



**வாஷிங்டன், ஏப்.4:**

*சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை தினம் தினம் புதிய உச்சங்களை தொட்டு வருகிறது. இதனால் நகைப்பிரியர்கள் இல்லத்தரசிகள் முதலீட்டாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இந்நிலையில் அமெரிக்காவை சேர்ந்த ஜான் மில்ஸ் என்ற பங்குச்சந்தை நிபுணர் தங்கத்தின் விலை அதிரடியாக குறையக் கூடும் என கணித்துள்ளார்.*


*கடந்த சில மாதங்களாக தங்கத்தின் விலை மிகக் கடுமையாக உயர்ந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் தங்கத்தின் மதிப்பு உயர்ந்துகொண்டே செல்வதால் அதன் மீதான ஈர்ப்பு அதிகரித்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கம் சவரன் ரூ.68,080க்கும், கிராம் ரூ.8,510க்கும் விற்பனை செய்யப்படுகிறது.*

*இந்நிலையில், உலக அளவில் தங்கத்தின் விலை அதிரடியாக குறையக் கூடும் அமெரிக்காவை சேர்ந்த John Mills என்ற பங்குச் சந்தை நிபுணர் கூறியுள்ளார். இவரின் கணிப்புப்படி தற்போது உச்சத்தில் இருக்கும் தங்கத்தின் விலை சட்டென்று அதிரடியாக 38% வீழ்ச்சி அடையும் என கூறப்பட்டுள்ளது. ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு விலை குறைய வாய்ப்பு இருப்பதாகவும் கூறியிருப்பதால் இந்த கணிப்பு உலகளவில் முதலீட்டாளர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

# புதிய வரிகளை உடனடியாக நீக்க அமெரிக்காவுக்கு சீனா வலியுறுத்தல்; பதிலடி கொடுக்கவும் சபதம்!

**பெய்ஜிங், ஏப்.4:**

அமெரிக்கா சமீபத்தில் விதித்திருக்கும் வரிகளை உடனடியாக திரும்பப்பெற வேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது. மேலும் தனது நாட்டின் சொந்த நலன்களைப் பாதுகாக்க பதிலடி கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. அமெரிக்காவுடன் வர்த்தக உறவில் இருக்கும் உலக நாடுகளுக்கு கூடுதல் வரியை அதிபர் ட்ரம்ப் விதித்திருக்கும் நிலையில் சீனா இவ்வாறு தெரிவித்துள்ளது.




இதுகுறித்து சீன வர்த்தகத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அமெரிக்காவின் இந்த நடவடிக்கை பல தசாப்தங்களாக பேச்சுவார்த்தைகளின் மூலம் எட்டப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்களின் சமநிலையையும், சர்வதேச வர்த்தகத்தின் மூலம் நீண்ட காலமாக அமெரிக்கா பயனடைந்து வந்துள்ளது என்பதையும் புறக்கணிக்கிறது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை சீனா உறுதியாக எதிர்க்கிறது. மேலும் சீனா தனது சொந்த நலன்களை பாதுகாக்க எதிர்நடவடிக்கையில் ஈடுபடும்." என்று தெரிவித்துள்ளது. உலக நாடுகளின் மீது பரஸ்பர வரி விதிப்பை அறிமுகம் செய்துள்ளார் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப். இதில் அதிகபட்சமாக கம்போடியா 49 சதவீதம், வியட்நாம் 46 சதவீதம், இலங்கை 44 சதவீதம், சீனா 34 சதவீதம், இந்தியா 26 சதவீதம், ஜப்பான் 24 சதவீதம், ஐரோப்பிய யூனியன் 20 சதவீதம் என வரி விதிப்பை ஏப்ரல் 9-ம் தேதி முதல் எதிர்கொள்ள இருக்கின்றன. இந்த புதிய வரி விதிப்புகளை நேற்று (புதன்கிழமை) ட்ரம்ப் அறிவித்தார். இந்தாண்டு தொடக்கத்தில் அறிவித்த 20 சதவீத வரி அறிவிப்புடன் புதிய வரிகள் 54 சதவீதமாக இருக்கிறது. இது அமெரிக்க தேர்தல் பிரச்சாரத்தின் போது 60 சதவீதம் வரிவிதிக்கப்படும் என்ற அச்சுறுத்தலுக்கு மிகவும் அண்மையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் 9-ம் தேதி இந்த புதிய வரிகள் அமலுக்கு வருவதற்கு முன்பாக மற்ற அனைத்து நாடுகளைப் போல சீனாவும், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு 10 சதவீதம் அடிப்படை வரியை எதிர்கொள்ள வேண்டியது இருக்கும். இது புதிய வரிவிதிப்பான 34 சதவீதத்தின் ஒரு பகுதியாகும். அதேபோல், சீனா மற்றும் ஹாங்காங்கில் இருந்து குறைந்த மதிப்புள்ள பேக்கேஜ்கள் அமெரிக்காவுக்கு வரி இல்லாமல் நுழைய அனுமதிக்கும் டி மினிமிஸ் என்ற வர்த்தக சலுகையை நிறுத்தும் நிர்வாக ஒப்பந்தத்திலும் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

## ஒரு பத்தி செய்திகள்

# எரிவாயுக்குழாய் வெடிப்பு மலேசியாவில் 112 பேர் பலி



மலேசிய தலைநகர் கோலாலம்பூரின் புறநகர் பகுதியில் உள்ள தேசிய எண்ணெய் நிறுவனத்தின் எரிவாயு எடுத்து செல்லும் குழாய் ஒன்று செவ்வாயன்று வெடித்தது. இதனால் சுமார் 500 மீ நீளமுள்ள குழாயில் ஏற்பட்ட தீ 200 அடி உயரத்துக்கு பயங்கரமாக எரிந்தது. இதனால் அந்த பகுதி முழுவதும் வெப்பக்காற்று வீசியதுடன், கரும்புகை சூழ்ந்தது. இந்த தீ விபத்தில் 49க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. 112 பேர் உடல் கருகி பலியாகியுள்ளனர் என தெரியவந்துள்ளது.

# மூன்றாம் முறை ஜனாதிபதியாவேன் டிரம்ப் திடீர் அறிவிப்பு



டிரம்ப் மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ளதாக தெரிவித்துள்ளார். இதனை தான் கேலிக்காக கூறவில்லை எனவும் வலியுறுத்தியுள்ளார். பல மாகாணங்களில் 70 சதவீதத்திற்கும் மேல் வாக்குகள் பெற்றதை குறிப்பிட்டு பெரும்பாலான மக்கள் தன்னை மீண்டும் ஜனாதிபதியாக காண விருப்புகிறார்கள். அமெரிக்க அரசமைப்பின்படி ஒருவர் இரு முறைக்கு மேல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என்றாலும் அதற்கு சில வழிகள் உள்ளது எனவும் கூறியுள்ளார்.

# மருத்துவர்களை படுகொலை செய்த இஸ்ரேல் ராணுவம்



இஸ்ரேல் ராணுவம் சுமார் 15 மருத்துவர்கள் மற்றும் அவசரகால உதவியாளர்களை காசாவில் படுகொலை செய்துள்ளது. கடந்த ஒரு ஆண்டாக நடைபெற்று வரும் தாக்குதலில் காசாவில் உள்ள சுகாதர நிலையங்களை இஸ்ரேல் அழித்துவிட்டது. இதனால் காசாவில் சுகாதார நெருக்கடி நிலவி வருகின்றது. போர் துவங்கியதில் இருந்தே இஸ்ரேல் சர்வதேச சட்டங்களை மீறி சுகாதாரப் பணியாளர்களை படுகொலை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# மியான்மர் பலி எண்ணிக்கை 3,600ஐ கடந்தது



மியான்மர் நிலநடுக்கத்தால் பலியானவர்களின் எண்ணிக்கை 3,643 ஆக அதிகரித்துள்ளது என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்தவாரம் வெள்ளியன்று மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கம் அந்நாட்டின் மிக மோசமான இயற்கை பேரழிவாக மாறியுள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்டு 5 நாட்களுக்கு மேல் ஆகியுள்ள நிலையில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை உயிருடன் மீட்பதற்கான சாத்தியக்கூறு மிக குறைவு எனவும் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.